
ராணி முத்து
இந்திரா சௌந்தர்ராஜன்
ரூ. 6
உயிர்



# பழங்களின் தாயகம்

1. நெல்லி, எலுமிச்சை, பலா – இந்தியா
2. சாத்துக்குடி – சீனா
3. இலந்தை – மத்திய ஆசியா
4. சீதா – அமெரிக்கா
5. வாழை, மா – தென்கிழக்கு ஆசியா
6. திராட்சை – காஸ்பியன்
7. அன்னாசி, முந்திரி – பிரேசில்
8. கொய்யா – மத்திய அமெரிக்கா
9. மாதுளை – ஈரான்
10. பப்பாளி, சப்போட்டா – மெக்சிகோ.

– சிவ.ராமலிங்கம்,
ஆத்தூர்.

## ...தன் முதலில்...

...சுவடியில் இருந்த திருக்குறளை, 1812–ம் ஆண்டு ...சம் என்பவர் முதலில் அச்சிட்டார்.
...முதலாக 'நாவலர்' பட்டம் பெற்றவர் சோமசுந்தர

– த.சீ.பாலு, சென்னை.



# இந்திரா சௌந்தர்ராஜன்

# உயிர்



**1**

நமது தேசத்தில் எவ்வளவோ சாஸ்திர, சம்பிரதாயங்கள் உள்ளன. உலகில் வேறு எங்கும் எவரிடமும் காணப்படாத அபூர்வ விஷயங்களும் நம்மிடம் மட்டுமே காணப்படுகின்றன. நமது சாஸ்திரங்களில் எண் கணிதம்,

சாமுத்ரிகா லட்சணம், கைரேகை சாஸ்திரம், நாடி ஜோதிடம், மச்ச சாஸ்திரம், பிரசன்ன ஜாதகம் என்று பல உள்ளன.

இவைகளில் சிற்ப சாஸ்திரம் என்று ஒன்று தனியாக உள்ளது. இது அபூர்வமான கலையாகும். இந்தக் கலைக்கு தேவலோகத்தைச் சேர்ந்த ...யன் தலைவன் ஆவான். இவன் புதிய நகரங்களை நிர்மாணிப்பதில் ... சிறந்தவன். ராவணன், இவனைக் கொண்டே இலங்கை நகரை இ... ராபுரிக்கு இணையாக வடிவமைத்துக்கொண்டான் என்பார்கள்!

**நா**கநாத பிள்ளை... ஒரு தலைசிறந்த மிருதங்க வித்வான். இந்தியாவின் முதல் பத்து ...ருதங்க வாத்தியக் கலைஞர்களில் ஒருவர். வயது அறுபது ஆ... வாத்தியக் கருவியோடு மேடையில் அமர்ந்துவிட்டால் ஆ... சப்த சாகரத்தையே உருவாக்கிவிடுவார். அவர் வரையில் மி...ங்கம்தான் இந்த உலகின் ஒரே பொக்கிஷம். அவரிடம் உள்ள பத்து ...ல்கள்தான் அந்தப் பொக்கிஷத்தைப் பொத்திப் பொத்திப் பாது...க்கும் காவல்கள்.

அவரது விரலில் பச்சை மரகதக்கல் மோதிரம் ஒன்று வெகு பிரசித்தம். அவர் மிருதங்கம் வாசிக்கும்போது அந்த மோதிரம் ஒளிக் கூத்தாடும். ஒரு இசை நிகழ்ச்சியில் அவரது வாசிப்பில் மயங்கிய ஒரு கோடீஸ்வரர், தனது கையில் இருந்து அந்த மோதிரத்தை கழற்றி, நாகநாதன் பிள்ளைக்குப் போட்டுவிட்டார்.

அந்த மோதிரம் வந்தவேளை, ஒரு அற்புதமான அமிர்த நாழிகை நேரம்போலும். அவருக்கு மத்திய அரசு 'பத்மஸ்ரீ' விருதை அறிவித்தது. அதை வாங்கச் சென்ற இடத்தில் ஜனாதிபதி மாளிகையிலும் வாசித்துக் காட்டும் ஒரு வாய்ப்பு. அங்கேயே... அப்போதே... அமெரிக்கா, கனடா போன்ற நாடுகளுக்கு அரசாங்க செலவிலேயே சென்றுவர வாய்ப்புகளும் கிடைத்துவிட்டன! இன்னமும் பத்தே நாட்கள்தான் இடையில் உள்ளன.

ஆனால்... ஆனால் 'பாவம் நாகநாதன்பிள்ளை' என்று எண்ணத் தோன்றுகிறது. யார் கண் பட்டதோ? இல்லை,



விதியின் விளையாட்டோ? இன்றைய அதிகாலைப் பொழுது அவரை முடமாக்கிவிட்டது.

எப்போதும் பயிற்சிக்காக நான்கு மணிக்கே எழுந்துவிடுவார் அவர். மொட்டை மாடியில் சிறு அறை கட்டியுள்ளார். உள்ளே போய் உட்கார்ந்துகொண்டு கதவை அடைத்துவிட்டால், இடி விழுந்தாலும் வெளியே கேட்காது. அந்த அறையில் ஸ்படிக லிங்கம் ஒன்று உள்ளது. அதுதான் நாகநாத பிள்ளையின் வாசிப்பை அனுபவித்துக் கேட்கும் ஒரே ரசிகர்.

இவரும் ஒரு கும்பிடு போட்டுவிட்டு மிருதங்கத்தைக் கையில் எடுத்து வாசிக்க ஆரம்பித்தால், தாள கதியில் ஏழிசையும் கும்மியடிக்கும். கர்நாடக சங்கீதம் தெரிந்தவர்களின் காதுகளில் தேன் வடியும். அப்படிப்பட்ட ஒரு அற்புதமான வாசிப்பு அவருடையது. இதேபோன்ற ஒரு வாசிப்பில் அன்றும் பிள்ளைவாள் மூழ்கியபோதுதான்– அந்த நடக்கக்கூடாத ஒன்று நடந்துவிட்டது. விசுக்கென்று வலது கையும், வலது காலும் ஒரு சேர இழுத்துக் கொண்டுவிட்டன. அப்படியே சுருண்டு தரையில் விழுந்துவிட்டார்.

விஷயம் வெளியே தெரிந்தால் நிச்சயம் விபரீதம்தான்... ஊரே திரண்டுவிடும். வாயால் பிரித்து மேய்ந்துவிடுவார்கள். பத்திரிகைகளிலும், டி.வி.க்களிலும், ஒரு பெரும் அனுதாபத்திற்கு உரிய காட்சிப் பொருள் ஆகிவிடுவார். மொட்டை மாடி அறைக்குள் வாசிக்கும்போதே வாதத்தால் இழுபட்டு சுருண்டு விழுந்துவிட்ட பிள்ளையை பல மணி நேரம் கழித்துதான் அவருடைய மனைவி லட்சுமியாலேயே நெருங்க முடிந்தது. அதுவும் கதவை உடைத்துக்கொண்டு!

உள்ளே மிருதங்கம் ஒரு பக்கமும், அவர் ஒரு பக்கமும் கிடந்ததைப் பார்த்து அவளுக்கு மயக்கமே வந்துவிட்டது.

சுதாரித்து, மாடியில் இருந்து அவரை கீழே தூக்கி வந்து படுக்கையில் போட்டுவிட்டு, டாக்டருக்கு போன் செய்யலாம். என்று முனைந்தபோது... நல்ல வேளையாக பிள்ளையின் நெருங்கிய நண்பரும், பிரபல தொழிலதிபருமான சிவப்பிரகாசம் வந்து சேர்ந்தார். அவரைப் பார்த்தவுடன்

லட்சுமி குமுறிவிட்டாள்.

"அண்ணே..."

"என்னம்மா... என்னாச்சு?"

"அவரை வந்து பாருங்கண்ணே... அய்யோ, நான் இப்ப என்ன பண்ணுவேன்?"

"பதறப்படாதே லட்சுமி. இரு, நான் என்னன்னு பார்க்கிறேன்."

சிவப்பிரகாசம் தன் நண்பரை நெருங்கிச் சென்று பார்த்தபோது அவருக்கு வாய் கோணிக் கொண்டுவிட்டது. கையையும், காலையும் கைப்பற்றிய வாதம் முகத்திலும் முன்னேறி– உச்சி மண்டையை நோக்கிப் பயணிப்பது தெரிந்துவிட்டது. அடுத்த நொடியே தன் செல்போனில் நரம்பியல் நிபுணர் டாக்டர் ராமையாவுக்கு ஒரு போன் போட்டு, மின்னல் வேகத்தில் வரும்படி கேட்டுக்கொண்டார்.

டாக்டர் ஒரு பக்கம் வந்து பரிசோதிக்கட்டும்!

அந்த இடைவேளையில் நாம் 'விடைதாங்கி' என்னும் கிராமத்து சிவாலயம் ஒன்றுக்குள் சென்று, அங்குள்ள சிவலிங்க தரிசனத்தை முடித்துவிட்டு வருவோமா?

## 2

சிற்ப சாஸ்திரத்தில் மயன் மட்டுமல்ல! பிரம்ம ஞானியான விஸ்வகர்மாவும் தலை சிறந்தவர். மூன்று பெரும் தெய்வங்களில் படைப்புத் தொழிலுக்கு அதிபதி பிரம்மா. அவரின் அம்சம்தான் விஸ்வகர்மா. கல்லிலும், மண்ணிலும் இவர் கண்ட கலை வண்ணங்களுக்கு ஒரு அளவே கிடையாது. சிற்ப சாஸ்திரத்துக்கான அளவுகளைக் கண்டறிந்து, அதை சூத்திரமாகவே உருவாக்கியவர், விஸ்வகர்மா– கல்லையும், மண்ணையும் கடந்து தேர்ந்த சாதி மரங்களைக் கண்டறிந்து– அதிலும் சிற்பங்களைச் செய்வதில் பல அரிய சூத்திரங்களை உருவாக்கியவர். இன்று இவரது சூத்திர



அடிப்படையில்தான் சிற்பக் கல்லூரிகள் பல இயங்கி வருகின்றன.

**விடைதாங்கி!**

அழகான கிராமம். எட்டுத் திக்கும் பசுமையான பச்சை வயல்கள். ஆங்காங்கே பெரிய அளவில் குளங்கள். அதில் ததும்பத் ததும்ப தண்ணீர். ஊருக்கு நடுவில் ஒரு ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்திருந்தது, அந்த சிவாலயம்.

இங்கே அந்த ஈசனின் திருப்பெயர் கயிலாச நாதன். அம்பிகைக்கு பார்வதவர்த்தினி என்று பெயர். ஊரில் எங்கிருந்து பார்த்தாலும் கோவில் கோபுரம் கண்ணுக்குத் தெரியும். அங்கே ஒரு கட்டுப்பாடு உண்டு. எக்காரணம் கொண்டும் கோவில் கோபுரத்தின் உயரத்திற்கு ஈடாக எந்த ஒரு கட்டடமும் கட்டப்படக் கூடாது. ஊரிலேயே எந்தக் காலத்திலும் கோவில் கோபுரம்தான் உயரமானதாக இருக்க வேண்டும்.

இந்தக் கட்டுப்பாட்டை ஒரு நிலக்கிழார் மீற விரும்பினார்.

"அட போங்கப்பா... கோபுரம் எண்பதடி உயரம் இருக்குது. அதுக்காக நாம தொண்ணூறு, நூறு அடி உயரம்னு கட்டடம் கட்டக் கூடாதுன்னா என்ன அர்த்தம்? நம்ம சாமி பெரிய சாமிதான். அவருக்கு மிஞ்சி எதுவும் கிடையாதுதான். அதுக்காக கோபுரத்தைவிட உயரமா கட்டடம் கட்டினா அது தப்புங்கறதெல்லாம் சும்மா..." என்று சொல்லிவிட்டு– தன் மாடி வீட்டை ஒரு 'காம்ப்ளெக்ஸ்' கட்டடமாகக் கட்ட திட்டம் போட்டார்.

ஆனால், அப்படித் திட்டமிட்ட மறுநாளே அவருக்கு நெஞ்சு வலி வந்து மனிதர் மண்ணுக்குள் போய்விட்டார். அவரின் முடிவு ஊரையே ஒரு உலுக்கு உலுக்கிவிட்டது.

அதன்பின், உயர்ந்த கட்டடம் கட்ட எவருக்கும் தைரியம் வரவில்லை.

இந்த ஊர் கயிலாச நாதர் கோவிலில் ஒரு ஆச்சரியமான விஷயம். இங்கே சுவாமியைவிட அவருக்கு எதிரில் மண்டியிட்டு அமர்ந்திருக்கும் நந்திகேஸ்வரருக்குத்தான் மதிப்பு அதிகம். அதனால்தான் இவரது பெயரில் இந்த ஊர் 'விடைதாங்கி' எனப்படுகிறது. 'விடை' என்றால் காளை மாடாகிய நந்தியைக்

குறிக்கும். இங்கே நந்திசுவரர்தான் பேசும் தெய்வம்.

அந்தப் பேசும் தெய்வத்திடம் ஒரு கோரிக்கை வைப்பதற்காக, அந்த ஊருக்குள் நுழைந்து கொண்டிருந்தாள் நடிகை நந்தனா!

அவள் ஒரு செப்புச்சிலை!

சுண்டிவிட்டால் ரத்தம் தெறிக்கும் தேகம்.

நடிகர், நடிகைகளுக்கே உடம்புதானே முக்கிய ஆதார விஷயம். அவள் வரையில் உடம்பு ஆதாரம் மட்டுமல்ல... பல பேரை மயக்கி சுருட்டிப் போடும் ஒரு போதை வஸ்துவும்கூட. அப்படிப்பட்ட மேனி அழகை தினமும் கண்ணாடி முன் நின்று பார்க்கும்போதெல்லாம் செம்மாந்து போவாள் நந்தனா! அதனால் இறுமாப்பும் அவளிடம் அதிகம் என்றுதான் சொல்ல வேண்டும்.

அவள் கடித்துவிட்டுத் தூக்கி எறியும் ஆப்பிள் ஒன்று அறுபதாயிரம் ரூபாய்க்கு ஏலம் போனது. அவளது கன்னத்தை ஒற்றி எடுத்த கைக்குட்டை, ஐம்பதாயிரம் ரூபாய்க்கு ஏலம் போயிற்று. தலையில் கூந்தலை அடக்கிக் கட்ட பயன்படுத்திய 'கிளிப்'புகள், கைகளில் அணிந்து அகற்றிய கண்ணாடி வளையல்கள் என்று அவள் மேனிபட்ட பொருட்கள் எல்லாமே தாறுமாறான விலையில் ஏலம் போயின.

அழகு தேவதை... பூலோக ரம்பை, தமிழ்த் திரையின் ஊர்வசி, எழிலரசி, தங்கச் சிலை என்று அவள் பெற்ற பட்டங்களுக்கு ஒரு அளவே இல்லை. அநேகமாக தமிழ் நடிகைகளில் கோடிகளில்–குறைவின்றி சம்பளம் வாங்கும் ஒரே நடிகையும் அவளாகத்தான் இருக்க வேண்டும்.

அப்படிப்பட்ட நந்தனாவிற்கு இப்போது ஒரு தலைபோகிற பிரச்சினை. மும்பை தாதா ஒருவன் அவளை ஒரு இரவு படுக்கைக்குக் கூப்பிட்டு இருக்கிறான். மறுத்தால் அவளை எந்த நேரமும் மரணம் நெருங்கிவிடும். மும்பையில் பரலோகம் போன பல நடிகைகள் அவனது குரூரத்துக்கு முக்கிய உதாரணம்.

அவனிடம் இருந்து போன் வரவும் நந்தனா அதிர்ச்சியில் நடுங்கியேவிட்டாள். அவனே அவளுடன் பேசினான்.



"அந்தப்புரத்தில் இருந்து அற்புதமான மணம் வருகிறதே!"

"அண்டை நாட்டரசன் உள்ளே நுழைந்துவிட்டானாம்!"

– பி.ஜி.பி.இசக்கி,
அகஸ்தியர்பட்டி.





"பாதி படத்துக்கு மேல, கதாநாயகனே வில்லனா மாறிட்டாரு."

"ஏன்?"

"பேசின தொகையைக் கொடுக்கலையாம்."

– அரிகரன், கொல்லம்.

"யார் வீடு அது? போலீஸ் தொப்பி வடிவத்தில் இருக்கு?"

"நம்ம கபாலியோட 'கெஸ்ட் ஹவுஸ்'தான்."

– பி.கவிதா,
கோவிலாம்பூண்டி.



அவளை அனுபவிப்பதற்கான தேதியையும் குறித்துக் கொடுத்துவிட்டான். எவ்வளவோ கெஞ்சிப் பார்த்தாள். எத்தனை லட்சம் வேண்டுமானாலும் தருவதாகக் கூறினாள். அவனோ, 'படுத்துவிட்டு எழுந்து போகும்போது நான் தரும் லட்சங்களுடன் நீ போகலாம்' என்று கூறிவிட்டு போன் இணைப்பை துண்டித்துவிட்டான்.

யாரிடமும் போய் இது பற்றி பேசவும் முடியாது. ஏனென்றால், அவளை சதா சர்வ காலமும் அந்த தாதாவின் ஆட்கள் கண்காணித்துக்கொண்டுதான் இருக்கிறார்கள். அது அவளுக்கும் தெரியும்.

ரகசியமாக போலீசுக்கு போன் செய்யலாம்தான்!

ஆனால், போலீசே அந்தத் தாதாவின் பெயரைக் கேட்டால் மிரண்டுதான் போகிறது. தப்பித் தவறி போலீசுக்குப் போனது வெளியே தெரிந்தால் நந்தனாவின் கதையும் அன்றோடு முடிந்துபோகும்.

மும்பையில் ஒரு நடிகை அப்படித்தான் போலீஸ் கமிஷனருக்கே போன் செய்து, பாதுகாப்பைக் கேட்டுப் பெற்றாள். எப்போதும் அவளைச் சுற்றி ஒரு பூனைப் படையே நடமாடியது. ஒரு கட்டத்தில் போலீஸ் அந்த பாதுகாப்பை விலக்கிக்கொண்டது. அடுத்த நாளே அவளது மார்பில் எங்கிருந்தோ பாய்ந்து வந்த நான்கு தோட்டாக்கள் துளை போட்டு, ஒரு ரத்த ஊற்றை மேனி மேல் உருவாக்கிவிட்டன.

எப்போதுமே 'காப்பான் பெரிதா... இல்லை, கள்ளன் பெரிதா?' என்றால்... கள்ளன்தானே பெரியவன்! காப்பவனுக்கு ஒரு வழி... ஆனால், கள்ளனுக்குப் பல வழிகள். இதை எல்லாம் எண்ணித்தான் நந்தனா, போலீசுக்கு போவதைத் தவிர்த்துவிட்டாள். அதற்காக அந்தத் தாதாவுக்கு மடங்கிப் போகவும் அவளது தன்மானமும், கற்பும் இடம் தரவில்லை...

என்னதான் செய்வது?

குழம்பிப் போனாள்!

யாரிடமாவது ஆலோசனை கேட்கலாம் என்றால், இந்த விஷயத்தில் நம்பும்படியாக ஒருவர்கூட இல்லை. நடிகன்



நாகதேவனை அவள் பார்த்தே பல மாதங்கள் ஆகிவிட்டது. ஆனால், ஒரு பத்திரிகை– நந்தனா அமெரிக்காவில் அவனுடன் ஊரைச் சுற்றிக்கொண்டு இருந்ததாக எழுதி, அதற்குச் சாட்சியாக 'கிராபிக்ஸ்' செய்யப்பட்ட படத்தையும் போட்டுவிட்டது.

அந்தப் பத்திரிகை ஆசிரியருக்கு போன் செய்து காட்டுக் கத்து கத்தினாள். மறுநாள் அதையும் ஒரு செய்தியாக்கிவிட்டார் அவர். இதனால் நந்தனா தனக்குள்ளேயே தாதா விஷயத்தைச் சுமக்க மாட்டாமல் சுமந்தாள்.

எவ்வளவுதான் அவளால் சுமக்க முடியும்?

அவள் வீட்டில் ஒரு சமையல்கார மாமி இருக்கிறாள். வயது எண்பது ஆகிறது. சரியாகக் கண் தெரியாது. காதும் கேட்காது. ஆனால், கைக்குள் 'அறுசுவை மன்னன்' நளன் ஒளிந்து இருக்கிறான்.

இவள்தான், சாப்பாடு பரிமாறும்போது நந்தனாவின் வாடிய முகத்தை வைத்து அவளுக்குள் ஏதோ ஒரு மனப் புழுக்கம் என்பதைக் கண்டுபிடித்தாள்.

நந்தனாவின் அழகிய தாடையைத் தொட்டுத் தூக்கிப் பிடித்து, "என்னம்மா... ஏன் ரொம்ப வருத்தமா இருக்கே? கண்ணைச் சுத்தி கரு வளையம் விழுற அளவுக்கு உனக்கு அப்படி என்ன கவலை?" என்று கேட்க– நந்தனாவும், மனதில் உள்ளதைக் கொட்டிவிட்டாள்.

"மாமி... நான் உங்களை இப்ப அந்த அம்பாளாவே நினைக்கிறேன். என் வேதனையை உங்ககிட்டத்தான் சொல்லப் போறேன். அப்பத்தான் எனக்குக் கொஞ்சமாவது ஆறுதல் கிடைக்கும்" – என்று நந்தனா சொல்லச் சொல்ல– மாமியே கலங்கித்தான் போனாள்.

"மாமி, இப்ப நான்... என்ன பண்ணட்டும்...? அவன் கிராதகன் மாமி..."

"உண்மைதான்! நடிகையா ஆனதுக்கு நீ கொடுக்கப் போற விலை ரொம்பவும் கொடுமைடி அம்மா..."

"கொடுமைதான். ஏன் அழகாப் பொறந்தேன்னு நினைச்சு நினைச்சு வேதனைப்படுறேன். பேசாம முகத்தை பிளேடால

ஜெயிக்கலாமான்னு எல்லாம் மனசுக்குள்ள எண்ணங்கள்..."

"போடி பைத்தியம். அவனை எப்படி ஜெயிக்கிறதுன்னு யோசிக்கறதை விட்டுட்டு..."

"இது விளையாட்டுப் போட்டி இல்ல மாமி, ஜெயிக்கவும்... தோக்கவும்! வாழ்க்கை. அதுல நடக்கப் போற கொடுமையான விபத்து."

"இதோ பார்... எல்லா சிக்கல்களுக்கும் பகவான் ஒரு வழியை வெச்சிருப்பான். பொறுமையா யோசிச்சா வழி தெரியும்."

"ஒரே வழிதான்... அவன் விருப்பத்துக்கு ஒண்ணு சம்மதிக்கணும். இல்லேன்னா தற்கொலை பண்ணிக்கறதுதான்."

"அவசரப்படுறியே... நீ, எல்லா நேரத்திலேயும் தைரியமா இருக்கணும். திரௌபதிக்கு சிக்கல் வந்தபோது, கண்ணன் ஓடி வந்தான்."

"அந்தக் கண்ணன் இப்ப வருவானா எனக்காக...?"

"நீ திரௌபதையா இருந்தா... அதாவது, அவளைப் போல பக்தியும், சிறப்பும் உனக்கு இருந்தா கண்ணன் நிச்சயம் வருவான்."

"இது என்ன பதில் மாமி...? என் குரலுக்கு எந்தத் தெய்வமும் காதே கொடுக்காதே! என்னா... தெய்வம்னு ஒண்ணு இருந்தாத்தானே..."

– இதைக் கேட்டதும் மாமி முகத்தில் ஒரு 'பளிச்' வெளிச்சம்.

"நந்தனா... வழி கிடைச்சிடுச்சு. உன்னோட குரலைக் கேக்கவும் இந்தக் கலியுகத்துல ஒரு தெய்வம் தயாரா இருக்கு..."

"என்ன மாமி சொல்றீங்க...?"

"விடைதாங்கின்னு ஒரு கிராமம். அங்கே ஒரு சிவன் கோவில் இருக்கு. அந்தக் கோவில்ல நந்தீஸ்வர சுவாமிக்குத்தான் மகத்துவமே! அவருக்கு பெரிய காது. அந்தக் காதுல எல்லாரும் தங்களுடைய மனக்குறையை ரகசியமா சொல்லி அழுதுட்டுப் போவாங்க. நான் பார்த்திருக்கிறேன். நீயும் போய் அந்த நந்தீஸ்வரர் காதுல உன் மனக்குறையைச் சொல்லி அழுதுட்டு



# சுய விமர்சனம்



காங்கிரஸ் தலைவராக இரு முறை இருந்தார் நேரு. 3-வது முறையும் அவரையே தேர்ந்தெடுக்க ஆசைப்பட்டார்கள்.

'அப்படித் தேர்ந்தெடுப்பது அவருக்கும்... இந்தியாவுக்கும் நல்லதல்ல. நேரு திறமையாக உழைக்கக்கூடியவர்தான். மீண்டும் அந்தப் பதவியை அளிப்பது அவரை ஒரு சீசராக ஆக்கிவிடும். மீண்டும் தலைவரானால், அவரால் நன்மை எதுவும் கிடைக்காது. அவருக்கு தலைக்கனம் ஏற்படாமல் தடுக்க வேண்டும். நமக்கு சீசர்கள் வேண்டாம்' என 'சாணக்கியா' எனும் புனைபெயரில் அப்போது சுய விமர்சனம் எழுதினார் நேரு.

–எஸ். விஜயலட்சுமி, சென்னை.

# தகவல் துளிகள்

★ ஐஸ்லாந்து, காஸ்டாரிக்கா, நௌரு, லிச்சென்ஸ்டீன், மொனாகோ ஆகிய நாடுகளில் ராணுவம் கிடையாது.

★ ஹாங்காங் நகரில் ஓடும் மின்சார பாதாள ரெயிலில் 46 ஆயிரம் பேர் பயணம் செய்யலாமாம்.

– ஆர்.ஆர்.பூபதி, திண்டுக்கல்.

## இதயம் பேசுகிறது

# இரட்டை தித்திப்பு



இரட்டை நாவல், தீபாவளி இனிப்பாக தித்தித்தது. உடல் தூய்மையுடன் மனத் தூய்மையும் வேண்டும் எனும் கருத்தைச் சொன்ன பட்டுக்கோட்டை பிரபாகரின் 'மனசுக்குள் நான் உன்னை...' அற்புதம். மூட நம்பிக்கை இருக்கக்கூடாது, அன்பு ஒன்றுதான் வாழ்வின் பிரதானம் என்று கூறிய ஆர். சுமதியின் 'அங்கே சென்று அன்பைச் சொல்லு' படைப்பு சுவாரசியம்.

-ம.வசந்தா, கச்சிராயபாளையம்.

இரண்டு நாவல்களும் மனதைத் தொடும்படி விறுவிறுப்புடனும், எதார்த்தமாகவும் அமைந்திருந்தன.

-எஸ்.எல்.பிச்சைமுத்து, சிங்கப்பெருமாள்கோவில்.

பொய்யான வாழ்க்கை நிலையற்றது. மனத் தூய்மையே சிறந்தது என்பதை அம்பிகா கதாபாத்திரமும், போலியான சாமியார்களால் ஏற்படும் சந்தேகப் பேய் எந்த அளவுக்கு வாழ்வை மோசமாக்கும் என்பதை ரித்திகா கதாபாத்திரமும் வெளிப்படுத்தின.

-வி.எஸ்.மோகன், மதுரை.

விட்டுக் கொடுப்பவர், கெட்டுப்போவதில்லை என்ற கருத்தை மையமாகக் கொண்டு எழுதப்பட்ட முகப்பு நாவல் அருஞ்சுவை. பொய்யான தகவல்கள் நீண்ட நாள் நிலைப்பதில்லை, இறுதியில் உண்மைதான் வெல்லும் என்ற தத்துவத்தை அடிப்படையாக வைத்து எழுதப்பட்ட இரண்டாம் நாவல் விறுவிறுப்பு.

– உள்ளகரம் பி.ஜெயராஜ்.

பெண்ணாசையும், மண்ணாசையும் மனிதனை மனம் மயக்கி அழிவுக்கு வழிவகுக்கும் என்பதை இனிதாய் உணர்த்தியது இரட்டை நாவல்.

-சுபா, ராமேஸ்வரம்.

வாசகர்களுக்கு கொடுத்த கொம்புத்தேனை இனிமையாக சுவைத்தேன்!

-ஆர்.ராஜகோபாலன், கொம்மடிக்கோட்டை.

கவிக்குயில்களின் கவிதைகள் நட்சத்திர வெடி. விமலா ரமணி எழுதிய சிறுகதை, தீபாவளிக்கான அருமருந்து. மொத்தத்தில் மறக்க முடியாத 'சூப்பர் மலர்'.

-மீனா பத்மனாபன், புவனேஸ்வர்.

தகவல் களஞ்சியமாக, சுவையான கதைகளுடன் திகழ்ந்தது தீபாவளி மலர்.

-எஸ்.வளர்மதி, கொட்டாரம்.

உங்கள் கருத்துகளை அனுப்ப வேண்டிய முகவரி:
**இதயம் பேசுகிறது,**
**'ராணி முத்து',**
**சென்னை– 600 007.**



வாயேன்.."

மாமி சொன்னது நந்தனாவின் உதட்டைச் சுழிக்க வைத்தது.

"அடப் போங்க மாமி... இப்பல்லாம் நாங்க நடிக்கிற சினிமாவுலகூட கடவுள்ங்கிறவர் நேர்ல வரதில்லை. நீங்க என்னடான்னா..."

"இதோ பார் நந்தனா... எதுலேயும் நம்பிக்கைதான் பிரதானம். அதிலும் எங்க நந்தீஸ்வரர் சாதாரண சாமி இல்லை. குறை கேக்கறதுக்காகவே பெரிய காதை உடையவர். எவ்வளவோ பேருக்கு... அவர் காதுல குறைகளைச் சொன்ன உடனே நல்ல வழி பொறந்திருக்கு.

உனக்கு மனிதர்களால உதவ முடியாது. அந்த பகவானா பார்த்து உனக்கு உதவினாத்தான் உண்டு. அதான் உனக்கு நான் அந்த ஊரைப் பத்தியும், அங்கே இருக்கிற சாமியோட பெருமை பத்தியும் சொன்னேன்."

– மாமியின் குரலில் அழுத்தம் தொனித்தது.

நந்தனாவுக்கும் ஒரு மனமாற்றம் தேவைப்பட்டது.

உடனேயே கிளம்பிவிட்டாள். கூடவே அந்த மாமி!

பிறர் யாரும் தன்னை அடையாளம் கண்டுகொள்ளக் கூடாது என்பதற்காக, சேலைத் தலைப்பால் தன் முகத்தை மூடிக்கொண்டிருந்தாள்.

'நந்தியின் காதில் நந்தனா சொன்னது என்ன?' என்று பல ஊடகங்களும் பெரிதாக செய்தி வெளியிட்டுவிடும். மக்களின் ரசனையை ஊடகங்கள் சரியாக அடையாளம் கண்டுகொண்டன. அப்படிப்பட்ட ஊடகங்களின் பட்டியலில் இருக்கும் நடிகைகளில் நந்தனாவுக்குத்தான் முதலிடம். எனவே, பயபக்தியோடு முக்காடு போட்டுக் கொண்டுதான் விடைதாங்கி கிராமத்திற்குள் நுழைந்தாள்.

சிறிய கிராமம்.

கோவிலை வைத்துத்தான் மகத்துவம்.

எதனாலோ பெரிய அளவில் ஒரு கூட்டம் இல்லை.

கோவிலும் கொஞ்சம் பாழ்பட்டுத்தான் கிடந்தது. நந்தனாவுக்கு ஆச்சரியமாக இருந்தது.

மாமியிடமும் கேட்டாள்.

"மாமி... என்ன மாமி சரியான குக்கிராமமால்ல இருக்கு?"

"இருந்துட்டுப் போகட்டுமே... நமக்கென்ன?"

"இல்ல.. இப்பல்லாம் சாதாரண தெருக்கோவில்ல கூட கடுமையான கூட்டம் இருக்கு. அப்படி இருக்க– இந்த ஊர் நந்தி, மக்களோட குறை தீர்க்கறதுக்குன்னே இருக்கறவர்னு சொன்னீங்க. அப்படிப் பார்த்தா இங்கே கூட்டம் குவிஞ்சி இருக்கணுமே...?"

"வாஸ்தவம்தான். ஆனா, இந்த ஊருக்குன்னு நிறைய கட்டுப்பாடுகள் உண்டு. அதுல ஒண்ணு, இந்த ஊர் சாமி பத்தி யார்கிட்டேயும் பெருமையா பேசிக்கக்கூடாது."

"அது ஏன் மாமி?"

"அது அப்படித்தான். நானே மனசு கேக்காமத்தான் உனக்கு வழி காட்டினேன்."

"அது சரி... உங்களுக்கு எப்படி மாமி இந்தக் கோவிலைப் பத்தி தெரியும்."

"நான் இந்த ஊர்க்காரிதான் நந்தனா. நான் பிறந்ததே இங்கதான்..."– என்றாள் மாமி.

நந்தனா அதிர்ந்துவிட்டாள்.

"என்ன... வாயைப் பொளந்துட்டே? உனக்கும் நல்லது நடக்கும். அப்பத்தான் எங்க சாமி பத்திய உண்மை தெரியவரும். இனி நீ எப்படி நடந்துக்கணும்னு நான் சொல்றேன். இப்ப வா..."

– மாமி அப்படிச் சொல்லவும், அந்த கார்– கோவில் வாசலை அடையவும் சரியாக இருந்தது.

இருவருமாக இறங்கி உள்ளே சென்றனர்.

மதியவேளை! குருக்கள் கதவைப் பூட்டத் தயாராகிக்கொண்டிருந்தார். மாமியையும், நந்தனாவையும் பார்த்ததும் சற்று தாமதப்படுத்தினார்.



குருக்களுக்கு மாமியைத் நன்றாகத் தெரிந்திருந்தது. ஆனால், நந்தனாவை அவர் அறிந்திருக்கவில்லை.

அதேநேரம், "எங்கேயோ பார்த்த மாதிரி இருக்கு..." என்று மட்டும் சொல்லிக்கொண்டே இருந்தார்.

நந்தனா, 'அப்படியே சொல்லிக்கொண்டிருங்கள்' என்று எண்ணிக்கொண்டே சுவாமி தரிசனம் முடிந்து நந்தீஸ்வர் சந்நதிக்கு வந்தாள்.

பளிச்சென்று இருந்தது சந்நதி.

நந்திப் பெருமான் கழுத்தில் யாரோ சோளக்கதிர் மாலை போட்டிருந்தனர். வயலின் முதல் அறுவடை. அவரைச் சுற்றி நிறையவே நெல் கொட்டிக் கிடந்தது. ஏராளமான நெய் விளக்குகளும் ஏற்றப்பட்டிருந்தன. அதுபற்றி அவள் கேட்காமலே விளக்கம் சொல்லத் தொடங்கினார் குருக்கள்.

"இந்த ஊரோட குலதெய்வமே நந்தீஸ்வரர்தான். யாரா இருந்தாலும், அவங்களோட வயல்ல விளையறதுல ஒரு பங்கை இவருக்குக் கொடுத்துடணும். இல்லேன்னா அந்த வயலே அழிஞ்சு போயிடும்கிறது நம்பிக்கை. அது மட்டுமில்ல... சிற்ப சாஸ்திரப்படி ஒரு சிறு பின்னமும் இல்லாத நந்தி சிலை, இது. விஷயம் தெரிஞ்சவங்களால் இதுக்கு உயிர் வரவழைக்க முடியும்னுகூட சொல்வாங்க. பக்தர்களோட குறைகளைக் கேட்டு உடனுக்குடன் அதுக்கு நிவாரணம் தர்றவரா இருக்கார், இந்த நந்தீஸ்வரர். ரொம்ப ரொம்ப வரப்பிரசாதமான சாமி...

ஆனா ஒண்ணு! கேட்டது கிடைச்சாலோ, வேண்டியது நடந்தாலோ அதுபற்றி வெளியில சொல்லக்கூடாது. அது ரொம்ப முக்கியம். அதுமட்டுமல்ல... ஒருத்தர் ஒரு தடவைதான் இந்த சாமிகிட்டே குறையைச் சொல்லலாம். அது சின்னதோ, பெருசோ... அவர் நிறைவேற்றி வைப்பார். இரண்டாவது தடவைக்கு இங்க இடம் இல்லை."

– குருக்கள் சொல்லி முடிக்க நந்தனாவும், நந்தீஸ்வரர் காதருகே சென்று கண்கள் கலங்க நின்றாள்.

மெல்லக் குனிந்து அந்தச் சிலையின் காது மடல் முன்– உதட்டைக் குவித்து தன் கோரிக்கையை வைத்தாள்.

"சாமி... எப்படியாவது என்னை அந்த மும்பை தாதாகிட்டே இருந்து காப்பாத்து. உன்னைவிட்டா எனக்கு உதவ ஆளே இல்லை..."

– அவன் அப்படிச் சொன்னபோது, அந்தக் காது மடல் ஒரு உண்மையான காது மடல் போல ஆடியதாக அவனுக்குத் தோன்றியது.

உடம்பும் சிலிர்த்துவிட்டது.

## 3

நமது தமிழ் ஒரு அரிய மொழி. அதன் சொற்களைப் பிரித்துப் பார்க்கத் தெரிந்தாலே போதும். நமக்கு பொருள் தானாகத் தெரியவந்துவிடும். வெறும் சப்தமாக நமது தமிழில் சொற்கள் இருந்ததே இல்லை. உதாரணமாக மா, பலா, வாழை என்கிற முக்கனிகளை எடுத்துக்கொண்டால் அதன் பெயரிலேயே அதன் பொருள் புதைந்திருப்பது தெரியவரும்.

மாம்பழம் என்றால் பெரிய பழம் என்று ஒரு பொருள். அன்னையைப் போல கருணை உடையது என்று இன்னொரு பொருள். இந்த இரண்டுமே அந்தப் பழத்துக்குப் பொருந்தும். தாய்க்குப் பிறகு தாய்ப்பாலின் சக்தியை தன்னுள் கொண்டு, தன்னை உண்பவர்களுக்குத் தருவது மாம்பழமே. 'மாம்பழம் தின்றால் சூடு' என்று சிலர் கூறுவர். அளவறிந்து உண்டால் சூடும் இல்லை. குளிர்ச்சியும் இல்லை. மாம்பழம்தான் எல்லா ஊட்டச்சத்தும் நிறைந்தது.

'மாதா தருவதை மாம்பழம் தரும்' என்பார்கள்.

அதேபோல்தான் பலா. 'பல சுளைகளை தன்னிடம் உடையது' என்பதே மருவி பலா என்றானது. வாழையும் இப்படித்தான்... இது வார்த்தையிலே இருக்கும். வாழையை நட்டு வைத்தால் எவர் தயவுமின்றி அதை நம்ம தலைமுறைகளுக்குப் பயிரிட்டுக்கொண்டு இருக்கலாம். ஒரு வாழை குலை தள்ளியவுடன், ஒரு குட்டி வாழையையாவது தந்துவிட்டே மடியும். வாழ்வாங்கு வாழ்வது வாழை!



அப்படியே இந்த சொற்காரணங்களோடு 'சிற்பம்' என்கிற சொல்லிடம் வந்தால், அதனுள் சிறப்புடைய விஷயங்களைக் கொண்டது என்றும் பொருள் இருக்கக் காணலாம். அல்பம் என்றால் அகலுதல். அகலுதலில் உள்ள 'அ'வும், இறுதி எழுத்தான 'ல்'லும் சேர்ந்து அல்பமாகி இருக்கக் காணலாம். 'அற்பம்' என்றும் உரைப்பர்... அதில் 'அற்றுப்போதல்' என்றும் பொருள் இருக்கும். இப்படிச் சொல்லிலேயே பொருள் கொண்ட மொழி நமது மொழி.

சரி... சிறப்புடைய சிற்பம் பற்றி சில விஷயங்களை அறிவோமா?

**நா**கநாதன் பிள்ளையைப் பரிசோதித்த டாக்டர், அதிர்ச்சியைத் தன் நெற்றியில் காட்டினார். பார்த்துக்கொண்டே இருந்த சிவப்பிரகாசம் குறிப்பறிந்து கேட்டார்.

"டாக்டர்... பிள்ளைக்கு குணப்படுத்த முடிஞ்ச வாதம்தானே?"

"குணப்படுத்திடலாம். ஆனா..."

"என்ன... ஆனான்னு இழுக்கறீங்க...?"

"இது வந்து தாக்கி இருக்கிற வேகத்தையும், விதத்தையும் பார்த்தா என்னால சரியா கணிக்கவே முடியலை..."

"நீங்க என்ன சொல்றீங்க?"

"வாதம் யாருக்கெல்லாம் வரும்னு ஒரு கணக்கு இருக்கு. அது ஒரு வகையில பரம்பரை தொடர்புல வரும். உறவுக்குள்ள கல்யாணமானவங்களுக்கு வரும். சில உணவுப் பழக்க வழக்கங்கள்... அப்பால் வேறு காரணங்கள்னு நிறைய இருக்கு. நம்ம பிள்ளைக்கு ஒத்தநாடி தேகம். ஓயாம பயிற்சி செய்யறதால வலுவான கை, கால்கள். காலை நேரத்துல செய்யறதால சுத்தமான சுவாச முறை, சங்கீதத்துலயே கிடக்கிறதால நல்ல மனச் சுத்தம்– இப்படி எல்லாமே தெளிவா இருக்கற ஒருத்தருக்கு எப்படி இந்த நோய் வந்துச்சுன்னு தெரியலியே...?"

"என்ன டாக்டர் நீங்க... எப்படியாவது பிள்ளையைக் குணப்படுத்துங்க. இடையில ஒரு வாரம்தான் இருக்கு. பிள்ளை, அமெரிக்கா கிளம்பியாகணும். பிள்ளையோட ஒரு கச்சேரியை, அமெரிக்க ஜனாதிபதி கேட்கப் போறாரு..."

"அது சரி... இதென்ன காய்ச்சலா, சளியா...! ஊசி மருந்தால மடக்கிப் பிடிச்சு இரண்டொரு நாள்ல குணப்படுத்த...?"

"அப்படின்னா...?"

"ஆஸ்பத்திரியில உடனே 'அட்மிட்' பண்ணுங்க. மாசக் கணக்குல சிகிச்சை தரணும். அப்புறம் 'பிசியோதெரபி' முறையில சில பயிற்சி எல்லாம் கொடுக்கணும்."

"அப்ப அமெரிக்கா...?"

"மறந்துட வேண்டியதுதான். முதல்ல பக்கத்துல இருக்கற பாத்ரூமுக்கு ஒழுங்கா போய் வர முடியுதான்னு பார்ப்போம்."

"டாக்டர்..."

"உணர்ச்சி வசப்படுறதுல அர்த்தமே இல்லை சிவப்பிரகாசம். நான் ஆயிரக்கணக்கான வாத நோயாளிகளைப் பார்த்தவன். வாதம்னு சொன்னா 'பிடிச்சிக்கிறது'ன்னு ஒரு பொருள். இங்கே இவர் கை, காலை இழுத்துப் பிடிச்சி சுருண்டுகிட்ட நரம்பு எதனால அப்படி ஆச்சுன்னு கண்டுபிடிக்கணும். அதுக்கே பல நாளாகும்..."

டாக்டர் ராமையா ஒரு வைத்தியப் புலி.

அவரே அப்படிச் சொல்லவும், நாகநாதன் பிள்ளையின் மனைவி லட்சுமி கேவிக் கேவி அழத் தொடங்கிவிட்டாள். அவள் வரையில் பிள்ளையின் மொத்த வாழ்வே பறிபோய்விட்டது போலத்தான் தோன்றியது!

ஆஸ்பத்திரி படுக்கையில் கிடந்தவரை முக்கியப் பிரமுகர்களும், தெரிந்தவர்களும் வந்து பார்த்து நலம் விசாரித்துத் திரும்பிய வண்ணம் இருந்தனர். அவரை வைத்து நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்திருந்தவர்கள், ஆஸ்பத்திரி வராந்தாவில் கையைப் பிசைந்துகொண்டிருந்தனர். அவரின் கார் டிரைவர் வேலாயுதம், அடிக்கடி முட்டிக்கொண்டு வரும் கண்ணீரைத் துடைத்துவிட்டான்.

அவன் அப்படி அழுது யாருமே பார்த்திருக்க மாட்டார்கள். திடீரென்று ஒரு முடிவுக்கு வந்தது போல லட்சுமியிடம் வந்தவன், அவளை வெளியே அழைத்து– கார் சாவியைக் கொடுத்தான்.

"என்ன வேலாயுதம்.. சாவிய எதுக்கு என்கிட்ட தர்றே...?"

"அம்மா, நான் இனி உங்க கார் டிரைவர் இல்ல. நான் உத்தரவு வாங்கிக்கறேம்மா..."

"அட என்னடா இது... இந்த நேரத்துல நீயும் என்னை விட்டுப் போனா, நான் என்னத்தடா பண்ணுவேன்?"

"மன்னிச்சுக்குங்கம்மா! நான் இனியும் முதலாளிகூட இருந்தா என் கை, காலும் விளங்காமப் போயிடும்மா."

"அடப்பாவி... என்னடா பேசற நீ...? உனக்கு என்ன ஆச்சு?"

"இதுக்கு மேல என்னை எதுவும் கேக்காதீங்கம்மா. என்னை விட்ருங்க. நான் வர்றேன்."

– வேலாயுதம் கண்ணீரைத் துடைத்துக்கொண்டு ஆஸ்பத்திரியைவிட்டு அகல ஆரம்பித்தபோது, எதிரில் சிவப்பிரகாசம்.

"லட்சுமி நீ போ. நாகநாதன் பக்கத்துல இருந்து அவனை நல்லா கவனிச்சுக்க. இந்தப் பயலை நான் பாத்துக்கறேன்" என்றவர், வேலாயுதத்தின் தோளில் கை போட்டார். அதில் ஒரு வாஞ்சை.

"என்ன வேலாயுதம்... உனக்கு இப்ப என்ன பிரச்சினை?" நடந்தபடியே கேட்டார்.

"பயமா இருக்குதுய்யா..."

"என்ன சொல்றே நீ... எதுக்கு பயப்படணும்?"

"அதை நான் சொன்னா, நீங்க நம்ப மாட்டீங்க. சிரிச்சாலும் சிரிப்பீங்க."

"நீ சும்மா சொல்லு..."

"ஐயா..."

"சொல்லு வேலாயுதம்... மனசுல எதையும் வெச்சுக்காதே."

"அது வந்துங்க..."

"மெல்லாமா, விழுங்காம– எதுவா இருந்தாலும் தயங்காமச்

சொல்லு."

"நான் சொல்லப் போறது, எந்த ரூபத்திலேயும் ஐயாவுக்கு தெரியக் கூடாதுங்க."

"சரி... நீ விஷயத்தைச் சொல்லு..."

"ஐயா... நம்ம முதலாளிக்கு எதனால இப்படி ஆச்சுன்னு எனக்குத் தெரியும்..."

"அப்படியா... இதை ஏன் முதல்லையே சொல்லலை...?"

"சொன்னா நம்பணுங்களே..."

"நீ முதல்ல சொல்லு... நம்பறதைப் பத்தி அப்புறம் கவலைப்படலாம்."

"நல்லதுங்க...! விடைதாங்கின்னு ஒரு ஊரைப் பத்தி கேள்விப்பட்டு இருக்கீங்களா?"

"இல்லையே..."

"அது ஒரு கிராமங்க. திருவண்ணாமலை தாண்டி– காஞ்சிபுரம் போற வழியில இருக்குங்க."

"அதுக்கு என்ன?"

"அந்த ஊர்ல உள்ள ஒருத்தர் தன்னோட வயக்காட்டை விக்கற முடிவுல இருந்தாரு. அதை நம்ம முதுலாளியும் வாங்கிப் போட நினைச்சாருங்க."

"சரி..."

"அதுக்காக அந்த ஊருக்குப் போனோம். நான்தான் வழக்கம் போல காரை ஓட்டினேன். அருமையான ஊருங்க, அது. திரும்பின பக்கமெல்லாம் பச்சைப் பசேல்னு வயல்வெளிங்க.. எங்க பார்த்தாலும் தண்ணீர் நிறைஞ்ச குளம்! ஊருக்கு நடுவுல அழகா ஒரு சிவன் கோவில்..."

"இந்த விளக்கமெல்லாம் எதுக்கு? நான் என்ன கதையா கேட்டேன்?"

"இல்லீங்க... நான் சொல்றதுல அர்த்தம் இருக்குங்க."

"சரி சொல்லு... சொல்லு..."

"அங்கே வயக்காட்டை வாங்கிப் போட முடிவு செய்துட்டாரு முதலாளி. அந்த ஊர்ல ஒரு வழக்கம் உண்டுங்களாம். வயல்ல



எவ்வளவு விளைஞ்சாலும், விளைச்சலில் நூத்துல பத்து சதவிகிதத்தை அந்த ஊர் கோவில் கிடங்குக்கு தானமா கொடுத்துடணுமாம்.

"சரி... நாகநாதன் கொடுக்க முடியாதுங்கற மாதிரி எதாவது சொன்னானா...?"

"அதெல்லாம் இல்லீங்க. 'பத்து சதவீதம் என்ன... இருபது சதவீதமா தந்துடறேன். எல்லாம் கோவிலுக்குத்தானே?'ன்னு சந்தோஷமா ஒத்துக்கிட்டாருங்க."

"அப்புறம் என்ன பிரச்சினை?"

"எல்லா விஷயத்தையும் நல்லபடி பேசி முடிச்சிட்டு, கார்ல திரும்பும்போது திடீர்னு, " 'டேய் வேலாயுதம் ! நீ நகருடா, நான் கார் ஓட்டறேன்'னு சொன்னாரு."

"இந்த மாதிரி பல முதலாளிகளுக்கும் அப்பப்ப கார் ஓட்டற ஆசை வரும்தான். உம்... அப்புறம்!"

"அங்கதாங்க விதி விளையாடிடுச்சு..."

– வேலாயுதம் ஒரு இடைவெளி விட – சிவசங்கரன் முகத்திலும் ஒரு பீதி... அழகாக கூடாரம் போட்டது. வேலாயுதத்தைப் பார்த்து வெறிக்கவிட்டது அந்தப் பீதி.

"காரை ஓட்டிட்டு வர்ற வழியில்– ஒரு இடத்துல திடீர்னு ஒரு காளை மாடு இடப்பக்கத்துல இருந்து வலப்பக்கமா போச்சுங்க. அப்படி ஒரு அழகான புஷ்டியான காளை மாட்டை என் வாழ்நாள்ல அதுக்கு முன் நான் பார்த்ததே இல்லீங்க."

"பீடிகை போதும். விஷயத்துக்கு வா..."

"அந்தக் காளை மாட்டை பார்த்து முதலாளியும் மிரண்டுட்டாரு. அது நடு ரோட்டுல ஜம்முன்னு நடந்து போச்சு. ஐயா 'ஹாரன்' அடிச்சும், ஒதுங்கிப் போகலை. அப்பப்ப திரும்பித் திரும்பி மட்டும் பார்த்துச்சு..."

"அப்புறம்...?"

"ரொம்ப தூரம் ஒரே கூத்து. ஒரு கட்டத்துல காரை நிறுத்தி என்னைப் பார்த்து, 'டேய்! அந்த மாட்டை விரட்டி அடிடா'ன்னாரு. நானும் சரின்னு ஒரு குச்சியை ஒடிச்சிகிட்டு,

அதை அடிக்கப் போனேன். ஆனா, அது அசரலை. ஜல்லிக்கட்டு காளை மாதிரி என்னைப் பார்த்து புஸ்புஸ்னு பெருமூச்சு விட்டுச்சு.

முன்னிரண்டு காலால மண்ணைக் கிறிக்கிட்டே என் மேல பாய தயாராயிடுச்சு. நான் திரும்பி ஓடி வந்து காருக்குள்ளே ஏறிட்டேன். ஐயாவுக்கு ஒரே கோபம். சட்டுன்னு ஒரு முடிவுக்கு வந்தவர், காரை பயங்கர வேகமா எடுத்தாருங்க. எதிர்ல அந்த மாடு நிக்கறதைப் பத்தி கவலையேபடாம வண்டியை விட்டாருங்க..."

- திரும்பவும் இடைவெளி விட்ட பின்- சிவப்பிரகாசத்துக்குள் கோபக் குமிழிகள் பட்டென்று வெடித்தன.

"அப்புறம் என்ன ஆச்சு... அந்த மாடு அடிபட்டு செத்துப் போச்சா?"

"செத்துப் போகலீங்க... ஆனா, அதோட கால்ல பலமான அடி. காரோட முன்பக்கம் அப்படியே ஒரு சாணுக்கு நசுங்கிப் போச்சுன்னா, பாத்துக்குங்களேன்."

"மொத்தத்துல ஒரு காளை மாட்டு மேல காரை ஏத்தி 'ஆக்சிடெண்ட்' பண்ணிட்டான். அதுல அந்த மாட்டுக்கு நல்ல அடி. இவ்வளவுதானே?"

"இல்லீங்க. இதுக்கு மேலதாங்க விஷயமே இருக்கு..."

திரும்பவும் வேலாயுதம் பீடிகை போட்டான்.

"என்னய்யா... ஏன் இப்படி இந்த விஷயத்தை இந்த இழு இழுக்கறே...?"

"என்னிக்கு அந்த மாடு அடிபட்டுச்சோ... மறுநாளே முதலாளிக்கு கால்- கை இழுத்துக்கிச்சு. அதுமட்டும் இல்லீங்க... ஆஸ்பத்திரிக்கு அவரை கூட்டிக்கிட்டு போகும்போது, நம்ம வீட்டு முன்னால அந்த மாடு ரத்தம் சொட்டற காலோட நின்னுகிட்டு இருந்துச்சுங்க...!"

அவன் சொன்னதைக் கேட்கவும் சிவப்பிரகாசத்துக்கே சற்று பகீர் என்றுதான் ஆயிற்று.

"என்னய்யா சொல்றே... விடைதாங்கியில் அடிபட்ட மாடு இங்க சென்னையில... மயிலாப்பூர்ல வீட்டு வாசல்ல நின்னுகிட்டு



இருந்துச்சா...?"

"ஆமாங்க... அதைப் பார்த்த எனக்கு கையும் ஓடலை, காலும் ஓடலை. இருந்தாலும் முதலாளி உடம்பு இருக்கற இருப்பை மனசுல வெச்சுகிட்டு நான் எதுவும் சொல்லலை."

"ஆமா... நீ நல்லா பார்த்தியா? அடிபட்ட அந்தக் காளை மாடுதானா?"

"நீங்க இப்படி கேப்பீங்கன்னு தெரியும். இப்போ நான் அடுத்து ஒன்னைச் சொல்லப் போறேன். இதைக் கேட்டா நீங்க ஆடியே போயிடுவீங்க..."

"என்னய்யா...?"

"ஆஸ்பத்திரிக்கு வெளியில ஒரு பெரிய வேப்பமரம் இருக்குல்ல..."

"ஆமா..."

"அதுக்குக் கீழே போய் ஒரு பார்வை பார்த்துட்டு வாங்க. நான் இங்கேயே இருக்கேன்."

- வேலாயுதம் அடுத்த குண்டை வெடித்தான்.

சிவப்பிரகாசத்துக்கு உச்சி முதல் பாதம் வரை ஒரு பரபரப்பு.

'பேண்ட்'டுக்குள் 'இன்' செய்த சட்டையை சற்றே தளர்த்திக்கொண்டார். தகதகக்கும் தங்க 'பிரேம்' கண்ணாடியைக் கழற்றி, துடைத்து மாட்டினார்.

"போங்க... போய்ப் பாருங்க. அப்பத்தான் உங்களுக்கு எல்லா விசயமும் புரியும்."

- அவன் மேலும் தூண்டிவிட- தனது 'ஷூ' கால்கள் சப்திக்க நடக்க ஆரம்பித்தார்.

அதிக பட்சம் நூறடி தூரத்தில், ஆஸ்பத்திரியின் பிரதான முன்வாசல் கதவுக்கு அப்பால் தார்ச் சாலை ஓரமாக காலி இடம் ஒன்றில் பிரமாண்டமான வேப்பமரம். அதன் பருத்த நடுப் பாகத்துக்குக் கீழ்- ரத்தம் சொட்டும் கால்களுடன் ஒரு காளை மாடு நின்றுகொண்டு, ஆஸ்பத்திரியின் வாசல் கதவையே பார்த்தது. அதன் அகண்ட கரிய விழிகளில் கோபம், சோகம்

எல்லாம் ஒரு சேரத் தெரிந்தது.

அதைப் பார்த்த அதிர்ச்சியில் சிவப்பிரகாசம் அப்படியே ஸ்தம்பித்து நின்றுவிட்டார்.

## 4

சிற்பக் கலையில் உலகிலேயே நாம்தான் முன்னோடிகள். ஓவியம் என்பது சேர்த்துச் செய்வது. சிற்பம் என்பது நீக்கிச் செய்வது. ஆம்... சிற்ப சாஸ்திரம், இல்லாத ஒன்றை உருவாக்குவதில்லை. அது இருக்கிற ஒன்றைக் கண்டுபிடிப்பது.

'சிற்பம்' என்பதற்கு கணக்கு என்று ஒரு பொருளும் உண்டு. ஆம்... மிகக் கணக்காய் செயல்பட்டாக வேண்டும். அடுத்து, சிற்பம் செய்ய கூரான உளிகள் அவசியம். அந்த உளிகளுக்குத் தட்டையான தலையும் முக்கியம்.

இப்படியும் சொல்லலாம். மிகக் கூராகவும், அதே நேரம் மிகத் தட்டையாகவும் இருபுறம் கொண்ட ஒன்றால்தான் ஒரு சிற்பம் உருவாக முடியும். தட்டை பாகம், அடி வாங்கும். கூர்மையான பாகம், அந்த அடியைப் படர்த்தும். இரண்டும் ஒரு நொடியில் நிகழும் கணக்கில்தான், ஒரு கல்லுக்குள் ஒளிந்துள்ள சிற்பம் வெளியே வரும்.

கல் என்றால் 'படிப்பது' என்று ஒரு பொருள் உண்டு. படிப்பு அழியாதது. 'ஏழு பிறப்பும் தொடர்ந்து அது வரும்' என்கிறார் வள்ளுவர். கல்லும் அழியாதது. காலா காலத்துக்கு அப்படியே இருக்கும். எனவே, சிற்பம் என்பதன் பின்னே அழியாத் தன்மையும் உள்ளது. இப்படிப்பட்ட அழியாத சிரஞ்சீவியான சிற்பங்களை உருவாக்குபவர்களே சிற்பிகள்.

எவன் ஒருவன் காலாகாலம் தன் பெயர் நிலைக்க வேண்டும் என்று எண்ணுகிறானோ... அவன் சிற்பியாவான். எழுத்தாளர் கவிஞர் வரிசையில் சிற்பிகளும் அடக்கம். இப்படிப்பட்ட சிற்பிகளில் மயனுலகைச் சேர்ந்த தேவதச்சன் என்பவனும் ஒருவன். இவன் கற்சிலைகளைப் படைப்பவன் மட்டுமல்ல... அவைகளுக்கு உயி



தரும் ரகசியமும் அறிந்தவன்! எப்படி?

நந்தனாவின் பிரார்த்தனை அவ்வளவு சீக்கிரமாகப் பலிக்கும் என்று அவள் எதிர்பார்க்கவில்லை. அன்றைய காலை வேளையில் எதார்த்தமாக தினசரிகளைத் திறந்தவள், அதில் வந்திருந்த ஒரு செய்தியைப் பார்த்து திக்குமுக்காடிப் போனாள்.

'மும்பை பிரபல தாதா சுட்டுக்கொலை' என்கிற தலைப்புச் செய்தியே அவளைப் பிரகாசமாக்கியது.

அமெரிக்காவில் இருந்து வாங்கி வந்திருந்த ஒரு அழகிய களிம்புப் பொருளை முகம் முழுக்கப் பூசிக்கொண்டு சற்று விகாரமாக இருந்தவள், இந்தச் செய்தியைப் படிக்கவும் விழுந்து புரண்டாள். அந்தப் பத்திரிகையுடன் நேராக சமையல்கட்டில் இருக்கும் மாமியை நோக்கித்தான் ஓடினாள்.

"மாமி... மாமி..."

"என்ன நந்தனா?"

"மாமி, நான் என்னன்னு சொல்வேன்! அதை எப்படிச் சொல்வேன்! பேப்பரைப் பாருங்க... தெரியும்."

– மாமியிடம் காட்டினாள்.

மாமியும் அதை வாங்கிப் பார்த்துவிட்டு, பக்திப் பரவசத்தில் கண் கலங்கினாள்.

"மாமி... நீங்க சொன்னது சத்தியம். நந்திகேஸ்வரர் என் கோரிக்கையை ஏத்து, என்னைக் காப்பாத்திட்டார். ஒரு அசுரன் அழிஞ்சான். நான் தப்பிச்சிட்டேன்..."

"உண்மைதான் நந்து. ஆனா, இதை தயவு செய்து வெளிப்படுத்தாதே! யார்கிட்டேயும் சொல்லி பெருமைப்பட்டுக்காதே..."

"ஏன் மாமி... இது எவ்வளவு பெரிய விஷயம்...?"

"பைத்தியமே... அந்தக் கிராமத்துக்குப் போனப்போ– கோவில்ல குருக்கள் சொன்னது மறந்து போச்சா...?"

"அட... ஆமாம்ல! ஆமாம்... எதனால மாமி இப்படியொரு கட்டுப்பாடு?"

"அதெல்லாமே ரொம்ப புதிரான விஷயம்தான். அவ்வளவு





ஏன்....? அந்தக் கிராமமே ஒரு ஆச்சரியமான ஊர். ஈஸ்வரனும், பார்வதியும் வந்து நடனமாடின இடம். நந்தி சாமியோட விளையாட்டு பூமி அது."

"மாமி மாமி... எனக்கு இப்பவே அந்தக் கோவிலுக்குப் போய், சாமி கால்ல விழுந்து வணங்கி நன்றி சொல்லணும் போல இருக்கு."

"ரொம்ப நல்ல எண்ணம்தான். எப்பவும் பிரார்த்தனை செய்துக்கறது பெரிய விஷயமே இல்லை. நினைச்சது நடந்ததும், அதை ஞாபகத்துல வைச்சு நன்றிக்கடன் செலுத்துறது முக்கியம்தான்."

"மாமி! நாம இன்னிக்கே கிளம்புவோமா?"

"கட்டாயம்... நானும் சமையலை முடிச்சுடறேன். குளிச்சுட்டு கிளம்புவோம். வெண்ணெய் வாங்கி வச்சிருக்கேன். அதை சுண்டக் காய்ச்சி, சுத்தமான நெய்யா உருக்கி எடுத்துக்கறேன். உன் கையால அந்தக் கோவிலுக்கு நெய்விளக்கு போடு. அதுதான் அங்க ரொம்ப விசேஷம்."

"அது என்ன மாமி... நெய்விளக்குக்கு மட்டும் விசேஷம்கற ஒரு விஷயத்தை எல்லாரும் சேர்ந்தே சொல்றாங்க."

"நல்லா கேட்டே போ... சேஷம்னா முதல்ல என்னன்னு தெரிஞ்சுக்கோ."

"என்ன மாமி..."

"சேஷம்னா அந்த பாற்கடல்ல பெருமாள் படுத்து இருக்காரே... அஞ்சுதலை நாகத்து மேல. அந்த பாம்புக்குப் பேர்தான் சேஷன். அதாவது ஆதிசேஷன்.

கடல்னா உனக்கே தெரியும். அது ஒரு நீர்வெளி. அதுலேயும் பாற்கடல்னா கேட்கவே வேண்டாம். பாலுக்கு 'வெள்ளை ரத்தம்'னு இன்னொரு பேர் உண்டு. மனிதனோட முதல் உணவே அதுதான். மிருகங்களுக்கும் அதுதானே முதல் உணவு! தாய்ப்பால் அருந்தாத ஜீவன் அதிகம் எது?

அப்படி முதல் உணவா– முதல் சக்தியா காலத்துக்குமான தெம்பை கடலளவு கொண்டு, அந்தக் கடல் மேல கருமையான விஷம் கொண்ட பாம்பை சுருண்டு படர வெச்சு அதைக் கட்டிப்

போட்டு- அதன் மேலே படுத்திருக்கிறவர்தான் மகாவிஷ்ணு.

பால்ல விஷம் கலந்தா என்ன ஆகும்...?

அதோடு அந்தப் பால் அவ்வளவுதான்... இல்லையா?

அதோடு அந்தப் பால் அவ்வளவுதான்... இல்லையா? இந்த உலகமே பாற்கடல்ல விஷம் கலந்தா என்ன ஆகும்? இந்த உலகமே அவ்வளவுதான்...! அப்படி நிகழாம தடுத்து, கொடிய விஷத்தைக் கொண்ட ஆதிசேஷனையே தன் படுக்கையா ஆக்கியவர் பெருமாள். ஆக, சேஷன்னா அடங்கிக் கிடப்பவன். கொடிய விஷம் உள்ள பாம்பு கொத்தினா உடனடியாக மரணம்தான். அதுவே சீறினா... எல்லோருக்கும் பயம். அது எதுவும் செய்யாம அடங்கிக் கிடந்தா, அதன் மேல் பயம் கலந்த மரியாதை நமக்கு வரும் இல்லியா?

அதனாலதான் விஷமான சேஷன் விஷம் விடாததால, அதைத் தனக்குள்ள அடக்கிட்டதால விசேஷன் ஆனான்.

அப்படியே விசேஷம்கிற வார்த்தைக்கு வா. தப்பு இல்லாத ஒண்ணு... துளி தவறிட்டாலும், பெரிய தப்பாயிடற ஒண்ணுன்னு இரண்டு பொருள் விசேஷம்கற வார்த்தையில இருக்கு.

இப்ப நெய் விளக்குக்கு வருவோம்.

நெய் அப்படீங்கறது என்ன?

பாலுக்குள்ள ஒளிஞ்சிருக்கற ஒண்ணு. பால், ஒரு திரவம். குளிர்ச்சியானது. ஜீவனுக்கு ஆதாரமானது. இதுக்குள்ள இருக்கற நெய்யை அப்படியே எடுக்க முடியாது. கடைஞ்சுதான் எடுக்கணும். ஒரு முயற்சி வேணும். அதாவது, பாலை முதல்ல கறக்கணும். பிறகு காய்ச்சணும். அப்புறம், அதோடு மோரைச் சேர்த்து உறை கட்டணும். காத்திருக்கணும். தயிரான அதை மத்தால கடைஞ்சு, அதுக்குள்ள இருந்து வெண்ணெயைப் பிரிச்சு எடுக்கணும். அதுக்கும் பிறகு வெண்ணெயை உருக்கினா நெய் வரும்.

அதாவது முதல் கட்டம் பசு. அடுத்த கட்டம் பால். அதுக்கு அடுத்த கட்டம் காய்ச்சுதல். நாலாவதா உறை கட்டுதல். அஞ்சாவதா தயிர் ஆக்குதல். ஆறாவதா தயிரைக் கடைதல். ஏழாவதா வெண்ணெய் எடுத்தல். எட்டாவதா வெண்ணெயை உருக்குதல். ஒன்பதாவதா கையில் அகப்படுறதுதான் நெய்.



மனித வாழ்க்கையில எதுலேயும் ஒன்பது நிலை உண்டு. கிரகங்களும் ஒன்பதுதான். இதுல நெய், சூரியனோட அம்சமாகும். நாம அத்தனை பேரும் சூரியன்லே இருந்து வந்தவங்கதானே? இந்த பூமி... இதுல வாழற உயிர்கள்... எல்லாம் சூரிய ஒளி இல்லேன்னா வாழ முடியுமா?

கண்ணுக்குத் தெரியற கடவுளர்கள் சூரிய- சந்திரர்கள்தானே? மனசுல ஒரு ஒளி இருந்தா- இருள் விலகி நிம்மதி. நல்ல அறிவாளியை 'ஞான ஒளி உள்ளவர்'னு சொல்றோம் இல்லையா?"

சமையல்கார மாமியின் விளக்கத்திற்குள் நந்தனா தன்னையே தொலைத்திருந்தாள்.

"அடேயப்பா... நெய் என்கிற ஒரு வஸ்துவுக்குப் பின்னால் இவ்வளவு விஷயங்களா?"

அவள் முகத்தில் பிரமிப்பு பெருகி வழிந்தது.

"என்ன நந்தா பாக்கறே...? நான் இன்னும் முழுசா சொல்லி முடிக்கலை. 'ஒன்பதாவது கட்டத்துல கிடைக்கற நெய், ஒளி தரும் சூரியனோட அம்சம்'னு சொன்னேன். அந்த சூரியனை நானோ, நீயோ நெருங்க முடியாது. ஆனா, இந்த சூரியன் நாம நெருங்க முடிஞ்ச அம்சம். இப்படியொரு சூரியனைக் கொண்டு திருச்சந்நதியில் விளக்கு போடும்போது, அதன் ஒளியிலேயும் பல ஜீவ வாயுக்கள் உற்பத்தி ஆகிறது.

இடியும், மின்னலும் இல்லேன்னா எப்படி மேகத்தால மழையைத் தர முடியாதோ... அப்படியே நெய் விளக்கும், அதோட வாயுக்களும் இல்லேன்னா- அங்கே இருக்கற சான்னித்தியம் நமக்கு வசப்படாது.

நெய் விளக்கு ஏற்றப்பட்ட இடத்துல நல்ல மணம் இருக்கும். எல்லாத்துக்கும் உச்சமா நெய் வேணும்னா, பசு வேணும். பசுவை நல்லா கவனிச்சுக்கிட்டாதான் நமக்கு நெய் கிடைக்கும்.

பசு ஒண்ணும் சாதாரண ஜீவன் இல்லை. இதோட உடம்புக்குள்ள முப்பத்து முக்கோடி தேவர்களும் இருக்காங்கன்னு சொல்வாங்க. அதனாலதான் அதோட சிறுநீர்கூட மருந்தா பயன்படுது. மற்ற மூத்திரம்லாம் நாறும். புழு, பூச்சிகளை

உருவாக்கும். இரும்பு பெருகும். ஆனா, பசுவோட மூத்திரத்துல அப்படி நிகழாது.

பசுவோட பால், அதோட மூத்திரம், தயிர், நெய், மோர் – இந்த ஐந்தையும் சம அளவு கலந்து செய்யற ஒரு வஸ்துவுக்கு 'பஞ்ச கவ்யம்'னு பேர். இதைத் தோட்டத்துல செடிகொடிகள் மேல தெளிச்சா, அதெல்லாம் நல்லா செழிப்பா வளரும். அங்க கிருமிகள் வராது. செடி- கொடிகளும் ஒரு பங்குக்கு இரு பங்கு விளைச்சல் தரும்."

– மாமி ஒரு மாதிரி பேசி முடித்தாள்.

நெய்யில் தொடங்கியவள் பஞ்ச கவ்யத்தில் முடித்தாள்.

"மாமி... அப்ப மாடுகள்ல பசுக்களுக்குத்தான் முதல் மரியாதையா? காளைமாடு வெறுமனே உழைக்க மட்டும்தானா?" – என்று அவன் கேட்டான்.

"நீ எங்கே வர்றேன்னு எனக்குத் தெரியுது. பசுவுக்கு ஒரு தூண்டுதலுக்கும், அது கன்று போடவும் காளைன்னு ஒண்ணு வேணுமே! பசுவுக்குள் எல்லாம் அடக்கம். ஆனா, அந்தப் பசு ஒரு காளைகிட்ட அடங்கினாதான் இன்னொரு பசுவோ, இன்னொரு காளையோ உருவாக முடியும். யோசிச்சு பாரு..."

"அதனால..."

"அதனாலதான் அந்த சர்வேஸ்வரன், காளையைத் தன் வாகனமா – தன்னையே தாங்கற ஒரு சக்தியா ஆக்கிட்டான்."

"ரொம்ப சந்தோஷம் மாமி... 'ஸ்டார்ட், ரெடி, ஆக்ஷன் கேமரா'– அப்படிங்கற சத்தத்தையே கேட்டுகிட்டு இருந்த எனக்கு உங்களால இன்னிக்கு நிறைய விஷயங்கள் தெரியவந்தது. இனி எந்தக் கோவிலுக்குப் போனாலும் சுத்தமான நெய்யைக் கொண்டே நெய் விளக்குப் போடுவேன். அந்த விளக்கு ஒளி பல இருளைப் போக்கட்டும். போங்க... போய் முதல்ல நெய்யை தயார் பண்ணுங்க. நானும் கிளம்பறதுக்குத் தயாராகறேன்..."

ஒருவித புதுத் தெளிவுடன், குளியல் அறை நோக்கி நடந்தான் அவன்.

மாமியும் 'சர்வேஸ்வரா' என்று நெகிழ்வுடன் கன்னத்தில் போட்டுக்கொண்டாள். அவளுக்கு நந்தீஸ்வரரின் கருணையும்



நந்தனாவுக்கு அவர் அருளிய வேகமும் சிலிர்ப்பை உண்டு பண்ணி இருந்தது.

தன் வாழ்நாளில் மாமி, நந்தி பகவானிடம் எந்த வேண்டுதலும் வைத்ததில்லை. நந்தனாவுக்கு நிகழ்ந்த வேகம், அவளுக்குள்ளும் ஒரு புதிய கோரிக்கையை எழுப்பி இருந்தது.

நந்தி தரிசனம் செய்யும்போது 'அந்த'க் கோரிக்கையை அதன் காதில் போட்டுவிடத் தீர்மானித்தவளாக சமையல் அறை நோக்கி விறுவிறுவென நடந்தாள் மாமி!

## 5

இந்த உலகில் படைக்கும் தொழிலுக்கு அதிபதி பிரம்மன்தான். கவிஞர்கள், கதாசிரியர்களும் பிரம்மாக்களே. ஏனென்றால், இவர்களும் சுயமாக இவர்களுக்குள் இருந்து படைப்பதால்... இவர்கள் வரிசையில் ஓவியர்களும், சிற்பிகளும்கூட சேருகின்றனர். ஆனால் ஓவியன், எழுத்தாளன், கவிஞனைவிட சிற்பி சற்று பின்தங்கியே நிற்கிறான். மற்றவர்கள் பல காட்சிகளை மனதில் தூண்ட வல்லவர்கள். ஆனால், சிற்பியோ ஒரு காட்சியாக ஒரே ஒரு உருவத்தை மட்டும் மன[illegible] நிறுத்துவான்.

ஒரு சி[illegible] என்பதும் ஜடமாகவே கருதப்படுகிறது. பார்ப்பவர்கள் மனங்களில்தான [illegible]து பலவித எண்ணங்களை ஏற்படுத்துகிறது. இந்த விஷயம், சிற்பி [illegible]ச்சனை வெகுவாக சிந்திக்க வைத்தது. 'உயிரைக் கொடுத்து வடிக்கும் [illegible] சிலையை, உயிரல்லாத ஜடம் என்று கூறி விடுகின்றார்களே' என்று [illegible]சித்தவன், கற்சிலைக்கும் உயிர் கொடுக்க தீவிரமாக சிந்தித்தான்.

அப்போதுதான் அவன், 'உயிர் என்பது ஓயாமல் இய[illegible] ஒன்று' என்று கண்டுகொண்டான். அது ஓயாமல் இயங்க- நிற்காமல் [illegible] வேண்டும் என்பதையும் அறிந்தான்.

உடம்பில் ரத்தம் நிற்காமல் ஓடும் வரைதான் இதயமும் இயங்கும். இது இயங்குவதால் அது ஓடுகிறது. அது ஓடுவதால் இது இயங்குகிறது என்று எப்படி வேண்டுமானாலும் வைத்துக்கொள்ளலாம்.

ஒரு கச்சிலைக்குள் அப்படி ஓயாது இயங்கும் விஷயத்தையும், ஓயாமல் ஓடும் அச்சத்தையும் புகுத்த வழி இருக்கிறதா என்று யோசித்தான்.

ஆஸ்பத்திரிக்குள் நுழைந்த சிவப்பிரகாசம் முகத்தில் நிறையவே பீதி. அதை நாகநாதன் பிள்ளையின் மனைவி லட்சுமி துல்லியமாகவே கவனித்தாள்.

பிள்ளையும் கலங்கிப் போய் படுத்திருந்தார். அவரும் சிவப்பிரகாசத்தின் பீதி நிரம்பிய முகத்துடன் பார்த்து, உள்ளுக்குள் பயந்தார்.

"அண்ணே... என்னண்ணே ஆச்சு? ஏண்ணே ஒரு மாதிரி இருக்கீங்க...?"

"ஒண்ணுமில்லம்மா..."

"அப்புறம் எதனாலண்ணே வேலாயுதம், இந்த நேரத்துல- 'எனக்கு வேலையே வேண்டாம்'னு போனான்?"

"சொல்றேம்மா... சொல்றேன்"- சிவப்பிரகாசம் அவளை சமாதானப்படுத்திக்கொண்டே, நாகநாதன் பிள்ளையிடம் சென்றார்.

கோணிய வாயுடன் அவர் பார்த்த விதமே கண்றாவியாக இருந்தது.

'சிவா... சிவா...' என்று அவர் சிவப்பிரகாசத்தை ஆசையாகக் கூப்பிடுவார். இப்போது அந்த இரண்டெழுத்து வார்த்தைகூட அவர் நாவில் அகப்பட மறுத்தது. 'ஹி... ஹி... ஹி...' என்ற கோணிய உதடுகளுக்குள் ஒரு விதக் காற்று சப்தம்.

"நாகநாதா... பயப்படாதே! விடைதாங்கி கிராமத்துக்குப் போனப்போ நடந்த சம்பவத்தை டிரைவர் வேலாயுதம் முழுசாவும் சொன்னான். என்னால முதல்ல நம்ப முடியலை. நீ மோதி காயப்படுத்திய மாடு, இப்ப இந்த ஆஸ்பத்திரி வாசல்லதான் இருக்கு. அதுக்கு ஏற்பட்ட பாதிப்புதான், உனக்கும் எதிரொலிச்சு- நீயும் இப்படி படுத்த படுக்கையாகிட்டே. போனா போகட்டும். அடுத்து என்ன செய்யறதுன்னு பார்ப்போம்."

படுக்கையில் கிடந்த தன் கணவரிடம் சிவப்பிரகாசம்



சொன்னது லட்சுமிக்கு புரியாத புதிரான ஒன்றாகவே இருந்தது.

"அண்ணே, என்னண்ணே சொல்றீங்க மாடு, காயம்னுல்லாம்...?"

"ஆமாம்மா...! விடைதாங்கிங்கற கிராமத்துக்கு நிலம் வாங்கப் போனவன், வர்ற வழியில ஒரு மாடு மீது காரை ஏத்தி அதைக் காயப்படுத்திட்டான்."

"ஐயோடா..."

"இப்ப கத்தி என்னம்மா பிரயோஜனம்? அங்க மாட்டுக்கு கால் போச்சு. இங்க இவனுக்கும்..."

"அப்படியா... கால் போன மாடு இப்ப இங்க வந்துருக்கறதா சொன்னீங்க..."

"ஆமாம்மா... அடிபட்ட பாம்புதான் சும்மா விடாது. கத்தி வரும்னு கேள்விப்பட்டு இருக்கேன். முதல் முறையா, அடிபட்ட ஒரு மாடும் அப்படி வரும்கறது இப்பத்தான் எனக்கே தெரிய வந்துருக்கு..."

"என்னால நம்ப முடியலையே..."

"நான் அதையும் கடந்த நிலையில இருக்கேம்மா. ஒரு மாட்டு மேல காரை ஏத்தினாக்கா- ஏத்தினவன் கை, கால் இழுத்துக்கும்னா, இந்த நாட்டுல ஆயிரக்கணக்கான பேர் கை, கால் இழுபட்டு கிடக்கணும். இதை எப்படி எடுத்துக்கறதுன்னே தெரியலை எனக்கு...?

- சிவப்பிரகாசம் தாராளமாகவே அலுத்துக்கொண்டு, ஏராளமாகவே குழம்பியும் போனார்.

அப்போது திரும்பவும் வேலாயுதத்தின் குறுக்கீடு.

"ஐயா..."

"என்ன வேலாயுதம்?"

"நீங்க என்ன நினைக்கிறீங்கன்னு எனக்கு நல்லாவே தெரியுதுங்க. நான்கூட ஒரு மாடுதானேன்னு சாதாரணமாகத்தான் நினைச்சேன். ஆனா, விடைதாங்கிங்கற ஊர்ல காளை மாடுகளை கடவுளா நினைக்கறாங்க. உங்களுக்கு இன்னொரு ஆச்சரியமான

விஷயத்தையும் சொல்றேன். கேட்டுக்குங்க! அங்க வயல்ல உழறதுக்கு யாரும் காளை மாட்டைப் பயன்படுத்தறதில்லை. எருமையைத்தான் பயன்படுத்தறாங்க."

"அதுக்கு என்ன காரணம்...?"

"அந்த ஊரைப் பொருத்தவரை, காளை மாடுதான் சாமியாம் அதாவது நந்தி..."

"அதுக்கும்,இங்க நாகநாதனுக்கு கை-கால் இழுத்துகிட்டதுக்கும் என்னய்யா சம்பந்தம்?"

"நம்ம முதலாளி பண்ணுனது சாமி குத்தமாச்சுங்களே..."

"என்னய்யா சொல்றே...? சாமி குத்தம்னா-கார் போற வழியில அந்த மாடு மட்டும் கொஞ்சம்கூட நகராமா- நடுரோட்டுல போகலாமா?"

"அதுக்காக அது மேல் காரை ஏத்தலாங்கறது அதிக பட்சம்தாங்களே!"

"அந்த நேரத்துல காரை நீ ஓட்டலைங்கற தைரியத்துல இப்படிப் பேசுறியா?"

"இல்லைங்க... நியாயத்தைப் பேசறேன். எனக்கென்னவோ அந்த மாடு சும்மா விடாதுன்னுதான் தோணுது."

"அட போய்யா...! சினிமாவுலகூட நான் இப்படி எல்லாம் பார்க்கலை..."

– இருவரும் மாறி மாறி பேசிக்கொள்ள, இடையில் லட்சுமி சரேலென்று அந்த இடத்தைவிட்டுக் கிளம்பிவிட்டாள். அவள் நடையில் ஒரு அசாத்திய வேகம்.

ஆஸ்பத்திரியைவிட்டு வெளியே சென்றவள்– வேப்ப மரத்தின் அடியில் நிற்கும் அந்த மாட்டை உற்றுப் பார்த்தாள்.

அதன் பின்தொடையில் சிவப்பாக ரத்தம் உறைந்துபோயிருந்தது. முன் காலிலும் நல்ல சிராய்ப்பு.கண்கள் பளபளவென்று கறுப்பு முத்து போல மின்னிக்கொண்டிருந்தன.

மூக்குப் பாகம் வியர்த்து, நீர்ப் பொட்டுகள் தெரிந்தன. நல்ல விடைத்த கொம்புகள். அவற்றில் கத்தி போல் கூர்மை.



லட்சுமி அதன் முன்னால் நின்று, கண்ணீர் திரள கைகளைக் கூப்பினாள். அப்படியே மண்டியிட்டு தரையோடு தரையாக முட்டிக்கொண்டு அழத் தொடங்கிவிட்டாள்.

நிமிர்ந்து பார்த்தவளுக்கு ஆச்சரியமாகிவிட்டது.

அதுவரை அங்கே நின்றுகொண்டிருந்த காளையைக் காணவில்லை. நாலா பக்கமும் பார்வையை வீசி வீசிப் பார்த்தவள், கண்களைத் துடைத்துக்கொண்டே திரும்பும்போது, ஆஸ்பத்திரி வாசலில் நின்றிருந்த 'செக்யூரிட்டி' அவளை சற்று விநோதமாகப் பார்த்து– 'யாரைம்மா பார்க்கறீங்க... யாரைத் தேடுறீங்க?'– என்று கேட்டான்.

"இங்க ஒரு மாடு நின்றுகிட்டு இருந்துச்சே... அதைக் காணோமேன்னு பார்த்தேன்."

"எங்கம்மா... இங்கே எந்த மாடும் வரலியே..."

"இல்லையே... கால்ல ரத்தக்கட்டோட நின்னுகிட்டு இருந்ததை நான் பார்த்தேனே?"

"நீங்க மரத்தடில வெறும் தரையில கும்புட்டு விழுந்ததை நானும் பார்த்தேன். வேப்ப மரத்தைக் கும்புடறதால்ல நினைச்சேன்?"

– அவன் சொல்லச் சொல்ல லட்சுமிக்குக் குழம்பியது.

அது எப்படி தன் கண்ணில்பட்ட மாடு அவன் கண்ணில் படாமல் போனது? தொடர்ந்து அவனிடம் பேசாமல் அந்தக் குழப்பத்தோடு உள்ளே நுழைந்தாள்.

'வார்டு'க்குள் நுழைந்தவள் எதிரில் சிவப்பிரகாசம்.

"எங்க லட்சுமி போயிட்டே?"

"அந்த மாட்டோட கால்ல போய் விழுந்துட்டு வர்றேன் அண்ணே..."

"நினைச்சேன். அது உன்னை எதுவும் பண்ணலியே?"

"நந்தி சாமின்னே... கும்பிட்டு விழறோம். அப்படி இருக்க அது என்ன பண்ணிடும்?"

"சரி, இப்பவும் இருக்கா?"

"இல்லண்ணே... கும்பிட்டு எழுந்து பார்த்தா அதைக் காணோம்."

"அப்படியா... எல்லாமே மாயமா இருக்குல்ல?"

"மாயமாவா...? என் கண்ணுக்குத் தெரிஞ்ச அந்த மாடு, மத்தவங்க கண்ணுக்குத் தெரியலை. 'செக்யூரிட்டி' என்னைப் பார்த்து, 'என்னங்க... மரத்தைப் போய் கும்புடுறீங்க?'ன்னு கேக்கறான்."

"அப்படியா?"

"ஆமாண்ணே... எனக்கென்னவோ நந்திசாமி, நான் கால்ல விழவும் சமாதானம் ஆகிட்ட மாதிரி தெரியுது. இருந்தாலும் இன்னொரு எண்ணம்."

"என்னம்மா?"

"விடைதாங்கி ஊருக்கே நேர்ல போய் அங்கே நந்திசாமிக்கு அபிஷேக அர்ச்சனை பண்ணி பரிகாரம் தேடிக்கலாம்னு பார்க்கறேன்."

"நானும் கிட்டத்தட்ட அப்படித்தான் நினைச்சேன். இந்த சிக்கலுக்கு எல்லாம் விடை, விடைதாங்கி கிராமத்துலதான் இருக்குது."

"அப்ப நாளைக்கே ரெண்டு பேரும் அந்த ஊருக்குக் கிளம்புவோமா?"

"நிச்சயமா...! எங்கே அந்த வேலாயுதம்...?" – சிவப்பிரகாசம் கேட்கும்போதே அவன் அங்கு ஆஜரானான்.

"வேலாயுதம், வேலையை விட்டெல்லாம் போகாதே. விடைதாங்கிக்கு நாளைக்கு போறோம். அம்மா சொன்னதைக் கேட்டேல்ல. அங்கே போய் அபிஷேக ஆராதனை செய்யறோம். நீ சொன்ன மாதிரி இது சாமி குத்தம். அதை பரிகாரங்களாலதான் நேர் பண்ணிக்க முடியும்."

– பதிலுக்கு வேகமாகத் தலையை ஆட்டினான் டிரைவர்.

அதே வேளையில், சிவப்பிரகாசம் மனதுக்குள் மட்டும் வேறு மாதிரியும் ஒரு எண்ணம்!



# 6

தேவதச்சன், சிற்ப சாஸ்திரத்தின் எல்லா நுணுக்கங்களையும் கற்றுத் தேர்ந்துவிட்டான். ஒரு சிற்பம் செதுக்க எப்படிப்பட்ட கற்களைத் தேர்வு செய்ய வேண்டும் என்பதில் இருந்து, முதலில் எந்த பாகத்தில் இருந்து சிற்பத்தைத் தொடங்க வேண்டும் என்பது வரை அவ்வளவையும் அனுபவபூர்வமாகவே அறிந்துகொண்டவன், உயிருள்ள உருவங்களைப் போலவே சிலைகளை வடித்துக் காட்டினான். முகத்தில் குறுநகை– கோபம், கண்களில் ஆவேசம்– கேலி என்று எல்லா உணர்வுமே அவன் உள் மூளையில் சாத்தியமாயிற்று.

பார்ப்பவர்கள், 'தத்ரூபமாக உள்ளது' என்று பாராட்டினார்கள். ஆனால், அவைகளுக்கு உயிர் கொடுத்து உலவ வைக்க முடியவில்லையே என்கிற ஒரு கவலையும், எதிர்பார்ப்பும் அவனை ஆட்டிப் படைத்தது. அவன் ஏற்கெனவே 'உடம்புக்குள்– அதாவது தேகத்துக்குள் இடையறாது ஓடும் ஒரு விஷயம்தான், இயங்கும் விஷயமாக மாறி உயிரைப் பிடித்து வைத்து இயக்குகிறது' என்பதை அறிந்திருந்ததால்... கற்சிலைக்குள் ஓடும் விஷயமாக எதைப் புகுத்துவது என்கிற கேள்வி அவனுக்குள் பிரதானமாயிற்று.

கற்சிலைக்குள் வெற்றிடமே கிடையாது... எனவே, அதனுள் எதையும் புகுத்த முடியாதே என்றே முதலில் கருதினான். அப்போதுதான் அவனுக்கு விடைதாங்கியின் விடையே விடையாகக் கிடைத்தது.


அது என்ன விடை?

மீண்டும் நந்தனா.

இந்த முறை அவள் வெகு எளிமையாக– நூல் சேலையைக் கட்டிக்கொண்டு, ஒரு நடுத்தட்டு குடும்பப் பெண் போல் இருந்தாள். சுத்தமாக 'மேக்கப்' எதுவுமே இல்லாத முகம்.

ஊன்றி கவனித்து 'நீங்க நந்தனாதானே? என்று யாராவது கேட்டால்கூட– 'சேச்சே நானில்லை...' என்று சமாளித்துவிடலாம்.

கோவிலுக்குள் அவளும், மாமியும் நுழைகிறபோது





அப்படித்தான் ஆகிவிட்டது. ஒரு ரசிகன் அவளை அடையாளம் கண்டுகொண்டு, அவள் பின்னாலேயே நடந்தான். அவள் நின்றால் அவனும் நின்றான். அவள் நடந்தால் அவனும் நடந்தான். அவளுக்குள் குமுறிக்கொண்டு வந்தது.

மாமியின் காதைக் கடித்தாள்.

"மாமி... ஒருத்தன் பின்தொடர்ந்து வர்றான்."

"நீ விடு... நான் பார்த்துக்கறேன்."

மாமி அவளிடம் சொன்ன கையோடு, அவனை அருகில் அழைத்தாள்.


ராணி முத்து

சந்தா விவரம்

| | |
|---|---|
| இரண்டு ஆண்டு | ரூ. 275 |
| ஒரு ஆண்டு | ரூ. 150 |
| ஆறு மாதம் | ரூ. 80 |

வெளிநாடுகள்

| | |
|---|---|
| ஒரு ஆண்டு | ரூ. 1,225 |
| ஆறு மாதம் | ரூ. 615 |

பணம் அனுப்பவேண்டிய முகவரி:

மேலாளர்,
'ராணி முத்து',
சென்னை-600 007.


"யாருப்பா நீ... என்ன வேணும் உனக்கு?"

"மேடத்தோட கையெழுத்து."

"இவ கையெழுத்து உனக்கு எதுக்கு?"

"என்னம்மா நீங்க... மேடம் யாருன்னு நான் கண்டுபிடிச்சிட்டேன்."

"யாரு?"

"இவங்க நடிகை நந்தனாதானே?"

"நினைச்சேன். இப்படித்தான் ரொம்ப பேர் கேக்கறாங்க. இவ நந்தனா கிடையாது. தெரியாத்தனமாக அவளோட ஜாடையில பொறந்துட்ட வசந்தி இவ..."

"வசந்தியா...?"

"ஆமா...! போய் உன் வேலையைப் பாரு. நந்தனாவே வந்தாலும், அவ பின்னாடி சுத்தாதே. நடிகை பின்னால சுத்தினா

உருப்படாமத்தான் போவே."
- மாமி ஒரு போடு போட்டு அனுப்பி வைத்தாள்.

நந்தனாவுக்கு 'அப்பாடா' என்று இருந்தது.

சந்நிதியை நெருங்கும்போது நல்ல வேளையாக சொற்ப கூட்டம்தான் இருந்தது. தலையில் முக்காடு போட்டுக்கொண்டிருந்ததால், அவர்களில் யாரும் நந்தனாவை அடையாளம் கண்டுகொள்ளவில்லை. ஒரு வாண்டு மட்டும் திரும்பித் திரும்பி பார்த்துக்கொண்டே போனான்.

"டி.வி.யில் பார்த்த ஆண்ட்டி"- என்று அவன் குறிப்பிடுவது தேய்ந்து போய் அவள் காதிலும் விழுந்தது.

"சினிமாவைவிட இப்ப டி.வி.தான் ரொம்பவும் சக்தி வாய்ந்ததா இருக்கு"- என்று முணுமுணுத்துக்கொண்டே முக்காடை விலக்கினாள்.

குருக்கள் அடையாளம் கண்டுகொண்டார்.

"வாங்கோ... வாங்கோ... நீங்கதானா?" என்று விஸ்தாரமானார்.

"ஆமாம்... நந்தனாவோட வேண்டுதல் பலிச்சிடுச்சி. அவளுக்கு அப்படி ஒரு சந்தோஷம். அர்ச்சனை பண்ணி, காணிக்கை செலுத்திட்டுப் போகத்தான் வந்துருக்கா..." என்றாள் மாமி.

பேச்சோடு அவள் கைகள்- அர்ச்சனை பிரசாதமான தேங்காய், பழம், பூ ஆகியவற்றை எடுத்து தட்டில் வைத்து நீட்டினாள். குருக்களும் வாங்கிக்கொண்டார். முகத்தில் ஏராளமான புன்னகை.

"எனக்குத் தெரியும்... எங்க சாமி முதல் முதலா யார் எதைக் கேட்டாலும் அள்ளிக் கொடுத்துடுவாரே! என்ன... உங்களோட ஜோடியா தொடர்ந்து நடிக்கற சிவராஜையே கல்யாணம் பண்ணிக்கணும்னு வேண்டிண்டேளாக்கும்..." - என்று அவராக ஒரு விஷயத்தைக் கேட்டார்.

நந்தனாவுக்கு பகீர் என்றது.

மாமிக்கோ அப்படிக்கூட அவள் கேட்டிருக்கலாம் என்று தோன்றியது.



நந்தனா மலங்க மலங்க மாமியைத்தான் பார்த்தாள்.

"நீங்க சரியா சொன்னேள்... நந்தனா சினிமாவுல நடிச்சாலும், ரொம்பக் கட்டுப்பாடானவ. நெருப்பு மாதிரி இருந்தாலும், நடிகைன்னாலே கல்யாணம்னு வரும்போது ஒரு சந்தேகம் சங்கடம்லாம் வந்துடறது. பத்து பேருக்கு, ஒருத்தரோட வாழ்க்கைதான் நல்லபடியா இருக்கு. நந்தனாவுக்கும் நல்ல பிள்ளையாண்டான் மாப்பிள்ளையா வரணும்கறதுதான் பிரார்த்தனை"- என்று மாமி ஒரு மாதிரி பேசி முடித்தாள்.

"மாப்பிள்ளை யார்... சிவராஜ்தானே?"

"அதான் இல்லை...! கூட நடிச்சா கல்யாணம் பண்ணிக்கணுமா என்ன? இந்த மாப்பிள்ளை பிள்ளையாண்டான் வேற ஒருத்தன்."

"என்கிட்ட கூடச் சொல்லக் கூடாதாக்கும்?"

"இல்லை... சொன்னா தெரியாது. இந்த புள்ளையாண்டான் அமெரிக்காவுல இருக்கான்."

"அப்படியாக்கும். ரொம்ப சந்தோஷம்..." என்றபடி அர்ச்சனை செய்ய உள்ளே அவர் சென்றார்.

நந்தனாவோ மாமியை அதிர்ச்சியையும், ஆச்சரியத்தையும் கலந்து வைத்துப் பார்த்தாள்.

மாமி தன் உதட்டில் கையை வைத்து, "அமைதியாகக் கும்பிடு. எல்லாம் எனக்குத் தெரியும்" என்றவாறே அவளை ஒரு மாதிரியாகப் பார்த்தாள்.

குருக்கள், அர்ச்சனையை முடித்தார்.

வெளியே வந்து பிரசாதத்தையும் தந்தார்.

நந்தனா தட்டில் நூறு ரூபாயைப் போடவும்- சற்று பதறிப் போய், "முதல்ல பணத்தை எடுங்க...." என்றார்.

"ஏன்?"

"அர்ச்சனைக்கு இங்க 18 ரூபான்னு ஒரு கணக்கு இருக்கு. அதுக்கு மேல வேண்டாம். நாங்க வாங்கவும் கூடாது" என்றார்.

"போன தடவை வந்தப்ப தட்டுல 500 ரூபா போட்டேளே...

அப்ப நீங்க ஒண்ணும் சொல்லலியே?" தனியா

"நான் அப்ப கவனிக்கல. ஆனா, அந்தப் பணத்தை தனியா எடுத்து வெச்சுட்டேன். இருங்கோ வர்றேன்" – என்று உள்ளே போய் அந்த 500 ரூபாய்த் தாளையும் எடுத்து வந்தார்.

"ஏன் இப்படி...? இது என்ன 18 ரூபாய் கணக்கு?"

அவன் விடவில்லை.

"வாங்கோ... அம்பாளை சேவியுங்கோ. அப்படியே நந்திஸ்வரரையும் சேவிச்சுட்டு வாங்கோ. பிறகு விபரமா சொல்றேன்"– என்றபடி அம்பாள் சந்நதி நோக்கி நடந்தார்.

பல தலைமுறைக்கு முந்தைய– கடந்த கால ஆலயம். எங்கு பார்த்தாலும் கருங்கற்கள்தான். நடக்கிற நடை தளத்தில் இருந்து, சுவர்கள் வரை அவ்வளவும் சிறந்த வேலைப்பாடுடன் செதுக்கப்பட்டிருந்த கருங்கற்களாக இருந்தன. அவைகளில் ஏராளமான கல்வெட்டுச் செய்திகள்.

பெரிய அளவில் மின்விளக்கு இல்லை. நேரம் இருட்டி இருந்தது. வவ்வால் அடைந்திருந்ததால், அதன் கழிவுகள் ஒரு வித நாற்றமாக மூக்கை நிரடியது.

"பார்த்து வாங்கோ..." என்று முன்னால் நடந்தார்.

அம்பாள் சந்நதியில் அர்ச்சனையையும் முடித்தார்.

இறுதியாக நந்திஸ்வரர் சந்நதிக்கு வந்தனர்.

ஒரு வெட்ட வெளியில்– தனியாக ஒரு கல் மண்டபத்துக்குள் நந்தியம் பெருமானுக்கு சிலை.

எல்லாக் கோவில்களிலும் லிங்கத்தைப் பார்த்தபடியேதான் அவர் அமர்ந்திருப்பார். இங்கே மட்டும் திரும்பி– வாயில் கதவைப் பார்த்தபடி அமர்ந்திருந்தார். நந்தியின் பின்பாகம்தான் லிங்கத்தைப் பார்த்தபடி இருந்தது.

நந்தனாவுக்கு அதற்கான காரணத்தை எல்லாம் கேட்கத் தெரியவில்லை. ஆனால், நந்திஸ்வரரைப் பார்க்கவும் அவள் மனதில் பக்திப் பரவசம். கடந்த முறை வந்தபோது அந்த தாதா விஷயம் மனதை அழுக்கிக் கொண்டிருந்தது. இம்முறை காற்று போல லேசாக இருந்தது... அவளது மனம். நிம்மதி என்பதற்கு



அர்த்தம் அங்கே இருப்பது போன்று கூடத் தோன்றியது.

மாமி, பிரசாதக் கூடையை நந்தனா கையில் கொடுத்துவிட்டு நேராக நந்திஸ்வரர் முன் சென்று சாஷ்டாங்கமாக மண்டியிட்டு விழுந்து வணங்கினாள். பின் எழுந்து அதன் காதருகே சென்றவள், லேசாகக் கண் கலங்கினாள்.

'என்னை சீக்கிரம் கூட்டிக்கோ...' என்று மரணத்தைத் தான் ஒரு வரமாகக் கேட்க நினைத்திருந்தாள்.

ஆனால், குருக்கள் நந்தனாவின் கல்யாணம் பற்றிப் பேசி அவள் மனதை மாற்றிவிட்டிருந்தார்.

'தனக்காகக் கேட்டால்தான் வரமா என்ன...? நந்தனாவும் தன் பேத்தியைப் போலத்தான்... அவளுக்கொரு நல்ல வாழ்க்கை அமைய வேண்டும். விதி அவளை நடிகையாக்கி கண்ட கண்ட தாதாக்கள் எல்லாம் மிரட்டிப் பணிய வைக்க வேண்டிய ஒரு சூழலை உருவாக்கிவிட்டது. அதில் இருந்து அவள் மீள வேண்டும். நடிகையாகி சம்பாதித்தது போதும். அவளுக்கு ஒரு நல்ல குடும்ப வாழ்க்கை வேண்டும்' என்று மனதார வேண்டிக்கொண்டாள்.

ஒரு பெண்ணுக்குத் தாய்தான் பரிபூரணம். அதற்கடுத்து, அதை ஒரு கணவனால்தான் தர முடியும். அந்தப் பரிபூரணத்தைத் தருவதால்தான் கணவன் என்பவன் ஒரு பெண் வரையில் உயிரைவிட மேலானவனாக ஆகிவிடுகிறான்.

மாமிக்கும் திருமணம் ஆயிற்று. ஆனால், அதற்கு அடுத்த ஆண்டே மாமியின் கணவரை காசநோய்– கூடவே 'பிளேக்' வேறு வந்து கொண்டு போய்விட்டது.

அந்தக் காலத்தில் 'பிளேக்' நோய் படுத்தியபாடு கொஞ்ச நஞ்சமில்லை. குடும்பத்திற்கு ஒருவர் அதனால் இறந்திருந்தனர்.

ஆசாரமான குடும்பம். வைதிகமும், கட்டுப்பாடும் பிரதானமான வாழ்க்கை வேறு. எனவே, எவரும் மாமிக்கு மறுமணம் என்பது பற்றி நினைக்கவில்லை. அதனாலேயே பிள்ளை குட்டி என்று எதுவும் அவளுக்கு இல்லாமல் போய்– அப்படியும் இப்படியும் ஆற்று வெள்ளம் போலப் புரண்டு புரண்டு ஓடியது அவளது வாழ்க்கை.

அவளுக்கு நிறைய துன்பத்தைத் தந்த அதே விதி... அவளுக்கென பிரத்தியேகமாக கை மணத்தைத் தந்திருந்தது. ஒரு கறிவேப்பிலையைக் கிள்ளிப் போட்டு அவள் துவையில் அரைத்தாலும், அதில் அதிக வாசம் வீசியது. புளியைக் கரைத்து அதில் ஒரு சிட்டிகை மிளகுத் தூளைப் போட்டு இறக்கினாலும் அந்த மணம் ஊரையே கூட்டும்படி இருந்தது. அந்த வித்தைதான் நந்தனா வீட்டில் அவளை சமையல்காரி ஆக்கியது.

நந்தனாவுக்குத் தாய்– தந்தை இல்லாததால் மாமியால் அந்த ஸ்தானத்திலும் நடமாட முடிந்தது.

இப்போது அவளுக்கு மாமிதான் எல்லாம்... அப்படிப்பட்ட பெறாத ஒரு மகளுக்காக நந்திஸ்வரனிடம், ‘அவளுக்கொரு நல்ல கணவனைத் தந்து, இந்த நடிப்பு வாழ்க்கையில் இருந்து விடுதலை வாங்கிக் கொடு...’– என்று கேட்பதில் தவறில்லை என்று எண்ணியவள், அதையே நந்திஸ்வரர் காதிலும் பிரார்த்தித்து முடித்தாள்.

குருக்கள் வந்து சேர்ந்தார்.

பேசத் தோதாக இருந்தது, கல் மண்டபம் .

“கொஞ்ச நேரம் உட்கார்ந்து பேசலாம் இல்லையா?” என்று கேட்டபடியே போய் அமர்ந்தார்.

நந்தனாவும், மாமியும் சற்றுத் தள்ளி அருகருகே அமர்ந்துகொண்டனர்.

“இப்ப கேளுங்க... உங்க கேள்விகளை...”– அவரே ஆரம்பித்து வைத்தார்.

“இல்லை... இந்த 18 ரூபாய்ங்கறது என்ன கணக்கு?”

“ஒரு நபர் 18 ரூபாயை அர்ச்சனை வரியா செலுத்தினா போதும்கறது உத்தரவு. இந்த சந்நதியில் சேவைதான் பிரதானம். தப்பித்தவறி எதுவும் இங்கே வருமானம்கற கோணத்துல போய்டக்கூடாது.”

“நீங்க கேட்டாதான் தப்பு... நாங்களா கொடுத்தாக் கூடவா?”

“நிச்சயமா...! பணம் அதிகமா வந்தா ஆசையும் அதிகமாகும். டிவி., பிரிட்ஜ்னு வாங்கச் சொல்லும். ஆச்சாரத்தைவிட்டு



வெளியே போவோம்.

“ டி.வி., பிரிட்ஜ் எல்லாம் இன்னிக்கு அவசியம் ஆச்சே. விஞ்ஞானம் நமக்குத் தந்திருக்கற வரப்பிரசாதம்தானே அவைகள் எல்லாம்...”

“நாங்க அப்படி நினைக்கல. நடுவீட்டுக்குள்ள நுழைஞ்சு மனசைக் கெடுக்கற ஒரு வஸ்து, டி.வி.. ‘பிரிட்ஜ்’ எல்லாத்தையும் பாதுகாக்கறதா சொல்றேள். ஆனா, உண்மையில அது பழசைத்தான் நமக்குத் தருது. காயோ, தயிரோ, பாலோ– மிச்சம் வைக்காம அப்பப்ப சாப்பிடணும். வீணா போறதுன்னு அதை ‘பிரிட்ஜ்’ல வெச்சு– அதோட இயல்பைக் கெடுத்துடறோம்.

உண்மையில அப்பப்ப பறிக்கும் காய்கறிக்கும், அப்பப்ப கறந்த பாலுக்கும் இருக்கற சக்தியும், ஜீவனும் ‘பிரிட்ஜ்’ல வெச்ச சரக்குக்குக் கிடையாது. உடல் நலத்துக்கு மட்டும் அது கேடு இல்லங்க... எந்த ஒரு உணவுப் பொருளையும் அதிக நேரம் வெச்சு சாப்பிடவே கூடாது. சமைச்ச நாழிகையில இருந்து மூணு நாழிகைக்குள்ள அதை சாப்பிட்டாகணும். அப்பத்தான் அது மருந்து... இல்லேன்னா அதுவே விஷமா மாறிடுது.”

– குருக்கள் சொல்வதை அவளால் ஏற்க முடியவில்லை. அதேநேரம், மறுக்கவும் முடியவில்லை.

அப்போது வயதான பெரியவர் ஒருவர், கோவிலுக்குள் குருக்களைத் தேடிக்கொண்டு வந்தார்.

“யப்பா சுந்தரா... சுந்தரா...”

“நான் இந்த கல் மண்டபம்கிட்ட இருக்கேன் மாமா.”

“உன்னைப் பாக்கத்தான் வந்தேன். ஆமா... நந்திக்கு சாத்த வேண்டிய மருந்து வந்துடுத்தா?”

“வந்துடுத்து மாமா... அதை பத்திரமா மடப்பள்ளியில வெச்சிருக்கேன்...”

“பார்த்து... ராத்திரி கதவை அடைக்கறதுக்கு முந்தி அதை கவனமா பூசிடு. குறிப்பா... கண்ணை நல்லா கட்டிடு. இல்லேன்னா அவர் பாட்டுக்கு கிளம்பிப் போயிடப் போறார்.”

“நான் பார்த்துக்கறேன் மாமா... இருந்தாலும் உங்களுக்கு ரொம்பத்தான் நம்பிக்கை.”

சிறுகதை

# பிதாமகள்

புவனாவின் வீட்டுக்குப் போய் வந்ததில் இருந்து, அகிலத்தின் முகம் இயல்பாகவே இல்லை!

"என்ன அகிலம் உர்ருன்னு இருக்கே?"- கேட்டார் வேலுமூர்த்தி.

"என்ன இருந்தாலும் நம்ம பொண்ணு இப்படி பண்ணி இருக்கப்படாது!"

"ஏன்?"

"பின்ன என்னவாங்க...? எப்பவோ போறோம்; ஒரு சாம்பார் வச்சு, பொரியல் பண்ணி, அப்பளம் பொரிச்சுப் போட்டா என்ன? மாப்பிள்ளைக்கு கொடுத்த எலுமிச்சைச் சாதத்தையே, பேருக்கு ரெண்டு கரண்டி வச்சா. காப்பிகூட போடாம, வெறும் தண்ணியைக் கொடுத்து அனுப்பிட்டாளே மகராசி!" என்றாள், அங்கலாய்ப்பாக.

"எனக்கு ரொம்ப பெருமையா இருக்கு" என்றார் வேலுமூர்த்தி.



"என்ன சொல்றீங்க?"

"ஆமாம்! திடுதிப்புன்னு போய் நாம நின்னப்போ, தாகத்துக்கு நல்ல தண்ணீர் கொடுத்தா. பாலை கொடுங்க, சர்க்கரை கொடுங்கன்னு அக்கம் பக்கம் போய் நிக்கலியே! கடன்னு கேட்டு அடுத்த வீட்டு குத்துச் செங்கல் மிதிச்சா, அது அகவுரவம். அப்பாவுக்கு அது கட்டோட பிடிக்காதுன்னு சரியாய் புரிஞ்சு, உன்னைக் கொண்டு சமத்தா குடும்பம் பண்ணுறா பாரு. கெட்டிக்காரிடி அவ!" என்று கணவர் சொல்லவும், அகிலத்தின் முகத்தில் ஆயிரம் கோடி சூரியப்பிரகாசம்.

★

புள்ளமங்கலம் எஸ்.கமலா



## நேரம் காட்டும் பயணச்சீட்டு



விமான டிக்கெட்டை கடிகாரம் போல் கையில் மாட்டிக்கொள்ளலாம். இதில் இருக்கை விபரம் இருக்கும். மற்றொரு பகுதியில், கையில் மாட்டியதும் பாட்டரி இயங்க ஆரம்பித்து நேரத்தையும், மற்ற சில பயண தகவல்களையும் தரும்.

## கருமுட்டை ரூ.50 ஆயிரம்

"மாறி வரும் நாகரீக உலகில், ரூ.50 ஆயிரம் வரை கிடைப்பதால் 33 வயதுக்கு உட்பட்ட பெண்கள் பண ஆசையில் கருமுட்டைகளை அடிக்கடி விற்கிறார்கள். இதனால் உடல் நலம் பாதிக்கும். ஒரு பெண் ஆண்டுக்கு நான்கு முறை வரை கருமுட்டை தானம் செய்யலாம்" என்கிறார் மும்பை மருத்துவரான கேதார்கன்வா.

- அன்புச்சோலை, குன்றூர்.

"என்ன சுந்தரா... உன்னால நம்ப முடியலையா?"

"நம்ப நந்தீஸ்வரர் மகா சக்தி வாய்ந்தவர். அதை மறுக்கலை. அவர் காதுல சொல்றதை கவனமாக கேட்டு நம்ம பிரார்த்தனையையும் ஈடேற்றி வைக்கறார். ஆனா, அதுக்காக வருஷத்துல ஒரு நாள் அவரோட சிலைக்கு உயிர் வந்து– அவர் ஊரைச் சுத்தி நடமாட ஆரம்பிச்சுட்டாருங்கறதை என்னால ஏத்துக்க முடியலை..."

– குருக்கள் சொன்னதைக் கேட்ட அந்தப் பெரியவர் ஒரு அசமந்தச் சிரிப்பு சிரித்தார்.

"சரிப்பா... நீ அப்படியே நினைச்சுக்கோ. அதுதான் இந்த உலகத்துக்கும் நல்லது. அதுக்காக சாமிக்கு மருந்து சாத்தறதையோ, அவர் கண்களைக் கட்ட வேண்டியதையோ மறந்துட்டு வந்துடாதே..." என்றவர்– திரும்பி நந்தீஸ்வரரைப் பார்த்தார்.

கழுத்தில் ஒரே ஒரு அலரிப்பூ மாலையுடன் நந்தீஸ்வரரும் அமர்ந்த கோலத்தில் காட்சி தந்தார்.

பெரியவர் முகத்தில் சட்டென்ற ஒரு அதிர்ச்சி ரேகையின் பரவல்.

விறுவிறுவென்று நந்தீஸ்வரர் சிலையை சமீபித்து, உற்றுப் பார்க்கத் தொடங்கினார்.

அவர் பார்க்க– தொடைப் பகுதியில் ரத்தம் வெளிப்பட்டு, அதுவும் காய்ந்துவிட்டிருந்தது.

பின்னாலேயே போய் நின்ற சுந்தர குருக்களும் அவரிடம், "என்ன மாமா அப்படிப் பார்க்கறேள்...?"– என்று கேட்கவும்–

அவரது ஆட்காட்டி விரல், நந்தியின் தொடைப் பகுதியைக் காட்டியது.

அதில் ரத்த வரிகள்!

"இது...?"

"என்ன இது.... ரத்தம் உறைஞ்ச மாதிரி தெரியலை..."

"ரத்தமா?"

"ரத்தமேதான்..."



"கல்லுல எப்படி மாமா ரத்தம் வரும்?"

"உனக்கு இந்த சிலை வெறும் கல்லு. ஆனா, எனக்குதான் இது எப்படிப்பட்டதுன்னு தெரியும்!"

"என்ன மாமா சொல்றேள்?"

"என்னத்த சொல்ல... சாமி எழுந்து நடமாட ஆரம்பிச்சாச்சு...!"

"என்னது.. நடமாட ஆரம்பிச்சுட்டாரா?"

"ஆமாம். அப்படி நடமாடும்போது அவர் கால்ல அடியும் பட்டிருக்கு. அதைத்தான் இந்தக் காட்சி சொல்லுது."

– அந்தப் பெரியவர் குரல் கமறியது.

ஆனால், குருக்களால். அதை ஏற்றுக்கொள்ள முடியவில்லை!

"சரி மாமா... அதுக்கு நாம என்ன பண்ண முடியும்?"– என்று ஒரு பொதுவான கேள்வியைக் கேட்டார்.

"இல்லப்பா... ஏதோ நடக்கக் கூடாத ஒண்ணு நடக்கப் போறது. ஜாக்கிரதையா இருக்கணும்."

– அவரிடம் முணுமுணுப்பு.

அவர்கள் பேச்சு மாமி மற்றும் நந்தனாவின் காதுகளிலும் விழுந்துகொண்டுதான் இருந்தது. அவள் ஆச்சரியப்படுவது போல நிறையவே நடித்திருக்கிறாள். ஆனால், நிஜத்தில் இப்போதுதான் ஆச்சரிப்பட்டாள்.

மாமி படபடவேன்று கன்னத்தில் போட்டுக்கொண்டாள்.

பெரியவர் திரும்பிச் சென்றதும், மாமியின் அருகில் வந்து நின்றார் குருக்கள்.

"அவர் வடலூர் வரதநம்பிதானே?"

"அவரே தான்... உங்களுக்குத் தெரியுமா மாமி?"

"ஏன் தெரியாம... நானும் இந்த ஊர்தான்..."

"அடடே... சொல்லவே இல்லையே..."

"ஆனா, ஊரைவிட்டுப் போய் ஐம்பது வருஷத்துக்கு மேல் ஆச்சு. இப்ப என் உறவுக்காரருன்னு சொல்லிக்க ஒருத்தர் கூட இல்லை..."

மாமி பதில் அளித்ததோடு, அவர் கொண்டு வந்திருந்த வயர் கூடையில் இருந்து நெய் பாத்திரத்தையும், சில அகல் விளக்குகளையும் வெளியே எடுத்தாள்.

அந்த விளக்குகளை நந்தனா வேகமாக வாங்கி, நந்தீஸ்வரர் முன் வைத்து, அதில் நெய்யை ஊற்றத் தொடங்கினாள்.

"ஒரு பெரிய ஏற்பாட்டோடதான் வந்துருக்கேள் போல இருக்கு..."

"ஆமாம்... எப்பவோ வர்றோம். வந்தா முறையா சாமி கும்பிட்டு போனாத்தானே நல்லது?"

"ஆமாம்... இது என்ன மருந்து, கண் கட்டு?" – நந்தனா கேட்டாள்.

"நாளைக்கு எங்க நந்தீஸ்வரரின் திருநட்சத்திர தினம். முதல் நாள் அவர் மேனி மேல் மூலிகை கலந்த மருந்து பூசிச் சாத்துவோம். சாதாரணமா கற்சிலைகளுக்கு மருந்து சாத்தற வழக்கம் கிடையாது. சுதை ரூபங்களுக்கு மருந்து சாத்தினாதான் உதிராம உறுதியா நிற்கும்.

ஆனா இங்க, கற்சிலையாக வடிவமைக்கப்பட்ட நந்தீஸ்வரருக்கு மருந்து சாத்தற வழக்கம் ரொம்ப நாளா இருக்கு.

அப்புறம், கண்கட்டு. எங்க நந்தி சாமிக்கு திருநட்சத்திரத்து அன்னிக்கு ராத்திரி உயிர் வந்துடறதா ஒரு நம்பிக்கை."

"நிஜமாவா?"

"என்ன நிஜமாவா...! நூறு, நூத்திப் பத்து வருஷத்துக்கு முந்தி இந்த சாமி தினமுமே ராத்திரியானா உயிர் வந்து கிளம்பி வெளியே போயிடுவார். அப்ப ஊர் முழுக்க பச்சைப் பசேல்னு வயலெல்லாம் விளைஞ்சு இருந்தது. இவர் பாட்டுக்கு ஒவ்வொரு ராத்திரியும் ஒவ்வொரு வயல்லுன்னு மேஞ்சுட்டு வந்து திரும்ப இங்க வந்து உக்காந்துடுவார்.

இதனால, ஊர் முழுவதும் ஒரே கவலை. யாரோ பக்கத்து ஊர் திருடர்கள்தான் ராத்திரியானா, வயல்வெளியில புகுந்து கதிர்களை அறுத்து மூட்டை கட்டி எடுத்துட்டுப் போறதா நினைச்சாங்க. இதனால அவங்களைப் பிடிக்க ஒரு ஊர்க் காவல் படையையும் தலையாரி நியமிச்சாராம்.



அந்தப்படை, கையில தடியோட ஊரைச் சுத்தி காவலுக்கு நின்னுது. வயல் வெளியிலேயும் தீப்பந்தங்களோட காவல் நின்னாங்க. திருடங்க யாரும் வரலைன்னாலும்... மறுநாள் காலையில, வயல் வெளியில கதிர்கள் சரிக்கப்பட்டிருந்தது. யாருக்கும் ஒண்ணும் புரியலை. அதே நேரம் கோவில் நந்தி சிலைகிட்ட தானியங்கள் இறைஞ்சி கிடந்திருக்கு. நந்தி சாமி வாய்ப் பகுதியிலேயும் கதிர்த் துண்டுகள்.

ஒரு கற்சிலை வந்து தானியங்களை சாப்பிட்டுப் போகும்கறதை யாராலேயும் நினைச்சுக்கூட பார்க்க முடியலை. இருந்தாலும் கோவில் குருக்களும், தலையாரியும் ஒரு நாள் கோவிலுக்குள்ளேயே ஒளிஞ்சிருந்து கவனிக்க ஆரம்பிச்சிருக்கா.

அவர்கள் பார்க்க... சரியா நடுநிசி வரும்போது எங்கிருந்தோ ஒரு சர்ப்பம் வந்து நந்தி மேல ஏறி படம் எடுக்க ஆரம்பிச்சிருக்கு. அப்படியே உடம்பில பரவின அது, தலையில கொம்பு மேல வளைச்சுக்கட்டி உக்கார்ந்து படம் எடுத்து சீறவும் தொடங்கி இருக்கு. அது நந்தியோட வாய்கிட்ட குனிஞ்சு சீறின மறு நிமிஷம், அந்தக் கல் நந்திக்கு உயிர் வந்து தலையில பாம்போட அது ஓடத் தொடங்கினதாம்.

வாசல் கதவுகிட்ட போய் நிக்கவும், கதவு தானா திறந்திருக்கு. நந்தியும் வெளியேறிடுத்து. ஒளிஞ்சிருந்து பார்த்த தலையாரிக்கும், குருக்களுக்கும் ஒரே ஆச்சரியம். அதிர்ச்சி. இரண்டு பேரும் பின்னாலேயே ஓடி இருக்கா. அப்ப பார்த்து, திடீர்னு மழை வேற. வானத்துல பெருசா இடியும், மின்னலும் வந்தது. அப்ப ஒரு பெரிய இடி இறங்கி தலையாரி மேல விழுந்து, அவர் கருகி கல்லாயிட்டார். குருக்களுக்கு கண் மட்டும் போனதாம்...!"

சுந்தர குருக்கள், அந்த நாளைய கதையைச் சொல்லிவிட்டு அடுத்தடுத்த வேலைகளுக்குத் தயாரானார்.

புறப்பட்டுச் செல்லும்போது, "நான் சொன்னது நிஜமான சம்பவம். ஆனா, இதை கட்டுக் கதைங்கறவளும் இருக்கா..." என்றபடியே ஆதங்கத்துடன் கிளம்பிப் போனார்.

"இந்தக் கதை எனக்கும் தெரியும் நந்தனா. இது உண்மையா, பொய்யாங்கற ஆராய்ச்சி எல்லாம் நமக்கு வேண்டாம். நாம

நம்புவோம். நமக்கு நல்லதே நடக்கும். ஆனா, ஒண்ணு மட்டும் நிச்சயம்! அடுத்து நீ தனியா இந்தக் கோவிலுக்கு வரமாட்டே. நான் சொன்ன மாதிரி ஒரு நல்ல அமெரிக்கக்காரனை கல்யாணம் பண்ணிட்டு, மணப் பெண்ணாதான் வருவே. நீ வேணா பாரேன்...இது நிச்சயம் நடக்கும்" என்றாள்.

மாமியின் வாக்கைக் கேட்டதும், அவளின் கண்கள் கலங்கிவிட்டன.

## 7

அது பல்லவர்கள் காலம்! அக்காலத்தில் தொடர்ச்சியாக ஒரு கட்டத்தில் வறட்சி நிலவியது. மழையே இல்லை. இதனால் பொதுமக்கள் மிகவும் பாதிப்படைந்து பசியாலும், பட்டினியாலும் துடித்தனர். அப்போது ஜோதிடர்கள் சொல்வதைக் கேட்டும், ராஜயோகிகள் சொல்வதை வைத்தும் பல்லவ அரசன் பல்வேறு யாகங்கள், வேள்விகள் செய்தான். அதன் பயனாக மழை பெய்தது.

பெய்த மழை நீரைக் காலகாலத்துக்கும் சேமித்து வைக்க ஏரி- குளங்களை வெட்டினான். அதனால்தான் பல்லவர்களின் ஆளுகைக்கு உட்பட்ட காஞ்சி, செங்கை மாவட்டங்களில் ஏரி - குளங்கள் இன்றும் அதிகமாய்க் காணப்படுகின்றன.

அப்படி ஏரி- குளங்களை வெட்டிய இடத்தில் அவைகளைப் பாதுகாக்க அதன் கரையோரமாகவே கோவில்களையும் உருவாக்கினான். இதற்காக கைதேர்ந்த சிற்பிகளை வரவழைத்து சிற்பக் கூடங்களையும் அமைத்தான். வேலை இல்லை என்று ஒருவரும் சும்மா இருந்துவிடக் கூடாது. அதே நேரம், அரசாங்கம் இலவசமாக சோறிடும் என்றும் கருதிவிடக் கூடாது. எனவே, ஒரு வேலை வாய்ப்பாக ஏரி- குளம் அமைத்தல், கோவில் கட்டுதல் போன்றவை நடைபெற்றன.

இப்படிப்பட்ட கோவில்- குளங்களுக்கு மதிப்பும், மரியாதையும் உண்மையில் சாந்நித்தியம் இருந்தால் மட்டுமே ஏற்படும் என்பதையும்



அந்தப் பல்லவ அரசன் உணர்ந்தி இருந்தான்.

சாந்நித்தியம் இல்லாத கோவில்களைப் பின்னாளில் கள்ளர்கள் களவாடி அழிக்கக்கூடும் என்கிற பயமும் அவனிடம் இருந்தது. அதற்கு என்ன செய்வது என்று யோசித்தபோதுதான், கற்சிலைக்குக்கூட உயிர் அளிக்க முடிந்த ஒரு தவயோகி- காஞ்சிக்கு வந்திருப்பது தெரிந்தது. அப்படி வந்த அவர், விடைதாங்கியில் உள்ள கல் நந்திக்கு 32 லட்சண சிறப்பு இருப்பதைப் பார்த்து, 'இந்த நந்தியை செதுக்கியது யார்?' என்று கேட்டதும் தெரியவந்தது.

அதை செதுக்கியவன் தேவதச்சன் என்கிற சிற்பி ஆவான். அவன் எவ்வளவோ சிற்பங்களை செதுக்கி இருக்கிறான். நந்தியைச் செதுக்கியதை அவன் மறந்தே போனான். ஆனால், அதில் 32 லட்சணங்கள்! இப்படியொரு சிறப்புள்ள சிலைக்குள், நிஜமாலுமே அதற்குரிய தெய்வத்தை நிலைநிறுத்த முடியும் என்பதுதான் சிற்ப சாஸ்திரத்தின் உச்சபட்சமான ரகசியம்.

இரவாகிவிட்டது!

சிவப்பிரகாசமும், லட்சுமியும் விடைதாங்கி கிராமம் நோக்கி காரில் புறப்பட்டனர்.

டிரைவர் வேலாயுதம், காரை ஓட்டிச் சென்றார்.

கோவிலுக்குள் குருக்களிடம் பேசி, விடைபெற்றுச் சென்ற அந்தப் பெரியவரின் வீட்டு முன்தான் அந்தக் கார் போய் நின்றது. காரைவிட்டு இறங்கியவர்களிடம் வேலாயுதம், "ஐயா! இதுதான் நம்ம முதலாளிக்கு நிலத்தை வித்த பெரியவர் வரதநம்பியோட வீடு..." என்றான்.

"சரி, சரி... நீ இங்கேயே இரு. நானும், லட்சுமியும் போய் அவரைப் பார்த்து பேசிட்டு வந்துடறோம். அப்படியே இன்னிக்கு ராத்திரி இங்கேயே தங்கவும், இந்தப் பெரியவர்கிட்டேயே நான் கேட்டுக்கறேன்" – என்றபடியே சிவப்பிரகாசம் அந்த வீட்டுக்குள் நுழைத்தார்.

தாழ்ந்த ஓட்டுச்சரிவு. அதன் மேல் பூசணிக்கொடி! வீட்டினுள் நுழையும்போதே கும்மென்ற ஒரு வித வாசம், மூக்கைத் துளைத்தது.

பெரியவர் வரதநம்பி, தியானத்தில் இருந்தார்.

இவர்கள் இருவரும் உள்ளே வரவும் கண் மலர்ந்தார்.

"நமஸ்காரம்!"

"வாங்க... உக்காருங்க. நீங்க...?"

"என் பேர் சிவப்பிரகாசம். சென்னையில ஒரு தொழிற்சாலை நடத்தறேன். வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி பண்ணுறேன். இவங்க பேர் லட்சுமி. மிருதங்க வித்வான் நாகநாதன் பிள்ளையோட சம்சாரம்."

"ஓ... வித்வான் சம்சாரமா... சந்தோஷம். இது என்ன திடுதிப்னு... ஒரு போன்கூட பண்ணாம?"

"பண்ணுற நிலையில இல்ல. அதான் எதுக்குன்னு நேராவே வந்துட்டோம்."

"பரவாயில்ல... ஆமா, பிள்ளை எங்கே...?"

"பிள்ளை... பிள்ளை..."

"என்ன... மென்று துப்பறேன். அவருக்கு என்ன?"

"அவர் இப்ப ஆஸ்பத்திரியில 'அட்மிட்' ஆகி இருக்கார். அவருக்கு திடீர்னு வலிப்பு வந்து வலது கையும், காலும்..." – அவர் முழுவதுமாக சொல்லி முடிக்கவில்லை.

ஆனால், பெரியவர் புரிந்துகொண்டார்.

"ஈஸ்வரா..." என்று சற்று உரக்கவே கத்தினார்.

முகத்திலும் பலமான வாட்டம்.

லட்சுமியின் கண்களில் சரசரவென்று கண்ணீர் பீறிட்டு வந்தது.

"நீ வருத்தப்படாதேம்மா... பிள்ளை பெரிய இசை மேதை. இந்த ஊர்த் தெய்வமும், இசைத் தெய்வம்தான். நிச்சயம் எங்க சாமி, உங்க வீட்டுக்காரரை விரைவிலேயே குணப்படுத்திடுவார்."

"அந்த நம்பிக்கையிலதான் அவரை ஆஸ்பத்திரியில விட்டுட்டு, பிரார்த்தனை பண்ணிட்டுப் போவதற்காக நாங்க இங்கே வந்திருக்கோம்."

"நீங்க தப்பு பண்ணிட்டீங்க. இங்கே பிரார்த்தனை பண்ணிக்கணும்னா... உரியவா நேர்ல வந்தாகணும். இது



தெரியாதா?"

"அப்படின்னா...?"

"போங்கோ...! போய் எப்படியாவது அவரை உடனே கூட்டிண்டு வாங்கோ..."

"சரி, சாமி. போய் எப்படியாவது அழைச்சிட்டு வர்றோம். இன்னொரு முக்கியமான விஷயம்."

"என்ன?"

"அவருக்கு எதனால இப்படி ஆச்சுன்னு தெரிஞ்சா உங்களுக்கே அதிர்ச்சியா இருக்கும்."

"எதனால?"

"உங்களைப் பார்த்துட்டு, உங்க நிலத்தையும் வாங்கிட்டு திரும்பற வழியில– அவரே காரை ஓட்டிட்டு வந்திருக்கார். அந்த நேரத்துல ஒரு மாடு வழி விடாம நடு ரோட்டிலேயே போய் இருக்கு..."

சிவப்பிரகாசம் 'மாடு' என்று கூறவும், பெரியவர் நிமிர்ந்து அமர்ந்தார்.

"இவரும் 'ஹாரன்' அடிச்சு அடிச்சு பார்த்துட்டு, வெறுத்துப் போய் அந்த மாட்டு மேல இடிச்சு தள்ளிட்டு காரை ஓட்டிக்கிட்டு வந்துட்டார்."

"ஈஸ்வரா..." – திரும்பவும் பெரியவர் உதட்டில் ஒரு பலமான முனகல். அதிர்ச்சி ரேகைகள்.

"அவர் ஒண்ணும் வேணும்னு பண்ணலை. அந்த மாடுதான் வழி மறிச்சி இருக்கு..."

"அந்த சம்பவத்துக்குப் பிறகுதான் அவருக்கு அப்படிப்பட்ட ஒரு நிலை வந்ததா?"

"ஆமா."

"இப்பதான் தெரியறது... கோவில்ல நந்தியோட சிலையில கால் பாகத்துல எப்படி ரத்தம் வந்ததுன்னு..."

"என்ன சாமி சொல்றீங்க?"

"நான் என்னத்த சொல்வேன்! பல வருஷம் கழிச்சு, எங்க ஊர் சாமி எழுந்து நடமாட ஆரம்பிச்சிருக்கார். அது உண்மைன்னு

இப்ப நீங்க வந்து சொல்லிட்டீங்க.."

"சாமியா?"

"ஆமாம்... அந்த நாகநாதன் பிள்ளை கொடுத்து வெச்சவர். அதான் நந்தீஸ்வர தரிசனம் அவருக்குக் கிடைச்சிருக்கு. என் நிலத்தை வாங்கின அவர்கிட்ட, 'கோவிலுக்குப் போய் நந்தியோட காதுல நிலம் வாங்கின விஷயத்தைச் சொல்லிட்டுப் போ'ன்னு சொன்னேன். இது, இந்த ஊர் வழக்கம்.

ஏன்னா... இந்த ஊர் நிலம் அவ்வளவுமே ஒரு காலத்துல சிவன் கோவில் சொத்தாதான் இருந்தது. அதை மனுஷக் கூட்டம் தனித் தனியா முடிஞ்ச வரை அபகரிச்சு, தனித் தனியா வேலியும் போட்டுக்கிட்டாங்க. இதனால கோபப்பட்ட ஒரு சன்னியாசி, 'சிவன் சொத்து குலநாசம்'னு சொல்லி எல்லா நிலத்தையும் கோவிலுக்கே திருப்பிக் கொடுத்துடச் சொன்னார்.

'அது எப்படி? அப்புறம் நாங்க எப்படி ஜீவிக்கிறது'ன்னு எல்லாரும் திரும்பிக் கேட்டாங்க. 'சரி... அந்தப் பரமன் உங்களுக்கே அதைக் கொடுத்துட்டதா நினைச்சுக்கிறேன். ஆனா, விளையற தானியத்துல ஒரு பங்கைத் தவறாம கோவிலுக்கு எல்லாரும் கொடுத்துடணும்'னு அவர் சொல்லிட்டு– சத்தியமும் வாங்கிக்கிட்டார்.

அப்படி சத்தியம் வாங்கிக்கிட்டவர்– கோவிலுக்கு உள்ளதான் போனார். ஆனா, அவரை அதன்பிறகு எங்கே தேடியும் கண்டுபிடிக்க முடியலை. பிறகுதான் தெரிஞ்சது, அந்த ஈஸ்வரனேதான் அப்படி வந்தவன்னு..."

பெரியவர் வரதநம்பி தன் நீண்ட பேச்சுக்கு இடையில் ஒரு வாய் தண்ணீரை மொண்டு உதட்டை நனைத்துக்கொண்டு திரும்பவும் பேசத் தொடங்கினார்.

"அதன் பிறகு எல்லாரும் விளையற தானியத்துல சரி பாதியை கோவிலுக்குன்னு கொடுக்க ஆரம்பிச்சாங்க. கோவில்லயும் ஆறு காலமும் பூஜை நடந்தது. விமரிசையா திருவிழாக்களும், அன்னதானங்களும்கூட நடந்து வந்தது.

ஆனா, இது கலிகாலமாச்சே! நல்லது தொடர்ந்து நடந்துடக் கூடாதே. தலைமுறைகள் மாறினதுல– கோவிலுக்கு ஒரு பாகம்



கொடுக்கறதுங்கறது மெல்ல நிக்க ஆரம்பிச்சிச்சு. இந்த நேரத்துல திரும்பி வந்த அந்தப் பெரியவர், எங்க கோவில்ல உள்ள நந்தியோட மூக்குல– உயிர்க் காற்றை ஊதிட்டுப் போயிட்டார். அது என்னடான்னா நள்ளிரவானா நந்திக்கு பிராணன் வந்து– உயிர்த்தெழுந்து கிளம்பிடும். ஊர்ல இருக்கற எல்லா விளைஞ்ச நிலத்துலேயும் பூந்து அவ்வளவையும் மேஞ்சே அழிச்சார் எங்க நந்தி சாமி.

அதை முதல்ல ஊர்ல எல்லாரும் திருடுன்னு நினைச்சது ஒரு கதை. பிறகு, உண்மை தெரியவந்து– சாமி கால்ல போய் விழுந்தாங்க. திரும்பவும் வந்தார், அந்தப் பெரியவர்.

'இனி யாரும் தப்பே செய்யக்கூடாது'ன்னு சொல்லிட்டு– அந்த நந்தி உடம்புல ஒரு சிறு ஓச்சம், அதாவது ஊனத்தை உருவாக்கிட்டார். கூர்ந்து பார்த்தா சுவாமி கால் நகம் ஒண்ணு பிய்ந்த மாதிரி இருக்கும். இதனால '32 லட்சணம்'கறது 31 ஆனது.

அதன்பிறகு சாமிக்கு உயிர்ப்பு ஏற்படலை. இது வரலாறு! ஆனா, சமீபமா அவர் நடமாடுற மாதிரி நானும் உணர்ந்தேன். ஒவ்வொரு நூறு வருஷத்துக்கும் ஒரு முறை எப்படியாவது அந்த கல்சிலை எழுந்து நடமாடும்படியா ஏதாவது ஒரு சம்பவம் நடந்துடறது.

இப்ப அப்படி நடமாடும்போதுதான், நாகநாதன் பிள்ளை கண்ணுலேயும் பட்டுருக்கார். ஆனா, பிள்ளை அதை ஒரு சாதாரண வண்டி மாடா நினைச்சுட்டார்."

பெரியவரின் பேச்சு, சிவப்பிரகாசத்தைச் சற்று திக்குமுக்காட வைத்துவிட்டது. முகத்தில் நம்ப முடியாத தன்மை.

"என்னங்க... புராணக் கதை மாதிரி இருக்கா?"

"ஆமாம். கற்சிலைக்கு உயிர் வந்ததா கதைகள்லகூட நான் படிச்சதில்லை."

"அப்ப நீங்க அப்படியே நம்பிக்கை இல்லாமலே இருங்க. ஏன்னா... எங்க சாமியோட சக்தியைப் பிறரிடம் பெருமையாச் சொல்லிக் கொண்டாடவோ, அவருக்கு உயிர் வர்றது பட்டவர்த்தனமாகவோ தெரியக்கூடாதுங்கறது இங்க

சம்பிரதாயம்..."

"ஏன் அப்படி?"

"சரிதான்... இப்பவே நந்தீஸ்வர சாமி காதுல நம்ம கவலையை சொன்னா, அவர் தீர்த்து வைப்பாருன்னு ஒரு நம்பிக்கை. அதுக்காக பலரும் எங்கிருந்து எல்லாமோ வர்றாங்க. உண்மையில நந்தி காதுல நம்ம உதடோ, மூச்சுக் காத்தோ படவே கூடாது. அது மகாதோஷம்.

காதுல சொல்லி வேண்டுதல் வைக்கிற வழக்கம், இப்ப இடைக் காலத்துல வந்ததுதான். போகட்டும். பக்தியோட பண்ணுறாங்கன்னு அதை அனுமதிக்கிறோம். அதே சமயம் அதை ஒரு தடவைதான் அனுமதிக்கிறோம். இரண்டாவது தடவை சொன்னா... நடக்கறதும் இல்லை.

முதல் தடவை சொல்றது நடக்குதுங்கறது வெளியே பரவினா— அப்புறம் இங்க திருப்பதி மாதிரி கூட்டம் சேர்ந்துடும். ரொம்ப கஷ்டப்பட்டு சில புனிதங்களைக் காப்பாத்திட்டு வர்றோம். அதெல்லாம் மனித இனத்தோட ஆசாபாசங்கள்கிட்ட சிக்கி சின்னா பின்னமாயிடும்."

"இது எனக்கு சரியாப்படலை. கடவுளுக்கும், மனிதனுக்கும் நடுவுல நீங்க யார்— சம்பிரதாயம்கற பேர்ல தடை போட...?"

"நான் போடலை...! இப்படி போடச் சொன்னது பெரியவங்க. அவங்க பேச்சை கேக்காம போகும்போது, கஷ்டம்தான் பட்டிருக்கோம்."

"இப்ப உலகம் இருக்கற இருப்புக்கு ஜனங்களுக்கு கடவுள் அருள் பெரிய அளவுல தேவைப்படுது. எய்ட்ஸ் அது இதுன்னு எவ்வளவோ கொடிய நோய்கள் ஆட்டிப் படைக்குது. இப்படிப்பட்ட சூழ்நிலையில இருக்கிற ஜனங்க, இங்கே வந்து விமோசனம் அடைஞ்சா நல்லதுதானே?"

"நல்லதுதான்...! ஆமா, நீங்கதான் இந்த விஷயத்தை தொடக்கத்திலேயே நம்பலையே...? அப்புறம் எதுக்கு இவ்வளவு பேச்சு?"

— பெரியவரின் அந்தக் கேள்வி முன்னால், சிவப்பிரகாசம் சற்று திணறித்தான் போனார்.



அதுவரை பொறுமையாக இருந்த லட்சுமி இடையிட்டாள்.

"சாமி... என் வீட்டுக்காரருக்கு குணமாகணும். அவர் ஏதாவது தப்பு பண்ணி இருந்தா மன்னிப்பு கேட்டுக்கிறேன். நான் இப்பவே போய் அவரைக் கூட்டிக்கிட்டு வந்துடறேன்" என்று புறப்படவும் தயாரானாள்.

"முதல்ல அதைச் செய்யம்மா. நீ அவரோடு வா. அவர் பெரிய மேதை. அவரது விஷயத்துல என்ன செய்யணும்னு எனக்குத் தெரியும். நான் பார்த்துக்கிறேன்" என்றார், பெரியவர்.

சிவப்பிரகாசம் மட்டும் மனதுக்குள் சிரித்துக்கொண்டார்.

## 8

ஒரு தவயோகி— காஞ்சிக்கு வந்திருப்பதும், அவர்தான் பயணத்தில் விடைதாங்கி ஆலயத்துக்குச் சென்று அங்குள்ள 32 லட்சணமுள்ள நந்தியைப் பார்த்து வியந்த செய்தியும் தேவதச்சனை அடைந்தது. உடனே அவனும், அந்த நந்தி உள்ள கோவிலுக்கு வந்து சேர்ந்தான்.

அன்று நந்தீஸ்வரர் திருநட்சத்திர தினம்!

இரவு நேரம். அந்த தவயோகி, தேவதச்சனை மட்டும் வைத்துக்கொண்டு— நந்தியின் மூச்சுத் துவாரத்தில் சில மந்திரங்களை ஜெபித்தபடியே ஊதினார்.

என்ன ஆச்சரியம்!

அதன் கல் உடம்பில் மெல்லிய அசைவும், ஒரு சூடு பரவுவதையும் தேவதச்சன் பார்த்து விக்கித்துப் போனான்.

நந்தனாவின் பங்களா.

பரபரப்பான காலைப் பொழுது. ஒரு படப்பிடிப்புக்காக வெளியே செல்லத் தயாராக அவளது கார் காத்து நின்றது. அவளுடைய உதவியாளர் வெங்கட்பாபு, வரும் தொலைபேசி அழைப்புகளுக்கு பொறுமையாக பதில்

சொல்லிக்கொண்டிருந்தான். 'மெயின் கேட்'டுக்கு வெளியே சில ரசிகர்கள் குத்துப்பார்வை பார்த்தபடி நின்றிருந்தார்கள்.

அவனது கார் வரும்போது, அதன் பின்னாலேயே திபுதிபு என்று ஓடுவார்கள். தலையெழுத்து! அவன் உள்ளே இருந்தபடியே 'டாட்டா' காட்டுவான். அன்றும் அப்படி நடக்கும்போல இருந்தது.

நந்தனா அன்றைய காட்சிக்குரிய ஒப்பனை அலங்காரத்தை வீட்டிலேயே போட்டுக்கொண்டிருந்தாள். 'மேக்கப் மேன்' சந்திரபாபு மிகுந்த திறமைசாலி. கிழவியைக்கூட குமரியாக்கத் தெரிந்தவன். நந்தனாவை ஒரு தேவதை ஆக்கினான்.

அப்போது அவனது உதவியாளருக்கு ஒரு தொலைபேசி அழைப்பு வந்தது. வந்த எண் புதிதாக இருந்தது.

"ஹலோ... யாருங்க...?"

"நான் யாருங்கறது அப்புறம் இருக்கட்டும். நந்தனாவை கவனமா இருந்துக்க சொல்லுங்க. அவங்க உயிருக்கு சிலர் குறி வெச்சிருக்காங்க."

"போவ் யாருப்பா நீ... என்னய்யா குண்டத் தூக்கிப் போடுறே?"

"நான் போடலை... ஆனால், அவங்க ஓட்டுற காருக்குள்ள குண்டைத் தூக்கிப் போட்டாலும் போடுவாங்கன்னு சொல்ல வந்தேன்."

"நீ யாருப்பா?"

"சரிதான். இந்த மாதிரி செய்தி சொல்ற எந்த நபர்யா தன் பேரைச் சொல்லி இருக்கான்?"

"சரி, உனக்கு எப்படி இது தெரியும்?"

"அதெல்லாம் உனக்குத் தேவையில்லை. நந்தனாவுக்கு தாதாக்கள் மிரட்டல் இருக்குதானே?"

"இந்த தாதாக்கள் யாரைத்தான் மிரட்டலை?"

"எனக்கு இந்தக் கேள்வி அவசியமில்லை. அப்படி மிரட்டின ஒரு தாதாவோட செயல்தான், இது. ஜாக்கிரதை. நானும் போனை வெக்கறேன்..."



– மறுமுனை முடங்கிவிட்டது.

ஆனால், உதவியாளர் வெங்கட்பாபு முகம்தான் எண்ணெயில் பொரித்த கருவாடு போல ஆகிவிட்டது.

திபுதிபுவென்று நந்தனாவின் அறையை நோக்கி ஓடினான். கதவை அவனது பாணியில் ஒரு மூன்று செல்லத் தட்டு தட்டிவிட்டு உள்ளே நுழைந்தான்.

அப்போது கழுத்துக்குக் கீழ், மார்புக்கு மேல் ரோஜா நிற திரவத்தை பூசிக்கொண்டு இருந்தான், 'மேக்கப் மேன்'. மார்பு முட்டுக் கொடுத்தது போல நிமிர்ந்திருந்தது.

வெங்கட்பாபுவுக்கு அந்தக் காட்சி திண்டாட்டத்தை அளித்துவிட்டது.

"என்ன வெங்கட்?"

– அவள், தலையைக் கோதியபடியே கேட்டாள்.

"மேடம்... ஒரு கெட்ட செய்தி..."

"என்ன, படப்பிடிப்பை தயாரிப்பாளர் ரத்து பண்ணிட்டாரா?"

"அதெல்லாம் இல்ல மேடம். இது ரொம்ப ரொம்ப கெட்ட செய்தி."

"என்னன்னு சொல்லுப்பா."

"..............."

"போவ் சந்திரபாபு... கொஞ்சம் வெளியே போய்யா."

– உடனேயே அவன் சற்று முறைத்தபடியே வெளியேறினான்.

"மேடம்... திரும்பவும் தாதா தொல்லை..."– வெங்கட்பாபு சொன்ன நொடியில், நெஞ்சில் முள் குத்தியது போன்ற உதறலுடன் விருட்டென எழுந்தாள் அவள்.

"ஆமாம் மேடம். ஒரு மர்ம தொலைபேசி அழைப்பு வந்தது. எதிர்ல பேசினவன் தன்னைப் பற்றி எந்தத் தகவலையும் சொல்லலை. 'உங்க நந்தனாவை கொல்லப் போறாங்க. அவங்களை ஜாக்கிரதையா இருக்கச் சொல்லு'ன்னு சொல்லிட்டு, இணைப்பை துண்டிச்சிட்டான்."

"போன் பண்ணது யார்?"

"தெரியலை. பேரைக் கேட்டேன். சொல்ல மாட்டேனுட்டான்."

-அந்த நொடி அவளுக்கு குப்பென்று வியர்த்தது.

சட்டென்று மாமி நினைவுக்கு மாறியவள், அவளைத் தேடி சமையல்கட்டுக்கு சென்றாள்.

"மாமி... மாமி..."

"என்ன நந்தா...?"

"என்ன மாமி இது...! நான் நிம்மதியாவே இருக்க முடியாது போலே இருக்கே...?"

"விஷயத்தைச் சொல்லு."

"திரும்பவும் மிரட்டல்... இந்தத் தடவை என்னைக் கொலை செய்யப் போறாங்களாம்..."

"யாரு?"

"வேற யார் மாமி? எல்லாம் அந்த மும்பை தாதாக்கள்தான்..."

"கொல்ற அளவுக்கு நீ என்னடி குத்தம் பண்ணினே?"

"தெரியலியே...! என்ன மாமி இது... நந்தீஸ்வரரைக் கும்பிட்டுட்டு தெம்பா வந்தா, எனக்கு அடி மேல் அடி விழுதே?"

"அசடே... அவசரப்படாதே! ஆமா, இது விஷயமா போலீசுக்கு போன் பண்ணியா?"

"இல்லே... போன் பண்ணனுமா மாமி?"

"பின்ன... போன தடவை படுக்கக் கூப்பிடான். அது வெளிய தெரிஞ்சா அசிங்கம். இது கொலை மிரட்டல்ல...?"

"அப்ப போன் பண்ணி சொல்லிடவா?"

அவள் கேட்க—

"அவசியமில்லை" என்றபடியே வெங்கட்பாபு.

"மேடம்! உதவி கமிஷனர் ரவிபிரகாஷ், இப்ப அவராவே லைன்'ல வந்தார், 'என்னய்யா... ஏதாவது மிரட்டல் வந்ததா?'ன்னு கேட்டாரு."



"மாமி...! நமக்குத் தகவல் தந்தவன், போலீசுக்கும் தகவல் சொல்லி இருக்கான்."

"சரி... நீ என்ன சொன்னே?"

"நான் என்ன சொல்ல முடியும்? ஆமாம் சார்! ஆனால், மேடம் தைரியமா இருக்காங்கன்னு சொன்னேன்."

"அட என்ன நீ... இவளுக்கு போலீஸ் காவல் வேணும்னு கேக்கறதுக்கு என்ன?"

"நான் கேக்கவே வேண்டாம். போலீஸ் காவல் வந்துட்டே இருக்கு. ஏ.சி. ரவிப்பிரகாஷ், மேடம் கூடவேதான் இருக்கப் போறாராம். அது, கமிஷனர் உத்தரவாம்..."

– வெங்கட்பாபு சொல்லிவிட்டு விலகிக்கொண்டான்.

ஆனால், நந்தனா அழுதாள்.

"ஏன்டி அழறே?"

"அழாம...? நான் யாருக்கு என்ன கெடுதல் செய்தேன்?"

"இப்ப என்ன ஆயிடுத்து? இதெல்லாம் நல்லதுக்காகக்கூட இருக்கலாம். நீ சும்மா இரு."

"எப்படி மாமி? எவ்வளவு நாளைக்குத்தான் நான் போலீசோடு இருக்க முடியும்? இதுல எனக்கு நல்லபடியா கல்யாணமாகி 'செட்டில்' ஆகணும்னு நீங்க பிரார்த்தனை வேற பண்ணிகிட்டு இருக்கீங்க. உங்க பிரார்த்தனையோட லட்சணத்தைப் பாருங்க."

"அவசரப்படுறே நந்தனா நீ. என் பிரார்த்தனை வீண் போகாது. உனக்குக் கல்யாணம் ஆகும். நல்ல மாப்பிள்ளை வந்தே தீருவான் பாரு."

"எனக்கு நம்பிக்கை இல்லை. என்னோட காசு, பணம், இளமைக்கு குறி வைச்சு எவனாவது வரப் போறான். எனக்கும் வேற வழி கிடையாது. அதுவரை நான் உயிரோட இருப்பேனோ... இல்லை, கொல்லப்படுவேனோ... யாருக்குத் தெரியும்?"

– நந்தனா உச்சபட்சமாக புலம்பினாள்.

மாமிக்கே அது பெரிய அவஸ்தையாகத்தான் இருந்தது.

தனக்கு ஒரு முடிவு ஏற்பட வேண்டும் என்பதைக்கூட பின்னால்

தள்ளி வைத்துவிட்டு, அந்த நந்தியின் காதில் பக்திபூர்வமாக வேண்டிக்கொண்டது இப்படியா தப்பாக எதிரொலிக்கும்?

மாமியே கூட ஒரு கணம் கலங்கி, நம்பிக்கை இழந்து நொறுங்கித்தான் போனாள்.

ஆனால்...?

## 9

அந்த தவயோகிக்கும், தேவதச்சனுக்கும் எதிரிலேயே கல் நந்தி உயிர் பெற்று எழுந்தது. கழுத்து மணிகள் கிணுகிணு என்று சப்தம் எழுப்பின. அதன் கருமுத்துக் கண்கள், திமுதிமு எனப் பார்க்க, அதன் மதர்த்த திமில் குலுங்க அங்கிருந்து ஓடத் தொடங்கியது. அந்த தவயோகியோ நந்தி தரிசனம் கிட்டிய பூரிப்பில் தன்னை மறந்து கைகளைக் கூப்பினார். தேவதச்சன் பிரமிப்பில் புதைந்து போய் இருந்தான்.

கண் விழித்த தவயோகி கூறினார்.

"மகனே... நீ நிகரில்லாத சிற்பி. உன் உளிகளில் பிரம்மன் வசிக்கிறான். அதனால்தான் இப்படியொரு நந்தியை செதுக்கினாய். நீ உடல் தந்தாய். நான் அதற்கு மந்திரக் காற்றால் உயிர் தந்தேன். கைலாயத்து நந்தி எம்பெருமான், நான் ஜெபித்த மந்திரத்தின் பொருட்டும்... உனது பெருலட்சணங்களின் பொருட்டும் இதனுள் புகுந்து புறப்பட்டுவிட்டார். காணக் கிடைக்காத காட்சி இது!" என்றார்.

தேவதச்சனும் கண்ணீர் மல்க வணங்கி நின்றான். மீண்டும் அந்த யோகி- மந்திரம் ஜெபிக்க, அந்தக் காளை திரும்பி வந்து அந்தப் பீடம் மேல் அமர்ந்து கல் ஆனது.

"மகனே... மந்திரக் காற்றை இதனுள் செலுத்த நீ கற்றுக்கொண்டால் போதும். நந்தி எம்பெருமான் இங்கே உன் முன் விடையாகத் தோன்றுவார். இவரது செவிகள், பிறர் குறை தீர்க்கும் செவிகளாகவும் திகழும்" என்று கூறிவிட்டு தேவதச்சனுக்கு மந்திரக் காற்றைப் புகுத்தும் உபாயத்தையும் கற்றுத் தந்தார்.



நள்ளிரவு. மணி பன்னிரண்டு!

புழுதி பறக்க நாகநாதன் பிள்ளையின் கார், பெரியவர் வரதநம்பியின் வீட்டு முன் நின்றது.

வாதத்தால் இழுத்துக் கொண்டுவிட்ட கால்- கைகளோடு, வேலாயுதம் கைத்தாங்கலாகப் பிடித்துக்கொள்ள- பிள்ளையும் ஒரு வித பரபரப்போடு இறங்கினார்.

அவர்களின் வருகைக்காகவே பெரியவரும் காத்திருந்தார்.

அந்த இரவுப் பொழுதில் வரதநம்பியைப் பார்த்த பிள்ளைக்கு கண்களில் நீர் கோர்த்துக்கொண்டது. நின்றபடியே விசும்பி அழத் தொடங்கினார். கோணிய வாயோடு அவர் அழுவது, மேலும் விகாரமாக இருந்தது.

"அழாதீங்க பிள்ளை... காரணம் இல்லாம எதுவும் நடக்கலை. அமைதியா இருங்க"- என்று அவரை இன்னொரு பக்கமாக தாங்கிப் பிடித்து வீட்டினுள் அழைத்துச் சென்றனர்.

கிராமத்து வீடு!

சிறிய குண்டு 'பல்பு' வெளிச்சம். மஞ்சள் பூசினது போல அறை. தரையில் பாய் விரித்து, தலையணையைப் போட்டு- பிள்ளையைப் படுக்க வைத்தனர்.

அவரைக் கவலையோடு பார்த்தனர் எல்லோரும். லட்சுமி முகத்தில் சுத்தமாக பொலிவு போய், எண்ணெய்ப் பிசுபிசுப்பு காணப்பட்டது. அலைச்சலால் ஏற்பட்ட களைப்பும் முகத்தில் தெரிந்தது.

சிவப்பிரகாசத்தையும், லட்சுமியையும் கொல்லைப்புறமாகக் கூட்டிச் சென்றார் வரதநம்பி. அங்கு ஒரு சிறிய குண்டு 'பல்பு'தான் எரிந்துகொண்டிருந்தது.

கதவைத் திறந்ததும் அவர்களுக்கு அதிர்ச்சி. சில அடி தூரத்தில் உள்ள வழித்தடத்தில் ஒரு நாகம் படுத்துக் கிடந்தது. இவர்கள் கதவைத் திறந்த சத்தம் கேட்டதும், விருட்டென்று தலையைத் தூக்கியது.

அந்தக் காட்சியைப் பார்த்ததும் சிவப்பிரகாசத்திற்கு நெஞ்சுக்குள் யாரோ ஒருவர் கம்பியைச் செருகினது போலத்தான்

இருந்தது. ஆனால், வரதநம்பிக்குள் அப்படியெல்லாம் திடுக்கிடல் ஏதுமில்லை. லட்சுமி கிட்டத்தட்ட பயத்தில் சுருங்கிப் போனாள்.

ஏதோ பழக்கப்பட்ட பாம்பிடம் பேசுவது போல வரதநம்பி, "போடா... போ. நடக்கிற பாதையிலேயா இப்படி வந்து படுப்பே...?" என்று கேட்க, அவரது சொல்லுக்கு கட்டுப்பட்டது போன்று அந்தப் பாம்பும் அங்கிருந்து விலகி பக்கத்து மருதாணிச் செடிப் புதருக்குள் புகுந்து மறைந்தது.

அந்த நொடியில் வரதநம்பியை ஒரு சகஜமான மனிதராக சிவப்பிரகாசத்தால் பார்க்க முடியவே இல்லை.

"நீங்க பயப்படாதீங்க... இது மனைப் பாம்பு. ராத்திரியில அது பாட்டுக்கு எல்லா இடமும் திரியும். ஆனா, யாரையும் தீண்டாது" என்று சாதாரணமாகச் சொன்னார்.

அந்த வீட்டுக் கொல்லையில் ஒரு வில்வ மரம். அதற்கு கீழே சிமெண்டுத் திண்ணை ஒன்றைக் கட்டி இருந்தார். சிலுசிலுவென்று வழவழப்போடு இருந்த அதன் மேல் போய் அமர்ந்தவர்- எதிரில் உள்ள திண்ணை மேல் லட்சுமியையும், சிவப்பிரகாசத்தையும் உட்காரச் சொன்னார்.

லட்சுமி மட்டும் அமர்ந்தாள். சிவப்பிரகாசம் நின்றுகொண்டார்.

"உக்காருங்கோ சிவப்பிரகாசம்..."

"இருக்கட்டும் சாமி. நீங்க விஷயத்துக்கு வாங்க..."

"நான் சொல்றதை நல்லவிதமா கேட்டுக்குங்கோ. நான் இப்ப சொல்லப் போறதெல்லாம், பரம ரகசியமான விஷயம். அந்த ஊர்லையே பரம்பரை பரம்பரையா வாழுறதால எங்க குடும்பத்துக்கு மட்டும்தான் இந்த விஷயங்கள் தெரியும். இப்ப எனக்கு மட்டும்தான் தெரியும்... அதுதான் சத்தியமான உண்மை..."

– அவரின் பேச்சில் பலமான பீடிகை.

"என் பேச்சை நம்பி, நடமாட முடியாத நிலையிலேயும் பிள்ளையை இங்கே கூட்டிட்டு வந்ததுக்கு என்னோட நன்றிகள். பிள்ளை வரையில இப்படி நடக்க நிறையவே காரணங்கள்



இருக்கு.

இந்த ஊர்ல இடம் வாங்கறவங்க முதல் காரியமா கோவிலுக்குப் போய் சாமிகிட்ட பிரார்த்தனை பண்ணிக்கணும். நான் சொல்லியும், பிள்ளை கேட்கலை. அவர் தப்பை அவருக்கு உணர்த்தத்தான் நந்திகேஸ்வர சாமி குறுக்கே வந்தார். ஆனா, பிள்ளையால அதை உணர முடியலை. அது, கடைசியில இப்படி கை- கால் இழுபட்டு வாதமா வந்து முடிஞ்சிடுத்து.

இப்ப கூட ஒண்ணும் கெட்டுப் போயிடலை.. தப்பை உணர்ந்து, நந்திகேஸ்வர பகவான் கால்ல விழுந்தா நிச்சயம் இந்த வாதம் சரியாயிடும். அவருக்காக நீங்க பிரார்த்தனை பண்ணிக்க நினைக்கறதுலேயும் ஒண்ணும் தப்பு இல்லை. ஆனா, அவரே பண்ணிக்கறதுதான் விசேஷம். அதுக்காகத்தான் அவரை கூட்டிக்கிட்டு வரச் சொன்னேன். நீங்களும் அப்படியே செஞ்சுட்டீங்க.

இதுல நீங்க இரண்டு பேர் மட்டுமல்ல... பிள்ளையும், அந்த டிரைவரும்கூட ரொம்பக் கொடுத்து வெச்சவங்க. இல்லேன்னா உங்களுக்கு சாமி தரிசனம் கிடைச்சி இருக்குமா?

ஆனா, இந்த ஊர்லயே பிறந்து வளர்ந்து வாழ்ந்து வர்ற எனக்கு இன்னும் அவரோட நேரடி தரிசனம் கிடைக்கலை. அப்ப நீங்க எவ்வளவு பெரிய புண்ணியம் செஞ்சி இருக்கீங்க! யோசிச்சுப் பாருங்கோ..."

– பேசும்போதே அவரது கண்களில் கண்ணீர் திரண்டுவிட்டது.

அவர் பேசுவதையே கூர்ந்து கேட்டுக்கொண்டிருந்த சிவப்பிரகாசம், வரதநம்பியின் உணர்ச்சிப் பெருக்கை சற்று சந்தேகிப்பது போல நகைப்புடன் கூடிய ஒரு வித சிரிப்பை உதிர்த்தார்.

லட்சுமி அதை கவனித்துவிட்டுக் கேட்டாள்.

"என்னண்ணா... சிரிக்கிறீங்க?"

"ஒண்ணும் இல்லம்மா... சாமி, நம்மை எல்லாம் கொடுத்து வெச்சவங்கன்னார். நீ அதை ஒத்துக்கிறியா?"

"ஏன் அப்படி கேக்கிறீங்க...?"

"பின்ன என்னம்மா... நாம இப்ப படுற வேதனை தெரியாம நம்மைப் போய் ரொம்ப கொடுத்து வெச்சவங்கன்னும், தன்னை ஒரு பாவின்னும் சொல்லிக்கிறார்."

"அப்பா சிவப்பிரகாசம்... இப்பவும் சொல்றேன்! நான் பாவிதான். நீங்க புண்ணியம் பண்ணினவாதான்."

"இல்ல சாமி. இது, உங்க நம்பிக்கை. நான் ஒத்துக்க மாட்டேன். புண்ணியம் பண்ணி இருந்தா— நாங்க பார்த்தது நந்தி சாமிதான்னா— இப்படியெல்லாம் நாகநாதனுக்கு ஆகி இருக்கவே கூடாது. மாறாக நந்திசாமி, நாகநாதன் இன்றும் சிறப்பா வாசிக்க ஆசிர்வாதம் பண்ணி இருக்கணும்."

"ஆசிர்வாதம் எப்பவும் தேடி வராது. நாமதான் தேடிப் போய் கேட்டு வாங்கிக்கணும். இப்படி நடந்திருக்கறதுக்குப் பின்னால ஒரு சரியான காரணம் இருக்கு..."

"சரி... நீங்களே சொல்லுங்க. என்ன அது?"

"இப்படியொரு சம்பவம் நடக்கலைன்னா... எங்க நந்தி சாமி, கோவிலைவிட்டு வெளிப்பட்டு நடமாடினது எங்களுக்கு எப்படி தெரிய வந்திருக்கும்?"

"என்ன சாமி பேச்சு, இது. ஒரு கற்சிலைக்கு உயிர் வருங்கறதே ஏமாற்றுதான். அப்படியே வந்தாச்சுன்னா அந்த நந்தி, நேரா உங்க வீட்டு முன்னால வந்து நின்னா— நீங்க பார்த்துட்டு போறீங்க..."

"அதுக்கு நான் புண்ணியம்ல பண்ணி இருக்கணும்?"

"சாமி... எங்களைவிட நீங்கதான் அதிகம் புண்ணியம் பண்ணி இருக்கணும். 'வியாபார தர்மம்'கற பேர்ல நானெல்லாம் எவ்வளவோ தந்திரங்களைச் செய்தவன். இந்த லட்சுமிதான் ஒரு பாவமும் அறியாதவளா இருக்கலாம்."

"அண்ணா! இப்ப எதுக்கு இந்த மாதிரி பேச்செல்லாம்? சாமி என்ன சொல்றாரன்னு கேப்போமே...?"

"சரிம்மா... நாகநாதனுக்கு குணமானா சரி..."

"சாமி, நீங்க சொல்லுங்க. நாங்க இப்ப என்ன பண்ணனும்?"

"சொல்றேம்மா...! நாளைக்கு நந்திகேஸ்வர சாமியோட



திருநட்சத்திர தினம். சரியா 108 வருஷத்துக்கு முன்னாலதான் சாமியோட கற்சிலைக்கு உயிர் வந்து, காளையா ஊரைச் சுத்தி வயல்களை எல்லாம் அழிக்கத் தொடங்கினார். 'என் எஜமான் வயல்ல நான் மேயறேன்'னு மேஞ்சு காமிச்சு— சிவன் சொத்தை கோவிலுக்கே கிடைக்கும்படிச் செய்தார்.

நான் அறிஞ்ச வரையிலும், ஒவ்வொரு 108 வருஷத்துக்கும் ஒரு தடவை கல்நந்திக்கு உயிர் வந்து, சாமி தன் மெய் உருவத்தோட நடமாடுவார். அப்ப அவரைப் பாக்கறவங்களுக்கு முக்தி கிடைக்கும். நினைத்தது நடக்கும்.

இந்த வருசத்துல மூன்று நாட்கள் சாமி இப்படி நடமாடுவார். அதுல நேத்து அப்படி நடமாடும்போதுதான், அவர் தரிசனம் உங்களுக்கெல்லாம் கிடைச்சிருக்கு. இன்னிக்கும், நாளைக்கும் கூட அவர் நடமாட்டம் இருக்கும். இப்ப கோவிலை அடைச்சாச்சு. ஆகையால், பிராண சொரூபம் ஏற்படறதை நம்மால பார்க்க முடியாது. ஆனா, நாளைக்கு கட்டாயம் பார்க்க முடியும்."

"அப்படீன்னா?"

"நாளைக்கு நாம நாலு பேரும் கோவில்ல தங்கறோம். இது வெளியே யாருக்கும் தெரிய வேண்டாம்."

"அப்ப நாளைக்கு நாம கல் நந்திக்கு உயிர் வர்றதைப் பார்க்கப் போறோமா?"

"என்னைப் பொறுத்தவரை, அந்த தரிசனத்தோட என் உயிர் போனால்கூட சந்தோஷம்தான். இந்த தரிசனத்துக்கு அப்புறம் நிச்சயமா நாகநாதனுக்கு குணமாகும். இதுல எனக்கு கொஞ்சமும் சந்தேகமே இல்லை."

"கோவிலுக்குள்ளே, யாருக்கும் தெரியாமல் இப்படி ஒளிஞ்சிருந்து பார்க்கறது தப்பு இல்லையா?."

"தப்புதான்! ஆனா, சாமியோட அருளுக்காக எதை வேண்டுமானாலும் செய்யலாம், அதுல தப்பு இல்ல. ராமானுஜர், சீடர்களோட வந்தப்போ அவர்களுக்கெல்லாம் சாப்பாடு போட லட்சுமிங்கறவ தன் உடம்பையே விக்கத் துணிஞ்ச வரலாறு எல்லாம் நமக்கு உண்டு சிவப்பிரகாசம்."

"நான் எனக்காகக் கேட்கலை. உங்களுக்காகத்தான்

சிறுகதை

# ஆசை





ஆரணி மு.சிவக்குமார்

அர்ச்சனாவின் வீடு அன்று பரபரப்பாக காணப்பட்டது. வாசலில் போடப்பட்டிருந்த வண்ணக் கோலங்கள் அழகழகாய் ஜொலித்தன.

"அர்ச்சனா...." – கூப்பிட்டபடியே பக்கத்துவீட்டு மாமி பாக்கியம் வந்தாள்.

"என்ன மாமி?"

"என்னடி, அர்ச்சனா... வீடே களைகட்டி இருக்கு. இன்னைக்கு என்ன விஷேசம்...?"

"மாப்பிள்ளை வீட்டுக்காரங்க வர்றாங்க..."– உற்சாகத்தில் அர்ச்சனாவின் முகம் தாமரையாக மலர்ந்தது.

"ஆமா... மாப்ள எந்த ஊரு? என்ன வேலை செய்யுறாரு?"– கேள்வி மேல் கேள்வி கேட்டாள் பாக்கியம்.

"அது வந்து... சொந்த ஊரு சென்னை. வேலை செய்யுறார். மாதம் இருபதாயிரம் சம்பளமாம்."

"அப்பா இல்லாத பிள்ளை நீ. உனக்குஇனிமேநடக்கறதெல்லாம் நல்லதாகவே இருக்கட்டும்" – வாழ்த்தினாள் மாமி.

அர்ச்சனாவின் அப்பா ஒரு விபத்தில் இறந்துவிட்டார். அம்மா பாஞ்சாலை, தனியார் நிறுவனத்தில் வேலை செய்கிறாள். அதில் வரும் வருமானத்தை வைத்துதான் குடும்பம் நகருகிறது. அர்ச்சனா பி.எஸ்சி. பட்டதாரி.

பாஞ்சாலையின் ஒரே ஆசை... மகளை ஒரு நல்ல இடத்தில் கட்டிக் கொடுப்பதுதான். கல்யாணத்திற்காக பாங்கியில் ஒரு லட்ச ரூபாய் போட்டு, 20 சவரன் நகையும் வாங்கி வைத்திருந்தாள்.

வாசலில் கார் வந்து நிற்கும் சத்தம் கேட்டது. மாப்பிள்ளை வீட்டார் வந்தாயிற்று.

"வாங்க... வாங்க..." என்ற பாஞ்சாலைக்கு கை, கால் ஓடவில்லை...

மாப்பிள்ளை பாண்டியன் அம்சமாகஇருந்தான். அவனுடன் அப்பா ஞானசேகரன், அம்மா கற்பகம், 'புரோக்கர்' பொன்னம்பலம் வந்திருந்தனர்.

பாஞ்சாலை புதுப் பாயை எடுத்து வந்து விரித்தாள். "உட்காருங்க... பொண்ணு ரெடியாகிட்டு இருக்கா. இதோ வந்துடுவா..." என்றபடி வேகமாக சமையல் அறைக்குள் சென்றாள்.

அர்ச்சனாவின் கையில் காப்பி கொடுத்து, அழைத்து வந்தாள்.

ஒரு பெண்ணுக்குரிய அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு ஆகிய அனைத்தும் அவளிடம் காணப்பட்டது. காப்பியை எடுத்துக்கொண்டு மெதுவாக தலையைக் குனிந்தபடி அடக்கம் ஒடுக்கமாக வந்து நின்றாள்.

"அம்மா, எனக்கு பொண்ணை ரொம்ப ரொம்ப பிடிச்சிருக்கு" என்று பாண்டியன் வெளிப்படையாகவே சொல்லிவிட்டான்.

"நீங்க... என்ன எதிர்பார்க்கிறீங்க...?" – 'புரோக்கர்' பொன்னம்பலம் ஆரம்பித்தார்.

"உடனே கற்பகம் முந்திக்கொண்டு, "இதோ பாருங்க... எங்களுக்கு இருக்கிறது ஒரே மகன். நல்ல உத்தியோகம். எந்தக் கெட்டப் பழக்கமும் இல்ல. 50 சவரன் நகை, 5லட்சரூபாய்ரொக்கம்கொடுத்து நிறைய பேர் பொண்ணு தர முன் வந்தாங்க. அதெல்லாம் வேணாம்னு சொல்லிட்டோம். பாவம்.... பொண்ணுக்கு அப்பா இல்ல... அதனால 30 சவரன் நகை, 2 லட்சம் ரொக்கம் கொடுத்தா உடனே திருமணத்தை முடிச்சிடலாம்" என்றாள் கற்பகம்.

"எங்களால அவ்வளவு செய்ய முடியாதுங்க. 20 சவரன் நகை போட்டு, ஒரு லட்ச ரூபாய்தான் கொடுக்க முடியும்" என்றாள் பாஞ்சாலை.

தொடர்ந்து பேசியும் பயனில்லை!

"இதெல்லாம் சரிப்பட்டு வராது... நாங்க கிளம்பறோம்..."– மாப்பிள்ளையின் பெற்றோர் சொல்லிவிட்டு, சட்டென்று எழுந்து வெளியே வந்துவிட்டனர்.

பாஞ்சாலைக்கு செருப்பால் அடிபட்ட மாதிரி இருந்தது.

"அம்மா... எனக்கு இந்தப் பொண்ண பிடிச்சிருக்கு. வரதட்சணையை அதிகமா எதிர்பார்க்காதிங்க. அவங்களால முடிஞ்சதைச் செய்யட்டும்"– தாயின் காதில் கிசுகிசுத்தான் பாண்டியன்.

"அதெல்லாம் முடியாது... நம்ம தகுதிக்கு இதெல்லாம் ஒத்துவராது. உனக்கு பெரிய இடத்துல பொண்ணு பார்த்து கல்யாணம் செய்யுறேன்..." படபடத்தாள் கற்பகம்.

"அம்மா! அந்தப் பொண்ணைப் பார்த்தா ரொம்ப அமைதியா தெரியுது. பணம் இன்னிக்கி வரும்... நாளைக்கு போகும். நம்ம வீட்டுக்கு வர்றவ ஒழுக்கமான– அடக்கமான பொண்ணா இருந்தா போதும். பணத்துக்கு ஆசைப்பட்டு, வீட்டுக்கு அடங்காத பொண்ணைக் கல்யாணம் செஞ்சா நிம்மதி போயிடும். அதனால பேசாம ஓ.கே. சொல்லுங்கம்மா..."– பாண்டியன் கெஞ்சினான்.

"ஏங்க... எதுவா இருந்தாலும் வீட்டுக்குள்ள வந்து பேசுங்க... அக்கம் பக்கம் எல்லாம் வேடிக்கைப் பார்க்கிறாங்க..." என்றாள் பாஞ்சாலை, இறுகிய முகத்தோடு.

"அதெல்லாம் முடியாது... நாங்க கேட்டதைத் தர்றோம்னு சொன்னா உள்ளே வர்றோம். இல்லன்னா நாங்க வேற இடம் பாத்துக்கிறோம்"– முகத்தில் அடித்தது போல் சொன்னாள் கற்பகம்.

"இன்னும் பத்து சவரன் நகையைச் சேர்த்து கொடுக்கிறோம். தயவு செய்து உள்ளே வாங்க"– கையெடுத்து கும்பிட்டாள் பாஞ்சாலை.

இதையெல்லாம் பார்த்துக்கொண்டிருந்த அர்ச்சனா ஓடி வந்தாள்.

"அம்மா... தெய்வத்தைத்தான் கும்பிடணும். மனசைப் பாக்காம, பணத்தைப் பாக்கிற இவங்களைப் போன்ற சாதாரண மனுஷங்களைக் கும்பிடக்கூடாது. பிடிவாதமா அவங்க கேக்கற வரதட்சணையைக் 'கொடுத்து என்னைக் கல்யாணம் செஞ்சி கொடுத்தா, நான் நிம்மதியா அங்கே வாழ முடியாது. அதனால இந்தச் சம்மந்தம் வேண்டாம். அவங்க போகட்டும்... நீ வீட்டுக்குள்ள வா..."

தன் அம்மாவின் கையைப் பிடித்து, விறுவிறுவென உள்ளே அழைத்து வந்தாள் அர்ச்சனா. ●



கேட்டேன்."

"நானும் எனக்காக மட்டும் சொல்லலை. நாகநாதனுக்கும், அவரோட சகாக்களான உங்களுக்காகவும்தான் சொன்னேன். நாகநாதன் ஒரு பெரிய இசை மேதை. அவர் இன்னும் பல காலம் வாழ்ந்து, இசைச் சேவை செய்யணும்."

"அப்ப சரி... நாளைக்கு ராத்திரி ஒரு அதிசயத்தை நாம சந்திக்கப் போறோம். அப்படித்தானே?"

"எனக்கு அதுல துளிகூட சந்தேகமே இல்லை."

"உங்க அபிப்ராயப்படி இன்னிக்குக்கூட நந்தி சாமிக்கு ஜீவன் வந்து நடமாடிக்கிட்டு இருப்பார் இல்லையா?"

"நிச்சயமா..."

– அதற்குப் பிறகு சிவப்பிரகாசம் மேற்கொண்டு எந்தக் கேள்வியையும் கேட்கவில்லை.

"சரி சாமி... போய்ப் படுப்போம். நாளைக்கு மற்ற விஷயங்களைப் பேசிப்போம்" என்று வாயில் கொட்டாவி பிடித்தார்.

வரதநம்பிக்குப் புரிந்துவிட்டது!

## 10

தேவதச்சனின் நுட்பமான சிற்பம், தவயோகியின் மந்திரக் காற்று– இந்த இரண்டும், கல் நந்திக்கு உயிர் கொடுத்து நடமாடச் செய்துவிட்டன. நந்தியும் பசியோடு ஒவ்வொரு இரவும் ஊரில் உள்ள வயல்களை எல்லாம் அழிக்கத் தொடங்கிவிட்டது. இதனால் மக்களிடையே வருத்தம், ஏமாற்றம். ஊரிலும் பசி, பஞ்சம் ஏற்பட்டது. வயலில் கதிர்கள் திருட்டுப் போவதற்கு யார் காரணம்? என்று தெரியாமல் பல்லவ மன்னனே தவித்தான். நாளடைவில், இதெல்லாம் தவயோகியின் வேலைதான் என்பது தெரிய வரவும் ஆச்சரியம் மட்டுமல்ல... அதிர்ச்சியும் கொண்டான்.

நந்திப் பெருமானை கட்டுப்படுத்தும் வழியும் தெரியவில்லை.

ஊரைக் காக்க என்ன செய்வது எனும்போதுதான் அந்தத் தவயோகியே ஒரு குறுக்கு வழியைக் கண்டுபிடித்தார். அதன்படி, நந்தியின் பாதத்தில் நகம் ஒன்றை உடைத்து சிதைத்ததில் 32 லட்சணங்கள் என்பது 31 ஆனது. நந்தி பெருமானுக்கு உயிர் வருவதும் நின்று போனது.

ஆனால்..?

படப்பிடிப்பில் ஏகப்பட்ட 'டேக்' வாங்க ஆரம்பித்துவிட்டாள் நந்தனா. சாதாரணமாக ஒரு 'டேக்', இரண்டு 'டேக்'குக்கு மேல் போகமாட்டாள். தொலைவில் அவளுக்குப் பாதுகாப்புக்கு வந்திருந்த போலீஸ் அதிகாரி ரவிப்பிரகாஷ், சாதாரண உடையில் காணப்பட்டார். அவள் நடிப்பதையே பார்த்துக்கொண்டிருந்தார் அவர். பார்ப்பதற்கு 'ஹீரோ' போன்ற தோற்றம்.

'கேமரா' முன் நந்தனா பல 'டேக்' வாங்குவதற்கான காரணம் இயக்குநருக்கு அப்போதுதான் புரிந்தது. உடனே, அவளை அருகே அழைத்து, "அம்மாடி... ஒரு மாசம் நான் உன்னைத் தொந்தரவு பண்ணலை. நீ நிம்மதியா ஓய்வு எடுத்துக்கோ. உன் பிரச்சினை எல்லாம் தீர்ந்த பிறகு வந்து நடிச்சிக் கொடுத்தா போதும்" என்றபோது, அவளுக்கும் 'அப்பாடா' என்று இருந்தது.

அன்றைய காட்சிக்காக சற்று கவர்ச்சியாக ஆடை உடுத்தி இருந்தாள். சாதாரணமாக சில நடிகைகளுக்கு முன்னும், பின்னும் 'பேடு' வைத்து அழகான– எடுப்பான தோற்றத்திற்கு கொண்டு வந்துவிடுவார்கள். நந்தனா வரையில் அந்த 'எடுப்பு', மாட்டுக் கொம்புகள் போல இருந்தது. போலீஸ் அதிகாரியையே அது நிரடிக்கொண்டிருந்தது.

படப்பிடிப்பு முடிந்த நொடியில், 'மேக்கப்' அறைக்குள் போய் சகலத்தையும் அவிழ்த்துப் போட்டுவிட்டு, சாதாரண சேலைக்கு மாறினவளாகத் திரும்பி வந்தாள்.

ரவிப்பிரகாஷ் எதிரில் இருந்த நாற்காலியில் அமர்ந்தாள்.

"சார்... அடுத்த ஒரு மாசத்துக்கு படப்பிடிப்பு கிடையாது..."

"ஏன் மேடம். நீங்க எந்தத் தயக்கமும் இல்லாம நடியுங்க.



பாதுகாப்புக்கு நாங்க இருக்கோம்ல."

"இல்ல சார். இப்போதைக்கு என்னால நடிப்புல தீவிர கவனம் செலுத்த முடியலை."

"அட... என்ன மேடம் நீங்க? இதெல்லாம் ஒரு பிரச்சினையா! உங்க நடிப்புத் துறையில இதெல்லாம் சகஜம்தானே?"

"இருக்கலாம். ஆனா, நான் இந்தத் தொழிலையே வெறுக்கறேன்."

"அப்ப கல்யாணம் பண்ணிக்கிட்டு ஒதுங்கிருங்க..."

– ரவிப்பிரகாஷ் படு'கூலா'க – அவ்வளவு வேகமாக ஒரு முடிவைச் சொல்வான் என்று அவள் எதிர்பார்க்கவில்லை. ஒப்பனை கலைத்த அவளது வெளிர் முகத்தில் ஒரு திக்குமுக்காடல்.

"என்ன மேடம்... நான் ஏதாவது தப்பா சொல்லிட்டேனா?"

"அதெல்லாம் ஒண்ணுமில்லை. என் விருப்பமும் அதுதான். ஆனா, நல்ல மாப்பிள்ளை கிடைக்கணுமே...?"

"உங்களுக்குக் கிடைக்காத நல்ல மாப்பிள்ளையா?"

அவனிடம் திரும்பவும் அதே வேகம். அப்போது அவளது செல்போனுக்கு அழைப்பு வந்தது. மாமிதான் அழைத்தாள்.

"நந்தனா..."

"என்ன மாமி?"

"எப்போ படப்பிடிப்பு முடியும் உனக்கு...?"

"முடிஞ்சிடிச்சி மாமி. அடுத்த ஒரு மாசத்துக்கு படப்பிடிப்பு இல்ல."

"உன் பாதுகாப்புக்கு போலீஸ்காரங்க இருக்கிறாங்க இல்லியா?"

"ஆமாம்... உதவி கமிஷனர் ரவிப்பிரகாஷ் சார் என் கூடவே இருக்கார்..."

"சந்தோஷம்... நான் எதுக்குக் கூப்பிடேன்னு சொல்லிடுறேன். சமையலை முடிச்சு எல்லாத்தையும் மூடி வெச்சுட்டு வந்து அப்படியே ஒரு குட்டித் தூக்கம் போட்டேன். அப்ப ஒரு கனவுக்

காட்சி வந்தது..."

"என்ன மாமி... பகல் கனவா?"

"கேளு... நீயும், நானும் விடைதாங்கி கோவில்ல நந்தி சாமி முன்னால நின்னுட்டு இருக்கோம்.

"அப்புறம்...?"

"அப்புறம் என்ன... 'எனக்கு நல்ல மாப்பிள்ளையைக் கொடுத்த உங்களுக்கு நன்றி'ன்னு சொல்லிக்கிட்டே நீ விழுந்து அவரை வணங்கறே..."

"அட..."

"இன்னும் இருக்கு... கேளு. நந்தி சாமியோட கல் சிலைக்கு திடீர்னு உயிர் வந்து, அவர் வெள்ளை நிற காளையா நடமாட ஆரம்பிக்கிறார்..."

"கனவுதானே.... அதான் இஷ்டத்துக்கும் கண்டு இருக்கீங்க."

"அதான் இல்ல... அந்த ஊர் நந்தி சிலைக்கு 108 வருஷத்துக்கு ஒரு தடவை, அவர் திருநட்சத்திரத்தின்போது உயிர் வரும்னு கேள்விப்பட்டு இருக்கேன். கனவு கலைஞ்சு கண் முழிச்சவுடன் கணக்கு போட்டுப் பார்த்தேன். இன்னிக்குத் திருநட்சத்திரம்."

"என்ன மாமி சொல்றீங்க?"

"நந்தா... அதான் உனக்கு படப்பிடிப்பு இல்லேன்னு ஆயிடுச்சே. நாம இன்னிக்கு கோவிலுக்குப் போயிட்டு வருவோமே...?"

"திரும்பவுமா?"

"தினம் தினம் கோவிலுக்குப் போகணுங்கறதுதான் நமக்கான கடமை. நீ என்ன திரும்பவுமாங்கறே...?"

"ஐயோ மாமி! கிட்டத்தட்ட நூறு கிலோ மீட்டர் தூரம்."

"பரவாயில்ல... எனக்காக நீயும் கூட வர்றே..."

"........."

"என்ன நந்தா... நான் என்ன உன்கிட்ட சம்பளமா அதிகம் கேட்டேன்?"

"மாமி... அப்படி எல்லாம் பேசாதீங்க. நீங்க ஒண்ணும் என்கிட்ட சம்பளத்துக்கு வேலை பார்க்கற சமையல்காரி இல்ல.



என் அம்மா மாதிரி..."

"அப்ப இந்த அம்மா பேச்சைக் கேளு..."

"வர்றதுக்கு ஒண்ணும் இல்ல... அவ்வளவு தூரம் போய் கும்பிட்டும், என் பிரச்சினை தீரலையே...?"

"நிச்சயம் தீரும். எனக்கு நம்பிக்கை இருக்கு. நீ கிளம்பு."

"சரி மாமி... நான் டிரைவரை அனுப்பறேன். நீங்க தயாரா இருங்க. வந்து உங்களை அழைச்சிட்டு வருவான். நான் இங்கயே காத்திருக்கேன்."

– நந்தனா, தொலைபேசியை துண்டித்துவிட்டு நிமிர்ந்தாள்.

ரவிப்பிரகாஷ், அவளைப் பார்த்து மெல்லிய புன்னகையை வீசியவாறே பேசினார்.

"விடைதாங்கி கிராமத்துக்கு, உங்கக்கூட வர நானும் தயார்."

அவரது வேகம் அவளை அசத்தியது.

"நீங்க உதவி கமிஷனர்தானே?"

"அதுல என்ன சந்தேகம்? என் அடையாள அட்டையைப் பார்க்கிறீங்களா?"

"அதுக்கில்ல... உயர் அதிகாரியான நீங்களே எனக்குக் காவலா இருக்கணுமா? உங்க துறையில வேற யாரும் இல்லையா?"

"ஏன் மேடம்... நான் உங்கக்கூட இருக்கறது உங்களுக்குப் பிடிக்கலையா?"

"ஒரு உயர் அதிகாரியே காவல் இருக்காருங்கறது என்னவோ மாதிரி இருக்கு."


"உண்மைதான்! ஆனா, நான் உங்கக் கூடவே இருக்க ஒரு சரியான காரணமும் இருக்கே..."

"என்ன அது?"

"சாரி... அது ரகசியம். வெளியே சொல்ல முடியாது."

– அவர் பளிச்சென்று சொல்லி கண்களையும் சிமிட்டினார்.

அவள் அதற்கு மேல் எதுவும் பேசவில்லை.





டிரைவரைக் கூப்பிட்டு மாமியை அழைத்து வரச் சொன்னாள். சற்றுத் தள்ளி– பத்திரிகை நிருபர் ஒருவர் நின்றுகொண்டிருந்தார். அவர் மெல்ல நெருங்கி வந்து, "ஹலோ மேடம்" என்றார்.

"மன்னிக்கணும்... இன்னிக்கு பேட்டிக்கு நேரமில்லை" என்று சொன்னாள்.

"ஒரே ஒரு கேள்விதான் மேடம்... பிளீஸ்..."

"இல்ல... ஒரு கேள்விக்குக்கூட நான் பதில் தர மாட்டேன்."

நந்தனா எழுந்து 'மேக்கப்' அறைக்குள் நுழைந்தாள்.

ரவிப்பிரகாஷ் அந்த செய்தியாளரைப் பார்த்து, "சார்... பிடிக்கலைன்னா விட்டிடுங்களேன்..." என்றார்.

"நீங்க ஏன் சார் பேசமாட்டீங்க. ஆமா, நீங்கதான் மேடம் கூடவே இருக்கீங்களோ?!"

"ஓஹோ... பேட்டி இப்ப என்கிட்டயேவா?"

"சார், அது எங்க கடமை. நந்தனா மேடத்துக்கு யாரால பிரச்சினைன்னு கொஞ்சம் சொல்லுங்களேன்."

"அதெல்லாம் இப்ப முடியாது..."

"அவங்களை மும்பை தாதாக்கள் கடத்திட்டு போகப் பார்த்தாங்களாமே...? அதுல இருந்து அவங்க சாமர்த்தியமா தப்பி வந்தாங்களாமே... உண்மையா சார்?"

"இந்த போட்டு வாங்கற வேலையெல்லாம் என்கிட்ட வேண்டாம். இடத்தை காலி பண்ணுங்க...!"

"சார்... ஒரே ஒரு கேள்வி."

"கேளுங்க..."

"குற்றவாளிகளைப் பிடிக்க எந்த மாதிரி அதிரடி நடவடிக்கை எடுத்திருக்கீங்க...?"

"அதை நான் உங்ககிட்ட சொல்ல... நீங்க பத்திரிகையில வெளியிட... அதைப் பார்த்துட்டு குற்றவாளிகள் தப்பிச்சு ஓடணுமா?" – ரவிப்பிரகாஷுக்கு மூக்குக்கு மேல் கோபம் வந்தது உடனே, தொடர்ந்து அங்கு இருக்காமல் சற்று நகர்ந்தார்.

துணிச்சலாய் 'மேக்கப்' அறையின் கதவருகே போய்

நின்றார்.

அவரைப் பார்த்ததும் ஒப்பனைப் பெண்மணி ஓடி வந்தாள்.

"சார் உள்ளே போயிடாதீங்க... ஆம்பளைங்க யாரும் உள்ளே வந்தாலே மேடத்துக்கு பிடிக்காது" என்றாள்.

"ஆமா... உன் பேர் என்ன?"

"சகுந்தலாங்க..."

"இந்த அம்மாகிட்டத்தான் ரொம்ப நாளா இருக்கியா?"

"ஆமாங்க... குழந்தை நட்சத்திரமா அவங்க நடிக்கறப்ப இருந்தே நான்தாங்க ஒப்பனை அலங்காரம்..."

"அப்ப நந்தனா பற்றி உனக்கு எல்லா விபரமும் தெரியும்னு சொல்லு."

"வயசுக்கு வந்த தேதிகூட எனக்கு அத்துப்படிங்க. அன்னிக்கு விநாயகர் சதுர்த்தி வேற. வெள்ளிக்கிழமையும் கூட!"

– ரவிப்பிரகாஷ் கேட்கும் தொனி அவளுக்குப் புரியவில்லை. வெகுளித்தனமாய் அவரிடம் கொட்டித் தீர்த்தாள்.

அவளிடம் அப்படியே பேச்சுக் கொடுத்துக்கொண்டே 'செட்'டின் மறைவான ஒரு பக்கத்துக்குச் சென்று தன் சட்டைப் பையில் இருந்து ஒரு 'பாஸ்போர்ட்' அளவு புகைப்படத்தை எடுத்து அவளிடம் காட்டினார்.

"யார் படங்க இது?"

"உனக்குத் தெரியல...?"

"தெரியலியே..."

"என்னம்மா கதை உடுறியே. இவர்தான் நந்தனாவோட மாமா."

"ஐய்ய... எனக்குத் தெரியாம இப்படி ஒரு மாமாவா?"

"அது சரி... அவங்க குடும்ப விஷயம் கூடவா உனக்குத் தெரிஞ்சிருக்கணும்?"

"தெரியுமே...! இப்படியொரு ஆளை நான் பார்த்ததே இல்லையே..."

"நீ பார்த்தேன்னு நானும் சொல்லலையே...?"



"நான் பார்க்கலைன்னா மேடமும் பார்க்கலைன்னுதான் அர்த்தம்."

"அவ்வளவு நம்பிக்கையா உனக்கு?"

"ஆமா... கூடவே இருக்கேன்ல..."

"சனி, ஞாயிறு லீவுல கூடவா...?"

"எங்களுக்கெல்லாம் ஏது லீவு? படப்பிடிப்பு இல்லாட்டி 'செஸ்' விளையாட அது ஊட்டுக்குப் போயிடுவேன்."

"அப்படின்னா உங்க பாப்பா வாழ்க்கையில எந்த ஆம்பளையும் குறுக்கிட்டது இல்லையா?"

"எனக்குத் தெரிஞ்சு இல்லை. கூட நடிக்கறவங்களைப் பாப்பாவே தூர நிறுத்திடும். தினேஷ் தம்பி 'லவ்' பண்ணிச்சு. ஆனா, பாப்பா அதை ஏத்துக்கலை."

"ஏன்?"

"அதுக்கு ஒரு சினிமா நடிகரைக் கட்டிக்க விருப்பமில்ல. அத்தோட, தினேஷ் கொஞ்சம் அப்படி, இப்படி ஆசாமி..."

– ரவிப்பிரகாஷ் அழகாக அவளிடம் போட்டு வாங்கிவிட்டு, அவளையும்விட்டுத் தனியாக ஒதுங்கி– செல்போனில் அவசரமாக கமிஷனரைப் பிடித்தார்.

"குட்மார்னிங் சார்!"

"என்ன ரவி?"

"சாரி சார்... நாம சந்தேகப்பட்ட மாதிரி எதுவும் இல்லை. அந்த சர்வதேச குற்றவாளிகளுக்கும், நந்தனாவுக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை."

"அப்ப நமக்கு வந்த செய்தி தப்பா...?"

"அவனுக்கும், ஒரு நடிகைக்கும் தொடர்புங்கறது உண்மை. ஆனா, அந்த நடிகை நந்தனா இல்லை. வேற எந்த நடிகையாவது இருக்கலாம்."

"உறுதியா சொல்றீங்களா...?"

"நிச்சயம்... ஒரு வகையில நந்தனா ரொம்பப் பாவம். தெரியாத்தனமா நடிகை ஆயிட்டா. மற்றபடி ரொம்ப நல்ல பொண்ணு அவள்."

"பார்த்துப்பா...! நீயும் கல்யாணமாகாத ஆளு. காதல், தேல்னு ஆரம்பிச்சிடாதே!"

"அது என் கையில இல்ல சார். அதே நேரம் அவளுக்கு மிரட்டல் இருக்கறதா போன் பண்ணி நாம போட்ட நாடகத்தை எந்த நேரமும் முடிச்சுக்கலாம்."

"ரொம்ப கவனம்... அவ உயிருக்குக் கொலை மிரட்டல் விட்டது. போலீஸ்தான்னு தெரிஞ்சா அது மோசமான பல விளைவுகளை உருவாக்கிடும்."

"நான் பார்த்துக்கறேன் சார். நந்தனா இன்னிக்கு ஒரு புராதனமான கோவிலுக்குப் போறா. பாதுகாப்புக்குன்னு நானும் கூடவே போறேன். அங்க வைச்சு, கொலை மிரட்டல்விட்ட பம்பாய் தாதாவை நாம கைது பண்ணிட்டதா சொல்லி சமாளிச்சிடுறேன்."

"ஓ.கே. ஆல் த பெஸ்ட்."

"அப்புறம்... நாம சந்தேகப்பட்ட நடிகை- நந்தனா இல்லேன்னு ஆயிட்டதால... அந்த இன்னொரு நடிகை யாருன்னு கவனிச்சு, அதிரடி நடவடிக்கையை வேகமா தொடங்கிடுங்க சார். நம்ம நாட்டுக்கே தலைவலியா இருக்கற அந்தக் குற்றவாளி, உயிரோட நம்மகிட்ட சிக்கியே தீரணும்."

"நிச்சயமா... நீ கொஞ்சம் சீக்கிரம் வா. நீயே அந்த விஷயத்தையும் கவனிச்சுக்கலாம்."

– கமிஷனர் முற்றுப்புள்ளி வைக்க– ரவிப்பிரகாஷ் திரும்ப ஒரு முறை அந்த 'பாஸ்போர்ட்' படத்தை எடுத்துப் பார்த்தான்.

பின்லேடன், தாவூத் போல ஒரு உலக கிரிமினலின் படம், அது. அவனுக்கு தமிழ் நடிகையோடு நெருங்கின தொடர்பு என்று ஒரு ரகசிய தகவல் கிடைத்தது.

அதை எப்படி ஊர்ஜிதப்படுத்துவது என்று போலீசார் யோசித்தபோது, அவர்களுக்குத் தெரிந்த குறுக்கு வழிதான் கொலை மிரட்டல்! அதைத் தொடர்ந்து பாதுகாப்புக்கு வருவது போலே வந்து– நந்தனாவின் 'முன்–பின்' ரகசியங்கள் அவ்வளவையும் அலச வேண்டும் என்பதுதான் திட்டம்.

அது வெற்றிகரமாக முடிந்ததில் ரவிப்பிரகாஷிடம் ஒரு



சந்தோஷம். அது என்னவோ தெரியவில்லை... நந்தனா மேல் ஒரு பரிதாபமும் அவருக்கு ஏற்பட்டிருந்தது. அது எதனால் என்றுதான் தரம் பிரித்துப் பார்க்க முடியவில்லை.

## 11

தவயோகியின் உதவியோடு கல்லுக்குள் உயிரைப் புகுத்தும் வித்தையைக் கற்றுக்கொண்டான் தேவதச்சன். அதே நேரம் எல்லா கற்சிலைகளையும் அப்படி உயிர்ப்பிக்க முடியாது என்பதையும் அந்தத் தவயோகியே உபதேசித்தார். சிரஞ்சீவியாக வாழ்கிறவர்களால்தான் பஞ்சபூதங்களை வென்று, எதனுள்ளும் பிரவேசிக்க முடியும். அதே வேளை பரிபூரணமில்லா ஒன்றில் அவர்களால் பிரவேசிக்க இயலாது என்பதால், பூரணமான சிற்பங்கள் மிக முக்கியம் என்பதை விளக்கியவர், அப்படியொரு சிற்பத்துக்குள் உயிரைப் புகுத்த, சப்தமாகிய மந்திரங்கள் முக்கியமானவை என்றும் கூறி சில மந்திரங்களையும் உபதேசித்தார்.

அவ்வகையில் நந்திகேஸ்வரரை தான் செதுக்கிய நந்தி சிற்பத்தின் வாயிலாக ஜீவன் கொள்ள வைத்த தேவதச்சன், நந்தீஸ்வரர் காலில் விழுந்து முக்தி பெற்றான். அதே நேரம் எந்தத் தலத்தில் தனக்கு ஜீவதேகம் ஏற்பட்டதோ... அந்தத் தலத்தில் 108 ஆண்டுகளுக்கு ஒரு முறைதான் உயிர்த்தெழுந்து நடமாடி அவ்வேளையில் பல அற்புதங்களையும் செய்யப்போவதாக நந்திதேவரும் அருளி மறைந்தார்.

அன்று அருளியது... இன்று நடக்கப் போகிறது!

அந்த இரவுப் பொழுது, பிரம்ம முகூர்த்த காலத்தை நோக்கிச் சென்றபடி இருந்தது. வரதநம்பி முதல் எல்லோரும் பேச வேண்டியதைப் பேசிவிட்டு, உறங்கப் போய்விட்டனர். ஆனால், சிவப்பிரகாசத்துக்கு மட்டும் உறக்கமே வரவில்லை.

குறிப்பாக, அன்று இரவும் நந்தி உயிர்த்தெழுந்து திரியும் என்று வரதநம்பி கூறியிருந்தது அவரைத் தூங்க விடவில்லை.

சுவர்க்கோழிகள் கூரைச் சரிவில் இடையறாது கத்தி காதைத்

திருக்கிக்கொண்டிருந்தன. கடிகாரத்தைப் பார்த்தார். மணி மூன்று!

வரதநம்பி சொன்னது எந்த அளவுக்கு உண்மையாக இருக்க முடியும் என்கிற சந்தேகம் பெரும் கேள்வியாக அவரை அரித்துக்கொண்டே இருந்தது.

புரண்டு படுத்தபோது, கோவில் மதில்சுவர் அந்த இருளில்கூட அவரது கண்ணில்பட்டது.

அருகில்தான் கோவில். 'எழுந்து போய், பீடத்தில் நந்தி இருக்கிறதா... இல்லையா? என்று பார்த்தால் உண்மை தெரிந்துவிடுமே!' என்று மனம் கூறிக்கொண்டே இருந்தது.

போகப் போக குறுகுறுத்தது.

எழுந்து அமர்ந்தார். ஒரு கொட்டாவி பிரிந்தது.

தூக்கம் வராத அலுப்பால் உடம்பில் ஒரு மாதிரியான வலி தென்பட்டது.

தெருவை உற்று நோக்கினார். அப்படியொரு ஆழ்ந்த நிசப்தம்.

ஏ.சி. அறைக்குள் படுஅமைதியாகத் தூங்கப் பழகியவருக்கு, அந்த ஓட்டு வீட்டுத் திண்ணையில் அவ்வளவு சுலபத்தில் தூக்கம் வரவில்லை. கொசுக்கள் வேறு சுற்றிச் சுற்றி வந்து காதைச் சிதைத்தன.

சட்டென்று ஒரு முடிவோடு எழுந்து நின்றார். ஓசைப்படாமல் தெருவில் இறங்கி நடந்தார். தோல் செருப்பு, ரோட்டில் மிதிபடும் போதெல்லாம் உராய்வுச் சப்தம் போட்டது. அந்த வேளையில் அது அவ்வளவு துல்லியமாகக் கேட்டது.

மெல்ல நடந்தவர், கோவில் கோபுரவாசல் அருகே வந்துவிட்டார். பெருங்கதவு தாழிடப்பட்டு இருந்தது. உள்ளே போக வேண்டுமானால், பக்கவாட்டு மதிலில் ஏறிக் குதிக்க வேண்டும் என்பது தெரிந்தது.

அதற்கு ஏற்ப சுவரையொட்டி ஒரு வேப்பமரம் வளர்ந்திருந்தது. ஆர்வம், சிவப்பிரகாசத்தை மரம் ஏற வைத்தது.

அதில் ஏறி சுவரைத் தொட்டவர், அங்கிருந்தே சந்நதிக்கு



வெளியே கல் மண்டபத்தில் அமர்ந்திருக்கும் நந்தி சிலையைப் பார்க்க முயன்றார்.

பெரும் அதிர்ச்சி!

கல் மண்டபத்தில், நந்தி சிலை இல்லை. காலியான பீடம்தான் கண்ணில்பட்டது. குப்பென்று வியர்த்தது. வரதநம்பி சொன்னது அவ்வளவும் உண்மை என்பது அப்போதுதான் தெரிந்தது.

அதே நேரம், தனக்கு பின்புறமாக மணி ஒலிக்கும் சப்தம் கேட்டு திரும்பியவருக்கு சப்த நாடியும் ஒடுங்கிவிட்டது. கோவிலுக்கு முன்பு– வீதியில் வெள்ளை வெளேர் என்று கழுத்து மணி சப்திக்க– மாலை சகிதம் ஒளிப் பிழம்பாக அந்த நந்தி!

'ஜல்ஜல்' என்று சப்தம் கேட்க– அது நடந்து வரும் அழகே கம்பீரமாக இருந்தது.

மரக்கிளை மேல் அமர்ந்திருந்த நிலையில்– சுவரைத் தொட்டபடியே, அந்த அரிய காட்சியைப் பார்த்து வாய் பிளந்தார்.

கோவில் கதவு முன் நந்தி வந்து நிற்கவும், கதவு தானாகத் திறந்தது. சப்தமின்றி உள்ளே நுழைந்தது நந்தி. ஆனால், இந்தக் காட்சியை அவரால் பார்க்க முடியவில்லை.

தெருவில் நடந்து வந்த ஒளிப் பிழம்பான நந்தி, இப்போது கோவிலுக்குள் நுழைந்து கல் மண்டபத்திலும் பிரவேசித்தது.

பிரவேசித்த சில நொடிகளில் அப்படியே சிலையாக மாறி, பீடத்தில் காட்சி தந்தது.

சிவப்பிரகாசத்துக்கு உச்சி முதல் பாதம் வரை சிலிர்ப்பு!

சர்வாங்கத்திலும் ஒரு பரபரப்பு.

மரத்தில் இருந்து கீழே குதித்தவர், பிரமை பிடித்தவர் போன்று அப்படியே அங்கு அமர்ந்துவிட்டார்.

மனதில் நந்திக் காட்சியே ஓடியது.

விடியப் போகும் நேரம். மரத்தடியில் அமர்ந்திருந்த சிவப்பிரகாசத்தை முதலில் பார்த்தவர், கோவிலுக்கு தரிசனத்திற்கு வந்திருந்த வரதநம்பிதான்.

"என்ன சிவப்பிரகாசம்... நந்தி தரிசனமா?" என்றார், மிருதுவான குரலில்.

"ஆமாம் சாமி... இன்னமும் அது என் கண்ணுக்குள்ளேயே இருக்கு..."

"உங்களைப் பார்த்த உடனேயே நினைச்சேன். நேத்து விஷயத்தை உங்ககிட்ட சொல்லும்போதே உங்களை எங்கேயும் போகவோ, யார்கிட்டேயும் இது பத்தி பேசவோ கூடாதுன்னு சொல்ல நினைச்சேன். என் நேரமோ, இல்லை உங்க விதியோ தெரியலை. அதை மட்டும் சொல்ல மறந்துட்டேன்."

"அதனால என்ன சாமி... நீங்க சொன்னதை நான் முதல்ல நம்பலை. ஆனா, இப்பசிலிர்த்துப் போய் இருக்கேன். யாருக்குக் கிடைக்கும் இப்படி ஒரு பாக்கியம்...?"

"போதும் சிவப்பிரகாசம். உங்களுக்குக் கிடைச்ச தெய்வ தரிசன அனுபவத்தை தயவுசெய்து வெளியே யார்கிட்டேயும் சொல்லாதீங்க. என்கிட்ட கூட எதுவும் பேச வேண்டாம். நந்தீஸ்வரரை பேராசை நோக்கத்தோடயோ, இல்லை சந்தேகத்துடனோ பார்க்க நினைக்கறது பெரும் பாவம்."

"இல்ல... நீங்க இனி எது சொன்னாலும் நான் கேக்க மாட்டேன். இது எவ்வளவு பெரிய அதிசயம் தெரியுமா? இதை இந்த உலகம் தெரிஞ்சுக்கணும்.

கல்லுக்கு உயிர் வரும் விஷயம் ஒண்ணும் சாதாரணம் இல்லை. இதை மட்டும் 'வீடியோ' எடுத்து உலகம் முழுக்க ஒளிபரப்பு பண்ணினா... அதனால இந்தக் கோவிலுக்கு எவ்வளவு கூட்டம் வரும் தெரியுமா?"

–சிவப்பிரகாசம் தன் கருத்தில் உறுதியாய் நிற்க... வரதநம்பியோ நிலைத் தொட்டது போன்ற நிலைக்கு தள்ளப்பட்டார்.

"போதும்... விபரம் புரியாம பேசாதீங்க. சில விஷயங்கள் அந்தரங்கமாதான் இருக்கணும். சாமி இப்படி வந்துட்டுப் போற விஷயத்துக்குப் பின்னால் நிறைய சூட்சும காரணம் இருக்கு. அதை வெளியே சொல்லக்கூடாது.

இது விளம்பரப்படுத்தப்பட வேண்டிய விஷயம் கிடையாது.



பொத்திப் பாதுகாக்க வேண்டிய தகவல்."

"இல்லை... நீங்க பிற்போக்குவாதி. உங்க பேச்சைக் கேட்டா உருப்பட முடியாது... தயவு செய்து நீங்க சும்மா இருங்க..."

"சிவப்பிரகாசம்...! வேண்டாம். தயவு செய்து என் பேச்சைக் கேளுங்க. இது பத்தி யார்கிட்டேயும் சொல்லாதீங்க. கோவிலுக்கு என்கூட வந்து சாமி முன்னால சத்தியம் செய்துதாங்க. இல்லேன்னா அது உங்களுக்கே நல்லதில்லை."

"இல்ல சாமி... நீங்கல்லாம் அந்தக் காலம். இப்படித்தான் யோசிப்பீங்க. நான் வியாபாரி. அதே நேரம் புண்ணியம் பண்ணினவன். இல்லேன்னா நீங்க தூங்கின மாதிரி, நானும் தூங்கி இந்தக் காட்சியை இழந்திருப்பேன்."

"இல்ல... நான் இந்த ரகசியத்தைச் சொன்னது தப்பு. இசை மேதை நாகநாதன் பிள்ளை, நந்தியை தரிசனம் பண்ணி குணம் அடையணும்னு நினைச்சுதான் சொன்னேன். அது இப்படி திசை திரும்பும்னு எனக்குத் தெரியாது. இனிமேலும் உங்களை நான் இந்த ஊர்ல இருக்க விடமாட்டேன்."

–இருவரும் கோவில் மதில் சுவரையொட்டி செய்துகொண்ட இந்தத் தர்க்கம், நல்ல வேளையாக வேறு யார் காதிலும் விழவில்லை.

அதே வேளை சிவப்பிரகாசத்தின் தந்திரபுத்தி வேகமாக வேலை செய்தது.

சற்றுத் தள்ளி ஒரு தென்னை மட்டை விழுந்து கிடந்தது. அதைக் கையில் எடுத்து, இரண்டாகப் பிளந்தார். சில நொடிகளில் ஒரு கிரிக்கெட் மட்டை போல் அவர் கையில் தயாரானது.

அவரின் செய்கையைப் புரியாதபடி திகைத்து நின்றார், வரதநம்பி.

"இது எதுக்கு... இப்ப இது எதுக்கு உங்களுக்கு?"

"இது எனக்கில்லை. உங்களுக்குத்தான்."

"எனக்கா?"

"ஆமா... இதால ஒரே போடு. ஒரு நாலு நாளைக்கு நீங்க

எழுந்திருக்கக்கூடாது. அதுக்குள்ள நான் என் விருப்பப்படி என்னை செய்யணுமோ செய்துப்பேன். குறிப்பா, வீடியோ எடுப்பேன். உலகத்துல இருக்கற அவ்வளவு டி.வி. ஸ்டேஷனுக்கும் விற்பேன். நானும் குபேரன் ஆவேன். அப்படியே இந்த ஊரையும் பிரபலம் ஆக்கிடுவேன். நீங்க வேணா பாருங்க, அடுத்த திருப்பதி இந்த ஊர்தான்..."

– பேச்சோடு, மட்டையால் வரதநம்பியின் தலையில் ஒரே போடு.

சுருண்டு விழுந்தார் அவர்.

எதற்கும் இருக்கட்டும் என்று இன்னொரு போடு.

புழுவாய் சுருண்டது அவர் தேகம்.

அடுத்து, அவரை இழுத்து சுவரோரம் கிடத்தியவர், ஓடிப் போய் வீட்டு வாசலில் நிற்கும் தன் காரைக் கிளப்பிக்கொண்டு வந்து– காருக்குள் மளமளவென்று அவரை ஏற்றும்போது–

எதிரில் இன்னொரு கார் வந்து நின்றது.

அதில் நந்தனாவும், மாமியும் பின் இருக்கையில் அமர்ந்திருக்க, முன் இருக்கையில் போலீஸ் அதிகாரி ரவிப்பிரகாஷ்.

அவரைப் பார்த்ததும் ஒரு விநாடி சிவப்பிரகாசம் திடுக்கிட்டாலும்... காரை படுவேகமாக பின்னுக்கு எடுத்து, நந்தனாவின் காரை முந்திக்கொண்டு பறந்தார்.

அந்த இடைவெளியிலும் ரவிபிரகாஷ், சிவப்பிரகாசத்தை அடையாளம் கண்டுகொண்டதுதான் ஆச்சரியம்.

"ஏய்... இவர் சிவப்பிரகாசம். பெரிய தொழிலதிபர்" என்றார்.

"அவரும் கோவிலுக்கு வந்து சாமி தரிசனம் பண்ணிட்டு போறாரோ என்னவோ...?" என்றாள் உள்ளிருந்த மாமி!

கோவிலுக்கு எதிரே, ஓரமான பகுதியில் கார் நிறுத்தப்பட்டது.

மூவரும் இறங்கிக்கொண்டனர். ரவிப்பிரகாஷ் அந்தக் காலை வேளையில் அண்ணாந்து கோபுரத்தைப் பார்த்து சற்றே பரவசம் அடைந்தார்.



"வழியில கார் 'பிரேக் டவுன்' ஆகாம இருந்திருந்தா, இந்த நேரம் திரும்பிப் போயிருப்போம். ஆனா, நமக்கு காலையிலதான் தரிசனம்னு இறைவன் முன்னமே எழுதிட்டார் போல." என்றபடியே மாமி முன்னால் நடந்தாள்.

சந்நதிக்குள் குருக்கள் விளக்குப் போடும் பணியில் தீவிரமாக இருந்தார்.

காலை வேளையில் மாமியை கோவிலில் பார்த்ததும் ஆச்சரியப்பட்டார்.

"என்ன மாமி... ஊருக்கு நீங்க போகவே இல்லையா?" என்றுதான் ஆரம்பித்தார்.

"போனவளை சாமி கனவுல வந்து திரும்ப கூப்பிட்டா... எப்படி வராம இருக்க முடியும்?" என்றாள்.

"சொப்பனமா... அப்படி என்ன சொப்பனம்...?"

"அதைச் சொல்லக்கூடாது. சொன்னா பலிக்காதுன்னுவாங்க!"

– மாமி பதில் அளித்தவாறே, நந்தி வீற்றிருக்கும் கல் மண்டபம் நோக்கிச் சென்றாள்.

நந்தி சிலையை ஆழ்ந்து பார்த்தாள்.

கூடவே ரவிப்பிரகாஷும், நந்தனாவும்.

மாமியின் கண்களில் கண்ணீர் பெருக ஆரம்பித்தது.

அதை ஆச்சரியமாக கவனித்தனர் இருவரும். மாமி வெளிப்படையாகவே பேசினாள்.

"நந்திசா... முதல் தடவை வந்து பிரார்த்தனை செய்தப்போ, அதை அப்படியே ஈடேத்தி வெச்சே. இரண்டாவது தடவை கைவிட்டுட்டியே...! நந்தனாவுக்காக நான் கேட்கக் கூடாதா...! இவளுக்கு ஒரு புருஷனைக் கேட்டது தப்பா...?" என்றாள்.

நந்தனா அதைக் கேட்டு சற்று நெளிவுடன், ரவிப்பிரகாஷைப் பார்த்தாள்.

"நந்தனா... இவங்க என்ன சொல்றாங்க...?"

அவளை சற்றுத் தள்ளி அழைத்துச் சென்று நிறுத்தி

கேட்டான்.

நடந்ததை ஒன்றுவிடாமல் கூறினாள்.

"கடவுளே... இங்கே நந்தி காதுல சொல்லி வேண்டிக்கறது அப்படியே நடக்குமா?"

"ஆமா... நம்புங்க! அந்த மும்பை தாதா, என்னை என்ன பாடுபடுத்தினான் தெரியுமா? சாமிதான் காப்பாத்தினார்."

"அப்புறம்... மாமி எதுக்கு புலம்பறாங்க?"

"மாமிக்கு ஒரே விருப்பம். எனக்கு நல்லபடியா கல்யாணம்மாகி, இந்த சினிமாத் துறையை விட்டு விலகணும்கறது. ஆனா, அதுக்குப் பதிலா திரும்பவும் கொலை மிரட்டல் வந்தா, மனசு வருத்தப்படாதா?"

– அவள் கேட்ட தொனியில் ஒரு ஆழமான துக்கம்.

ரவிப்பிரகாஷை அந்தக் கேள்வி குடைந்தது.

அப்போது, 'கொலை மிரட்டல் என்பது போலீசின் நாடகம்' என்று சொல்லிடலாமா என்று தோன்றியது.

'எதற்காக இந்த நாடகம்?' என்று கேட்டால்... அதில் நந்தனாவை ஒரு சர்வதேச குற்றவாளியுடன் இணைத்து யோசித்தது வெளியில் தெரியவரும். அது அவளை மேலும் காயப்படுத்தும் என்றும் யோசித்தார்.

பின் அந்த நொடியே அவள் எதிரில் தன் செல்போனை எடுத்து திரையில், 'மெசேஜ்' பகுதிக்குச் சென்றார்.

அதில் முன் ஏற்பாடாக, 'கொலை மிரட்டல் மனிதன் பிடிபட்டான்' என்கிற செய்தி பதிவாகி இருந்தது. அதை அப்போதுதான் பார்ப்பது போல பார்த்து, 'வாவ்' என்று எகிறிக் குதித்தார்.

"என்ன சார்...?"

நந்தனா ஆவலுடன் கேட்டாள்.

"மிஸ் நந்தனா, நீங்க ரொம்ப பாக்கியசாலி. உங்களுக்குக் கொலை மிரட்டல் விடுத்த நபரை, எங்க ஆட்கள் பிடிச்சாச்சு. பாருங்க 'எஸ்.எம்.எஸ்.'ல செய்தி வந்திருக்கு..." என்று அவளிடம்



தன் செல்போனைக் காட்டினார்.

அதைப் பார்த்துவிட்டு, பதிலுக்கு அவரை ஒரு தினுசாகப் பார்த்தாள்.

"என்ன மிஸ் நந்தனா... உங்க முகத்துல ஒரு சந்தோஷத்தையே பார்க்க முடியலியே...?"

"எப்படி முடியும்... இது ஒரு 'செட்டப்'. உண்மையில நீங்க என்கூட இருக்கறது என்னைப் பாதுகாக்க இல்லை. என்னைப் பத்தின ஏதோ ஒரு உண்மையைத் தெரிஞ்சிக்க...! அதை நீங்க தெரிஞ்சிக்கிட்டதும் எனக்குத் தெரியும்."

–அவள் அப்படிக் கூறவும் தூக்கிவாரிப் போட்டது.

"மிஸ் நந்தனா..."

"எப்படின்னு கேக்கிறீங்களா?"

அவனிடம் ஆமோதிப்பு பாவனை...

"கமிஷனரோடு பேசும்போது, நான் தற்செயலா அந்தப் பக்கம் வந்தேன். நீங்க என்னைக் கவனிக்கல. நானும் அமைதியா உங்க பேச்சைக் கேட்டுட்டு நகர்ந்துட்டேன்."

ரவிப்பிரகாஷ் முகம், அவள் பதிலால் புகை பரவியது போல் இருண்டது.

"முதல்ல அதிர்ச்சியா இருந்தது. பிறகு, நீங்க உங்க கடமையைச் செய்யறதா நினைச்சு சமாதானப்பட்டுகிட்டேன். என் மனம் வருத்தப்படக்கூடாதுன்னு நீங்க இவ்வளவு தூரம் வந்து இப்படி செல்போன் 'மெசேஜ்' எல்லாம் காட்டி.... உண்மையில உங்களை நான் பாராட்டுறதுதான் சரி."

– அவள் ஒரு புதிய பரிமாணத்தை அவர் வரையில் காட்டி நின்றாள்.

மாமி, நந்தீஸ்வரரை வலம் வரத் தொடங்கி இருந்தாள்.

அதைப் பார்த்தாள்.

"பாவம் மாமி...! இன்னும் உண்மை தெரியாது. அவங்க முக்தியைவிட, என் கல்யாணம் பெருசாயிடிச்சு. எவ்வளவு பெரிய மனசு இருக்கணும் அவங்களுக்கு...?" என்று அவரிடமே

கேட்டாள்.

சட்டென்று ரவிப்பிரகாஷிடம் ஒரு தீர்மானம்.

விறுவிறுவென்று மாமியை நெருங்கி, கூடவே சேர்ந்து பிரதட்சணம் செய்தவன்–

"மாமி... என்னை மன்னிச்சுடுங்க..." என்றான்

"எதுக்குப்பா நான் உன்னை மன்னிக்கணும்...?"

"அதை பிறகு சொல்றேன். இப்ப நான் உங்களை ஒண்ணு கேட்கலாமா?"

"என்னப்பா...?"

"இந்தச் சூழ்நிலையில நீங்கதான் எனக்கு நந்தி சாமி..."

"சாமிக்கு சமமா நானா...? தப்பு... தப்பு..."

"உங்க மனசுல நான் கடவுளைப் பாக்கறதால அப்படி சொன்னேன்."

"சரி... என்ன கேக்கப் போறே?"

"எனக்கும் கல்யாணம் நடக்கணும்."

"அதுக்கு நான் என்ன பண்ணணும்?"

"நான் விரும்பற பொண்ணு எனக்குக் கிடைக்கணும்."

"ஓ... காதலா?"

"ஆமா மாமி... நீங்க வாழ்த்தினா அந்தப் பொண்ணே எனக்குக் கிடைப்பா. உங்க வேண்டுதலும் நிறைவேறும்."

மாமி உடனே பிரதட்சணத்தை நிறுத்திவிட்டு, அவரைப் பார்த்தாள். அவரும் மலங்க மலங்க மாமியைப் பார்த்தவாறே நின்றார்.

"என்ன மாமி, அப்படி பாக்கறேள். நான் விரும்பற பொண்ணு கிடைக்கணும்னு வாழ்த்துங்கோ..."

"ஆமா... யார் அந்தப் பொண்ணு?"

"முதல்ல வாழ்த்துங்க. பிறகு சொல்றேன்."

"என் வாழ்த்து ஒரு பெரிய விஷயமா? நீ ஆளைச் சொல்லு."

"அது வந்து..."



"அது சரி. நீ விரும்பற பொண்ணு யாருன்னு எனக்குத் தெரிஞ்சு என்ன ஆகப் போறது? நீ விரும்பறது மனப்பூர்வமான்னா உன் ஆசைப்படியே அவளே உனக்குக் கிடைக்கட்டும்."

மாமி வாழ்த்திவிட்டு திரும்பவும், பிரதட்சணம் செய்யத் தொடங்கினாள்.

"சந்தோஷம் மாமி... நான் விரும்பற பொண்ணு பேரை இந்த நந்தி சாமி காதுல இப்ப பலமா சொல்லப்போறேன். நீங்களும் கேட்டுக்குங்க. இவர்கிட்ட ஒருத்தர் முதன் முதலா கேட்கறதை கட்டாயம் நிறைவேத்திக் கொடுத்துடுவாரே... ஆகையால என் விருப்பம் நிச்சயம் நிறைவேறும். அதே நேரம் உங்க விருப்பமும் ஈடேறப் போறதையும் பார்க்கப் போறீங்க..." என்ற ரவிபிரகாஷ், நந்திகேஸ்வரர் காதருகே சென்று, "நந்தனாவை நான் மனப்பூர்வமா திருமணம் செய்துக்க விரும்பறேன்" என்று இருவர் காதிலும் விழும்படி கூறினார்.

இதைக் கேட்ட மாமியின் கண்கள் இரண்டிலும் சரசரவென்று கண்ணீர் திரண்டுவிட்டது.

நந்தனாவும் கிட்டத் தட்ட ஸ்தம்பித்துவிட்டாள்.

சாமி தரிசனம் முடிந்து– காரில் திரும்பும்போது, மூவரிடமும் அப்படியொரு மவுனம்... நிம்மதி.

அதே வேளை– ஒரு இடத்தில் ஆற்றுப் பாலம் ஒன்றின் முன் திரளாக கூட்டத்தைப் பார்த்துவிட்டு, காரை ஓரம் கட்டினர். கீழே இறங்கிய ரவிப்பிரகாஷுக்குத் தூக்கி வாரிப்போட்டது.

சிவப்பிரகாசம் ஓட்டிச் சென்றிருந்த கார், அருகிலுள்ள மரத்தில் மோதி விபத்துக்குள்ளாகி– அவர் ஒரு பக்கமும், வரதநம்பி வேறொரு பக்கமும் சிதறிக் கிடந்தனர்.

கூட்டத்தில் ஒருவர் சொன்னார்.

"திபுதிபுன்னு மாடுங்க குறுக்க வந்தது. அதனால வண்டி நிலைதடுமாறி இப்படி விபத்தாயிடிச்சு."

ரவிப்பிரகாஷ் வேகமாக செயல்பட்டார்.

சிவப்பிரகாசம், வரதநம்பி இருவரிடன் உடலிலும் உயிர்த் துடிப்பு இருந்தது.

அடுத்த நிமிடமே அவர்கள், நந்தனாவின் காருக்குள் ஏத்தப்பட்டனர்.

மாமிக்கு இடமில்லாமல் போனதால், இறங்கிக்கொண்டாள். அவளுக்குத் துணையாக நந்தனாவும் இறங்கிவிட்டாள்.

"தம்பி... இவாளை ஆஸ்பத்திரியில சேர்த்து காப்பாத்தற வழியப் பாருங்க. நாங்க எப்படியாவது வந்து சேர்ந்துக்கறோம்" என்றாள் மாமி.

அந்த நேரத்தில் ரவிப்பிரகாஷுக்கும் வேறு வழி இருப்பதாகத் தெரியவில்லை.

கார் அசுர கதியில் கிளம்பியது.

நடுவழியில் நின்ற நந்தனாவைச் சுற்றிலும் கூட்டம் வேறு சேர ஆரம்பித்தது. நல்லவேளையாக விடைதாங்கிக்குப் போகும் 'மினி பஸ்' வரவும்– மாமியும், நந்தனாவும் அதில் ஏறி– திரும்பவும் விடைதாங்கிக்கே புறப்பட்டனர்.

கண்டக்டர், நந்தனாவை ஒரு தேவதையைப் போலத்தான் பார்த்தான். 'ஆட்டோகிராப்' கூட வாங்கிக்கொண்டான்.

## கோவில்!

நாகநாதன்பிள்ளை கெந்திக் கெந்தி நடக்க– அவருக்கு உறுதுணையாக லட்சுமி.

சிவப்பிரகாசம், வரதநம்பிக்கு நடந்த விபத்து பற்றி எதுவும் தெரிந்திருக்கவில்லை. விடிந்து பார்த்தபோது அவர்கள் இல்லை.

காத்திருந்து பார்த்துவிட்டு, 'சரி, நாமளாவது கோவிலுக்குப் போவோம்' என்று லட்சுமி, கணவரை கைத்தாங்கலாக அழைத்து வந்துவிட்டாள்.

அந்தக் காலோடும், கையோடும் நந்திகேஸ்வரரை இருவரும் சுற்றுவதைப் பார்க்கவே பரிதாபமாக இருந்தது.

சுந்தர குருக்கள் வந்து பார்த்துவிட்டு வருத்தத்தோடு திரும்பிப் போனார்.,

வெளியே கோவில் வாசலியேயே, மினி பஸ் நிற்கவும்... நந்தனாவும், மாமியும் இறங்கிக்கொண்டனர்.





"நந்தா... நாம விட்டாலும், சாமி நம்மைவிடத் தயாரில்லை. வா. உச்சிக்கால தரிசனம் பண்ணிட்டு வருவோம். அதுக்குள்ள அந்த போலீஸ் அதிகாரியும் உனக்காக நிச்சயம் ஏதாவது ஒரு காரை அனுப்பி வைப்பார் பாரு..." என்றாள் மாமி.

நந்தனா மறுப்போதும் கூறவில்லை.

"மாமி... ஒரு வகையில இந்தக் கோவில்தான் என் வாழ்க்கையையே மாத்தி இருக்கு" என்றபடியே உள்ளே நுழைந்தாள்.

மாமிக்கு நாகநாதன் பிள்ளையின் மிருதங்கம் என்றால் கொள்ளைப் பிரியம். மதியம் வானொலியில் அவர் கச்சேரியைத் தவறாமல் கேட்பாள்.

அவரையே நேரில் பார்த்தால்... அவளுக்கு எப்படி இருக்கும்? அதே நேரம்– வாதம் வந்த காலோடு கெந்திக் கெந்தி அவர் நடப்பதைப் பார்க்கவும் அதிர்ச்சியும் ஏற்பட்டது.

அவர் அருகே ஓடினாள்.

"இவர் மிருதங்க வித்வான் நாகநாதன் பிள்ளைதானே?"

லட்சுமி, அதற்கு ஆமோதிப்பு தந்தாள்.

"எப்படி ஆச்சு ?"

"எல்லாம் தலையெழுத்து..."

"தலை எழுத்தாவது, கால் எழுத்தாவது...? கையில வெண்ணெயை வெச்சுட்டு இப்படியா நெய்க்கு அலைவேள்?"

"என்ன சொல்றீங்க?"

"சாமி காதுல உங்க குறையைச் சொல்லுங்க. அப்புறம் பாருங்க."

"காதுல வேற சொல்லணுமா...? அதான் அவர் சந்நதியைச் சுத்தி வரோமே...!"

" நான் சொல்றதை கொஞ்சம் கேளுங்கோ. இதுதான் ஐதீகம். இங்கே நீங்க சொல்றது, அந்த கைலாசத்துக்கே எதிரொலிக்கும்."



"எப்படியோ... இவர் நல்லபடியா ஆனா போதும். இவரை கூட்டிட்டு வந்த சிவப்பிரகாசத்தையும், வரதம்பி ஐயாவையும்தான் காணலை."

"என்னது... அவங்கதான் உங்களை இங்கே கூட்டிட்டு வந்தவங்களா?"

"ஆமா... நீங்க ஏன் பதறுறீங்க?"

"பதறாம என்ன பண்ண...? அவங்க ரெண்டு பேரும் ஆஸ்பத்திரியில உயிருக்கு போராடிட்டு இருக்காங்க."

"ஈஸ்வரா... என்ன சொல்றீங்க?"

"நாங்க வழியில பார்த்து, எங்க கார்லதான் அவங்களை ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைச்சோம். அவங்களுக்கு 'ஆக்சிடெண்ட்' ஆயிடுச்சு..."

"அடக் கொடுமையே... ரெண்டு பேரும் எங்க போனாங்க...? எதனால இப்படி ஆச்சு? வீட்ல எங்களோடதான இருந்தாங்க?"

–லட்சுமி அங்கலாய்க்க – நாகநாதன், கோணிக் கொண்ட வாயோடு அப்படியே ஒரு ஓரமாக உட்கார்ந்துவிட்டார்.

அவர் வரையில் அடி மேல் அடி விழுவதாகத்தான் தோன்றியது.

இடையில் நந்தனாவின் செல்போன் சிணுங்கியது.

ரவிப்பிரகாஷ்தான் பேசினார்.

"நந்தனா... அவங்க ரெண்டு பேரையும் ஆஸ்பத்திரியில சேர்த்துட்டேன். உங்களை 'பிக்அப்' பண்ண டிரைவர் வந்துகிட்டிருக்கான்."

"அது சரி... அவங்க ரெண்டு பேரும் பொழைச்சிடுவாங்களா?"

"அதைச் சொல்ல முடியாது. ஆமா, நீங்க ரெண்டு பேரும் இப்ப எங்கே இருக்கீங்க?"

"கோவில்ல... நந்திகேஸ்வரர் முன்னாலதான்!"

"ஓ... இங்க அந்த வயசானவர்கூட, அந்த சாமி பேரைத்தான்

சொல்லி முனகிக்கிட்டு இருக்கார். ஒருவேளை... அந்த சாமி மனசு வெச்சா இவங்களைப் பிழைக்க வைக்கலாம். எதுக்கும் பிரார்த்தனை செய்துக்கோ..."

– ரவிபிரகாஷ் சொன்னதை நந்தனா அப்படியே மாமியிடமும் சொன்னாள்.

அது லட்சுமி காதிலும் விழுந்தது. விறுவிறுவென்று நந்தியின் காதருகே சென்றவள்–

"சாமி, அவங்களைக் காப்பாத்து... உயிர்ப் பிச்சைக் கொடு" என்றாள்.

அவர்கள் முன் நாகநாதன் பிள்ளையின் வாதத் தவிப்பு, இரண்டாம் பட்சமாகிவிட்டது.

அவள் அப்படிப் பிரார்த்தித்துக்கொண்டது நந்தனாவுக்கே கூட இன்ப அதிர்ச்சியாகத்தான் இருந்தது. அந்த நொடியே ஒரு அதிசயமும் அங்கே அரங்கேறத் தொடங்கியது.

ஓரமாக ஒதுங்கி அமர்ந்திருந்த நாகநாதன் பிள்ளையின் மேல், ஒரு பல்லி– கல்தூணில் இருந்து தவறி விழுந்தது.

அவரும் பதைப்போடு கைகளை உதறியதில்–

இழுத்துக்கொண்ட கையும், காலும் அந்த நொடியே நேரானது. கையை ஊன்றிக்கொண்டு எழுந்த பிள்ளையும், நம்ப முடியாமல் கை– காலை பார்த்து லேசாக குதிக்கவெல்லாம் செய்தார்.

அதைப் பார்த்த லட்சுமியிடம் ஆனந்தச் சிரிப்பு.

"சாமி... ஈ... ஈ..." என்று அப்படியே மண்டியிட்டு விழுந்தாள்.

பிள்ளையும் கைகளைக் கூப்பினார்.

கோவிலிலேயே ஒரு மிருதங்கம் இருந்தது.

அதை எடுத்து வரச்சொல்லி, ஆனந்தமாய் நந்திகேஸ்வரர் முன் அமர்ந்து உற்சாகமாய் வாசிக்கவும் செய்தார்.

மயக்க வைக்கும் அவரின் இசையைக் கேட்டு, கோவிலில் கூட்டம் கூடிவிட்டது.

இடையிடையே சிவப்பிரகாசம்– வரதநம்பி பற்றியும் முன்னேற்றமான தகவல்களும் வந்தன. அவர்கள் அபாய கட்டத்தைக் கடந்துவிட்ட செய்தி வந்தபோது, நந்தனாவின் காரும், கோவில் வாசலை அடைந்தது.

பிள்ளையையும், லட்சுமியையும் நந்தனா தனது காரிலேயே அழைத்துக்கொண்டு புறப்பட்டாள்.

அவளுக்கு எல்லாமே ஒரு கனவு போல இருக்கிறது!

நந்தனா– ரவிப்பிரகாஷ் திருமணம் வெகுவிமர்சையாக நடந்தேறியது.

வரவேற்பு நிகழ்ச்சியில் நாகநாதன் பிள்ளையின் மிருதங்க கச்சேரி களை கட்டியது.

வரதநம்பியும், சிவப்பிரகாசமும்கூட கல்யாணத்திற்கு வந்திருந்தனர்.

சிவப்பிரகாசத்தை வரதநம்பிதான் கைத்தாங்கலாக அழைத்து வந்தார்.

பாவம்... சிவப்பிரகாசம்! எதனாலோ பேச முடியவில்லை. காலப்போக்கில் பேச்சு வரலாம், வராமலும் போகலாம் என்று டாக்டர்கள் கூறிவிட்டனர்.

ஆனால், அது எதனால் என்பது வரத நம்பிக்கு மட்டும்தானே தெரியும்?

நாகநாதன் பிள்ளையின் கச்சேரியைப் பார்க்கும் சிவப்பிரகாசம், மனம் கசிந்து அழுகிறார். வரதநம்பி தடுக்கவில்லை.

அழட்டும் என்று விட்டுவிட்டார்.

அதுதானே பிராயச்சித்தம்!

**(முற்றும்)**

ராணி சிண்டிகேட் சார்பில் வெளியிட்டவர்,
ஆசிரியர்: ஏ.பாஸ்கரன், அச்சிட்டவர்: சி.கல்யாணசுந்தரம்.
ராணி அச்சகம், 86, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை-600 007.
தொலைபேசி: 25324771 FAX: 044-26426884
E-MAIL: raniweekly@vsnl.net